முன்னுரை

அப்போஸ்தலனாகிய யாக்கோபு எழுதின நிருபம் பொதுவான நிருபங்களில் ஒன்றாகும். இந்த நிருபத்தின் ஆசிரியரான யாக்கோபு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சகோதரர். ஆனாலும் யாக்கோபு தன்னை இயேசுகிறிஸ்துவின் சகோதரர் என்று சொல்லி பெருமைப்படவில்லை. தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் யாக்கோபு தன்னை ஒரு ஊழியக்காரராகவே வெளிப்படுத்துகிறார் (யாக் 1:1).

வேதாகமத்தில் செபதேயுக்கு யாக்கோபு என்னும் பெயரில் ஒரு குமாரன் இருக்கிறார். இந்த யாக்கோபு இந்த நிருபத்தை எழுதவில்லை. ஏரோது ராஜா செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபை கொன்றுபோட்டார் (அப் 12).

இந்த நிருபம் ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட சபைக்கோ எழுதப்படவில்லை. ஆகையினால் இந்த நிருபத்தை வேதபண்டிதர்கள் பொதுவான நிருபம் என்று அழைக்கிறார்கள். இந்த நிருபம் சுற்றறிக்கை நிருபம் போல எல்லா சபைகளுக்கும் அனுப்பப்பட்டு, அங்கு வாசிக்கப்பட்டது.

யாக்கோபு இந்த நிருபத்தை எந்தக் காலத்தில் எழுதினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில் ஏராளமான விசுவாசிகள் தங்கள் விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் சென்றிருந்தார்கள். அவர்களுடைய சுபாவங்களில் பக்திவிருத்திக்கேதுவான காரியங்கள் காணப்படவில்லை. அவர்களைக் கடிந்து கொள்வதற்காகவும், அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுவதற்காகவும் யாக்கோபு இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார்.

யூததேசத்தார் வரப்போகிற நியாயத் தீர்ப்பைக் குறித்து கவலைப் படாமலிருக்கிறார்கள். தங்களுக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்பதையே மறந்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அனலில்லாமல் குளிராயிருக்கிறார்கள். ஆவிக்குரிய உறக்கத்திலிருக்கிறார்கள். இவர்களை ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டு, வரப்போகிற நியாயத்தீர்ப்பை பற்றி யாக்கோபு அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

ஒவ்வொரு விசுவாசிக்கும் கர்த்தர் ஆவிக்குரிய கடமைகளை வைத்திருக்கிறார். நம்முடைய கடமைகளை நாம் பயபக்தியாய் நிறைவேற்றவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமக்கு பாடுகளும், உபத்திரவங்களும் வந்தாலும், விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப் போய்விடக் கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மறுதலித்துவிடக்கூடாது. விசுவாசத்தோடு நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

1 அதிகாரம்

யாக்கோபு விசுவாசிகளுக்குத் தன்னுடைய பொதுவான வாழ்த்துதலைச் சொல்லுகிறார். சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி இந்த நிருபத்தை எழுதுகிறார் (யாக் 1:1). விசுவாசிகளாகிய நமக்கு பலவிதமான சோதனைகள் வரும். விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும். ஆகையினால் சோதனைகளைப் பார்த்து சோர்ந்து போய்விடக் கூடாது. அது நமக்கு ஆசீர்வாதமானது என்று நினைத்து சந்தோஷப்படவேண்டும் (யாக் 2:12).

எல்லா சோதனைகளையும் கர்த்தரே நமக்குத் தருகிறார் என்று கர்த்தர் மீது அதிருப்தியாயிருக்கக் கூடாது. சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லக் கூடாது. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. அவர் நமக்கு நன்மையான ஈவுகளைத் தருகிறவர் (யாக் 1:13-18). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சத்திய வசனத்தைக் கேட்கிறதற்குத் தீவிரமாய் இருக்க வேண்டும். வசனத்தைத் தியானம் பண்ண வேண்டும். வேதவசனத்தில் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும் (யாக் 1:19-27).

ஊழியக்காரன்
யாக் 1:1

யாக் 1:1. தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக் காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:

யாக்கோபு இந்த நிருபத்தில் தன்னைப் பற்றி எழுதும்போது, "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு" என்று சொல்லுகிறார். இவர் இயேசுகிறிஸ்துவின் சகோதரர். ஆனாலும் யாக்கோபு தன்னை இயேசுவின் சகோதரர் என்று சொல்லி பெருமைப்படவில்லை. யாக்கோபு தன்னுடைய மாம்சத்தில், தன்னை இயேசுவின் உறவினர் என்று சொல்லி பெருமைப்படுவதற்குப் பதிலாக, தன்னுடைய ஆவியில், கிறிஸ்துவுக்கு ஊழியம்செய்வதையே மேன்மையானதாகக் கருதுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், அவருக்கு ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும். இந்த உலகத்தில் நாம் என்ன தொழில் செய்தாலும், என்ன வேலை செய்தாலும், கர்த்தருக்கு ஊழியம் செய்வதே பாக்கியமானது. உலகப்பிரகாரமான ஆஸ்திகள் நமக்கு ஏராளமாயிருந்தாலும், கிறிஸ்துவினிடத்தில் நாம் பெற்றுக்கொள்கிற கிருபையே நமக்கு மெய்யான ஐசுவரியம். நாம் கிறிஸ்துவின் வேலைக்காரராகயிருந்தால் மாத்திரமே நம்மால் தேவனுக்கு ஊழியம் செய்யமுடியும்.

யாக்கோபு இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறார். சிதறியிருக்கிறவர்கள் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் பாதுகாப்பாகயிருக்கிறார்கள். பல்வேறு தேசங்களிலே சிதறிப்போய் குடியிருக்கிறார்கள். தாங்கள் இருக்கும் தேசங்களிலெல்லாம் தேவனுடைய தெய்வீக வெளிச்சத்தை அங்குள்ள ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளில் பலர் தேவனுடைய கோபாக்கினையினால் சிதறிப் போயிருக்கிறார்கள். துன்மார்க்கருக்கு துன்பம் வரும்போது, அவர்களோடு சேர்ந்து நல்லவர்களும் பாடுகளை அனுபவிக்கிறார்கள். துன்மார்க்கருடைய உற்றார் உறவினரும் அவர்கள் நிமித்தமாய் வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

சிதறிப் போயிருக்கிற யூதர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்து, தங்கள் இருதயத்தில் அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் விசுவாசிகளுக்கு உபத்திரவம் உண்டாயிற்று. இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் தேவனால் தெரிந்து தெடுக்கப்பட்ட விசேஷித்த ஜனங்கள். இவர்கள்கூட பல தேசங்களிலும் சிதறியிருக்கிற சூழ்நிலை உண்டாயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகள் பல தேசங்களில் சிதறியிருந்தாலும், தேவன் அவர்களை அங்கு பாதுகாக்கிறார். அவர்களை அங்கு பராமரிக்கிறார். அவர்களுடைய நன்மைகளை விசாரிக்க தம்முடைய ஊழியக்காரர்களை அங்கு அனுப்புகிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக, யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி இந்த நிருபத்தை எழுதுகிறார். இந்த நிருபத்தை யாக்கோபு எழுதினாலும், இது மெய்யாகவே தேவனிடத்திலிருந்து அவர்களுக்கு வந்திருக்கிற நிருபமாகும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் சில சமயங்களில் சிதறிப் போயிருக்கலாம். நம்முடைய குடும்பத்தை விட்டும், உற்றார் உறவினர்களை விட்டும், சிநேகிதர்களை விட்டும் சிதறியிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவன் நம்மை மறந்துவிட்டாரோ என்றோ அல்லது அவர் நம்மை கைவிட்டுவிட்டாரோ என்றோ, அல்லது அவர் நம்மைப் புறக்கணித்து விட்டாரோ என்றோ நினைத்து சோர்வடையத் தேவையில்லை. தேவன் நம்மை ஒரு போதும் கைவிடுகிறவரல்ல. நாம் சிதறியிருந்தாலும் நமக்கு ஆறுதல் சொல்ல தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை நம் மத்தியிலே அனுப்புவார். தேவன் நம்முடைய பாடுகளிலும், வேதனைகளிலும் நம்மை நினைவு கூருகிறார். நாம் சிதறிப் போயிருந்தாலும் தேவனே நமக்கு பாதுகாப்பாகவும், ஆறுதலாகவும் இருக்கிறார்.

யூதர்கள் சிதறிப்போயிருந்தாலும் யாக்கோபு அவர்களை மறந்துவிடவில்லை. அவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் சிதறிப் போயிருந்தாலும் அவர்கள் ஆறுதல் பெறவேண்டும் என்பது யாக்கோபின் விருப்பம்.

சோதனைகள்
யாக் 1 : 2-4

யாக் 1:2. என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது,

யாக் 1:3. உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

யாக் 1:4. நீங்கள் ஒன்றிலும் குறையுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பலவிதமான சோதனைகள் வருகிறது. நமக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டாகிறது. கர்த்தரை நாம் உண்மையாய்ப் பின்பற்றி நடக்கும் போது நமக்கு உபத்திரவமுண்டாகிறது. பாடுகள் வரும்போது நாம் வேதனையடைகிறோம். வருத்தப்படுகிறோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாடுகளையும் வேதனைகளையும் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் நல்லவர்களுக்கும் சோதனைகள் வருகிறது. நாம் சோதனைகளை உருவாக்குவதில்லை. வேண்டுமென்றே நாம் சோதனைகளில் சிக்கிக்கொள்வதுமில்லை. நாம் பாவம் செய்யாவிட்டாலும் பல சமயங்களில் நமக்கு சோதனை வந்துவிடுகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் இப்படிப்பட்ட சோதனைகளில் அகப்படும்போது, சோர்ந்து போகாமல் தைரியமாயிருக்கவேண்டும்.

நமக்கு பலவித சோதனைகள் வரும்போது நாம் துக்கத்தில் மூழ்கிவிடக்கூடாது. நம்முடைய ஆத்துமா கவலையினால் முறிந்துபோய்விடக்கூடாது. சோதனை வரும்போது நாம் அமைதியாக இருக்கவேண்டுமென்று உலகப்பிரகாரமான தத்துவ ஞானிகள் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நிருபத்தின் ஆசிரியரான யாக்கோபோ, நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, சந்தோஷப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்.

நாம் அனுபவிக்கிற சோதனைகள் நம்முடைய விசுவாசத்தை பரீட்சை செய்து பார்க்கும். விசுவாசத்தின் பரீட்சையானது நமக்குள் பொறுமையை உண்டாக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பொறுமை வேண்டும். பொறுமையில்லாமல் கர்த்தர் நமக்கு நியமித்து வைத்திருக்கிற ஓட்டத்தில் ஓடமுடியாது.

நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரையே நோக்கிப்பார்க்கவேண்டும். அவரையே சார்ந்து ஜீவிக்கவேண்டும். நாம் சந்தோஷமாக இருந்தாலும், வருத்தத்திலிருந்தாலும் இயேசுகிறிஸ்துவே நம்முடைய கர்த்தராகயிருக்கிறார். நாம் சோதிக்கப்படும் போது கர்த்தரைப்பற்றும் விசுவாசத்திலிருந்து விலகிப் போய்விடக் கூடாது. நம்முடைய விசுவாசம் பரீட்சை பண்ணப்படும்போது, அதனால் நமக்குள் பொறுமை உண்டாகும். அதை நினைத்து நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடக் கூடாது (யாக் 1:3).

நாம் கர்த்தரிடத்தில் எதை கேட்டாலும் அதை விசுவாசத்தோடு கேட்கவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் கேட்பதை, அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வோம் என்று எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும். சந்தேகப்படுகிறவர்கள் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (யாக் 1:6).

விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குகிறது. நாம் ஒரு கிருபையில் சோதிக்கப்படும்போது, நமக்கு மற்றொரு கிருபை உண்டாகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் எப்போதுமே பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நமக்கு விரோதமாக செய்யப்படும் தீங்குகளை பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். பொறுமை நமக்குள் பூரணகிரியை நடப்பிக்க வேண்டும்.

ஆதித்திருச்சபை காலத்தில் ஸ்தோயிக்கர்கள் என்னும் ஒரு பிரிவினர் இருந்தார்கள். மனுஷன் பாடுகளை அனுபவிக்கவே பிறந்திருக்கிறான் என்பது தான் இவர்களுடைய உபதேசம். மனுஷனுக்கு சந்தோஷம் இல்லையென்றும், அவன் எப்போதுமே துக்கப்பட வேண்டியவன் தான் என்றும் ஸ்தோயிக்கர்கள் உபதேசம் பண்ணினார்கள். நம்முடைய பாடுகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும், கண்ணீர்களிலிருந்தும் நாம் விடுதலை பெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று இவர்கள் சொன்னார்கள்.

கிறிஸ்துவின் உபதேசமோ ஸ்தோயிக்கர்களின் உபதேசத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. நமக்கு சோதனைகள் உண்டு. ஆனால் நாம் சோதனையில் வருத்தப்பட வேண்டியதில்லை. சந்தோஷப்படவேண்டும். சோதனைகளை பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். வருத்தப்பட வேண்டுமென்பது ஸ்தோயிக்கரின் உபதேசம். சந்தோஷப்படவேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் உபதேசம்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு பொறுமையைத் தருகிறார். நாம் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும் போது, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற பொறுமையைப் பயன்படுத்த வேண்டும். விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும். பொறுமை துன்பநேரத்தில் அற்புதம் செய்யும். அது நம்முடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பொறுமையை பூரணகிரியை செய்ய அனுமதிக்கவேண்டும்.

நாம் ஒன்றிலும் குறைவில்லாதவர்களாக இருக்க வேண்டும் என்றும், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். தேவன் நியமித்திருக்கிற பாடுகள் மாத்திரமே நமக்கு வரும். கர்த்தர் அனுமதித்தால் மாத்திரமே நமக்கு வேதனைகளும் உபத்திரவமும் வரும். கர்த்தர் அனுமதிக்கிற பாடுகளை நாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணவேண்டும். பாடுகளில் சந்தோஷப்படும் போது பொறுமையானது பூரணகிரியையை நடப்பிக்கும். பொறுமை பூரணகிரியை செய்யும்போது, நாம் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாக இருக்கமாட்டோம். நாம் பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருப்போம்.

தேவனிடத்தில் கேட்கக்கடவன் யாக் 1 : 5-8

யாக் 1:5. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

யாக் 1:6. ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

யாக் 1:7. அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

யாக் 1:8. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சோதனைகளை சந்தோஷமாக எண்ண வேண்டும். நம்மிடத்தில் கர்த்தரைப்பற்றும் விசுவாசம் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்பாடுகளையும் வேதனைகளையும் நாம் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் விசுவாசிகளாகிய நம்மிடத்தில் இருக்க வேண்டிய நற்குணங்கள். இவற்றோடு நாம் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும்.

நாம் தேவனிடத்தில் பல காரியங்களை வேண்டிக்கொள்ளலாம். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் பிரதானமாக ஞானத்திற்காக வேண்டிக் கொள்ளவேண்டும். நமக்கு வந்திருக்கிற சோதனைகளும், பாடுகளும் நம்மைவிட்டு நீங்கவேண்டும் என்று ஜெபிக்கக்கூடாது அதற்குப் பதிலாக, இந்தப் பாடுகளையும் சோதனைகளையும் நம்முடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்குப் பயன்படுத்த தேவையான ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும்.

சோதிக்கப்படும் போது நாம் ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த ஞானம் தேவனுடைய விசேஷித்த கிருபை. இந்த ஞானத்தை எப்படி பெற்றுக்கொள்வது என்று யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறார். நம்மிடத்தில் ஞானம் குறைவாயிருக்கும் போது, கர்த்தரிடத்தில் ஞானத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். கேட்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும்.

தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக நம்முடைய தேவைகளை பணிவாக விண்ணப்பம்பண்ணி, அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்களை பயபக்தியோடு பெற்றுக் கொள்ளவேண்டும். நாம் சம்பூரணமான ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கர்த்தருடைய கிருபாசனமே பிரதான ஸ்தலம்.

ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் அவன் தேவனிடத்தில் கேட்க வேண்டும். அப்பொழுது தேவன் தம்மிடத்தில் ஞானத்தைக் கேட்கிறவனுக்கு அதை சம்பூரணமாய்க் கொடுப்பார். கர்த்தர் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவர். யாரெல்லாம் தம்மிடத்தில் கேட்கிறார்களோ அவர்களெல்லோருக்குமே கர்த்தர் ஞானத்தைச் சம்பூரணமாய்க் கொடுக்கிறார் கர்த்தர் நமக்கு ஞானத்தைக் கொடுப்பதினால் அவருடைய ஞானம் குறைந்து போய்விடுவதில்லை. அவர் சர்வஞானமுள்ளவர்.

தம்மிடத்தில் கேட்கிற ஒருவரையும் கர்த்தர் கடிந்துகொள்ளமாட்டார். தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் கொடுக்கிற ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டால்தான், அதை நம்மால் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும். நாம் கர்த்தரிடத்தில் கேட்டால், நாம் கேட்டதை கர்த்தர் நமக்குக் கொடுப்பாரோ அல்லது கொடுக்கமாட்டாரோ என்னும் சந்தேகம் நம்மிடத்தில் இருக்கக் கூடாது. அவர் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவர்.

நாம் ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருந்து, கர்த்தரிடத்தில் கேட்கும்போது, அவர் நமக்கு கொஞ்சம் போல ஞானத்தைக் கொடுத்து, அத்துடன் தாம் கொடுப்பதை நிறுத்திக் கொள்வதில்லை. கர்த்தர் சம்பூரணர். அவர் நமக்குக் கொடுக்கும் போது சம்பூரணமாய்க் கொடுக்கிறார். தாராளமாய்க் கொடுக்கிறார். நாம் வேண்டிக் கொள்வதற்கும், விண்ணப்பம் பண்ணுவதற்கும் அதிகமாய்க் கொடுக்கிறார்.

நாம் கர்த்தரிடத்தில் கேட்கும்போது அவர் நம்மை கடிந்துகொள்ளுவாரோ என்று பயப்படவேண்டிய அவசியமில்லை. நம்முடைய தேவன் தம்மிடத்தில் கேட்கிற ஒருவரையும் கடிந்துகொள்ளாதவர். நாம் எத்தனைமுறை கேட்டாலும் கர்த்தர் ஒருபோதும் நம்மைக் கடிந்து கொள்ளமாட்டார். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம். நாம் கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் அவரிடத்தில் கேட்கிறோம். கர்த்தர் தம்முடையவார்த்தையில் உண்மையுள்ளவர் (யாக் 1:5).

நாம் கர்த்தரிடத்தில் கேட்கும்போது விசுவாசத்தோடு கேட்கவேண்டும். நாம் கேட்டதை கர்த்தர் கொடுப்பாரோ அல்லது கொடுக்கமாட்டாரோ என்று எவ்வளவாகிலும் சந்தேகப்படக்கூடாது. கர்த்தருடைய வாக்குத்தத்தை நாம் விசுவாசிக்க வேண்டும். தாம் வாக்குத்தத்தம் பண்ணினதை கர்த்தர் நிறைவேற்றுவார் என்று நாம் நம்பவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் கேட்கும்போது சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கேட்க வேண்டும். ஜெபத்தில் நம்முடைய மனம் ஒருமனப்பட்டிருக்க வேண்டும். வாஞ்சையாய்க் கேட்க வேண்டும். விசுவாசமில்லாமல் சந்தேகப்பட்டு கேட்டால் நாம் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. சந்தேகப்படுகிறவர்கள் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (யாக் 1:6).

இப்படிப்பட்டவர்களிடத்திலும் விசுவாசம் இருக்கும். சில சமயங்களில் இவர்களிடத்தில் விசுவாசம் அதிகமாயிருக்கும். வேறு சில சமயங்களில் இவர்களிடத்தில் கொஞ்சம் கூட விசுவாசம் இருக்காது. கடலின் அலையைப்போல மேலும் கீழும் அலைந்து கொண்டிருப்பார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியமும் நிலையாகயிராது. சில சமயங்களில் உற்சாகமாக இருப்பார்கள். வேறு சில சமயங்களில் சோர்ந்து போவார்கள். எல்லாம் தங்களுக்கு பிரியமானபடி நடந்தால் இவர்கள் சந்தோஷப்படுவார்கள். கஷ்டம் வந்து விட்டால் வருத்தப்படுவார்கள். பதறிப் போய்விடுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தரிடத்தில் சந்தேகப்பட்டு கேட்கிற மனுஷனால் அவரிடத்திலிருந்து ஒன்றும் பெற்றுக் கொள்ள முடியாது. விசுவாசமில்லாதவர்கள் நிலையில்லாதவர்கள். இவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள தகுதியற்றவர்கள். தம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள யாருக்குத் தகுதியிருக்கிறதோ, அவர்களுக்கு மாத்திரமே கர்த்தர் அவற்றைக் கொடுப்பார். ஆகையினால் சந்தேகப்பட்டு, அவிசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் கேட்கிற மனுஷன், தான் அவரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினைக்கக்கூடாது (யாக் 1:7).

நம்முடைய விசுவாசமும் உறுதியாயிருக்க வேண்டும். நம்முடைய ஆவியும் நிலையுள்ளதாயிருக்கவேண்டும். இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலையில்லாமலிருக்கிறவர்கள் தெளிவாகப் பேசமாட்டார்கள். அவர்களுடைய பேச்சும் நிலையில்லாமலிருக்கும். அவர்களுடைய கிரியைகளும் நிலையில்லாமலிருக்கும். தாங்கள் என்ன பேசுகிறோம் என்பதும், தாங்கள் என்ன செய்கிறோம் என்பதும் அவர்களுக்கே தெரியாது. நாம் கர்த்தரிடத்தில் உறுதியான விசுவாசம் வைத்திருக்க வேண்டும். நாம் விசுவாசிக்கிறவர் இன்னாரென்பதை தெளிவாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஐசுவரியவான்
யாக் 1 : 9-11

யாக் 1:9. தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன்.

யாக் 1:10. ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்து போவான்.

யாக் 1:11. சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்.

தாழ்ந்த சகோதரனும், ஐசுவரியவானும் தங்களுடைய சந்தோஷத்தையும் ஆறுதலையும் எப்படிப்பட்ட அஸ்திபாரத்தில் கட்டியெழுப்ப வேண்டுமென்று யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறார். தாழ்ந்த சகோதரரையும் நாம் கர்த்தருக்குள் நம்முடைய உடன்சகோதரராகவே பாவிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் இப்பிரபஞ்சத்தில் ஐசுவாரியவான்களாக இருக்கலாம். சில சமயங்களில் தேவகிருபையும் உலக ஐசுவரியமும் ஒத்துப்போகாது. சிலரிடத்தில் தேவனுடைய கிருபை அதிகமாகயிருக்கும். ஆனால் அவர்களிடத்தில் உலக ஐசுவரியம் இருக்காது. இதுபோலவே உலக ஐசுவரியமுள்ளவர்கள் சிலரிடத்தில் தேவகிருபையும் இருக்காது.

தாழ்ந்த சகோதரரும், ஐசுவரியவானும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். இப்பிரபஞ்சத்திலுள்ள ஐசுவரியத்தின் அளவுக்குத்தக்கதாய் நாம் சந்தோஷப்பட வேண்டுமென்று எதிர் பார்க்கக் கூடாது. உலக ஐசுவரியத்திற்கும் கர்த்தருக்குள் நாம் சந்தோஷமாயிருப்பதற்கும் சம்பந்தமில்லை.

தாழ்ந்த சகோதரர் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவர். அது போலவே ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவர் (யாக் 1:9,10). ஐசுவரியவானாயிருக்கிறவன் தாழ்த்தப்பட்டாலும், கர்த்தருடைய கிருபையை அதிகமாய்ப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்பவேண்டும். இந்தப் பூமியில் ஐசுவரியவான்கள் தாழ்ந்து போனாலும், அவர்கள் தேவகிருபையைப் பெற்றுக் கொண்டால், பரலோகத்திலே உயர்த்தப்படுவார்கள். அவர்கள் அதை விசுவாசத்தோடு எதிர்பார்த்து இப்பிரபஞ்சத்தில் சந்தோஷப்படவேண்டும்.

இப்பிபஞ்சத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறவர்கள் தாழ்மையோடிருக்க வேண்டும். இந்த உலகத்தின் ஐசுவரியம் புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகும். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும். அப்போது அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோகும். ஐசுவரியவானும் அப்படியே தன் வழியில் வாடிப்போவான் (யாக் 1:11). சூரியனுடைய கடும் வெய்யிலுக்கு முன்பாக பசுமையான புல்லினால் எதிர்த்து நிற்கமுடியாது. புல் காய்ந்துபோகும். புல் காய்ந்துபோகும் போது அதனுடைய பூவும் அதிலிருந்து உதிர்த்துபோகும். பூ புல்லோடு சேர்ந்திருக்கும் வரையில்தான் அதன் வடிவு அழகாகயிருக்கும். பூ உதிர்ந்துபோனால், அதின் அழகான வடிவும் அழிந்துபோகும்.

கர்த்தரே நமக்கு ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். இந்த உலகத்தின் ஐசுவரியத்தைவிட கர்த்தருடைய கிருபை நமக்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது. நாம் பிரபஞ்சத்து ஐசுவரியத்தில் தரித்திரராகயிருந்தாலும், கர்த்தருடைய கிருபையில் ஐசுவரியவான்களாக இருக்க வேண்டும். நம்முடைய சுயமுயற்சியினால் நாம் ஐசுவரியவான்களாக ஆவதில்லை என்பதை நினைவுகூர்ந்து, கர்த்தருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும்.

சோதனையை சகிக்கிற மனுஷன்
யாக் 1:12

யாக் 1:12. சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

மனுஷரெல்லோருக்குமே சோதனைகள் வரும். விசுவாசிகளாகிய நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படுகிறோம். சோதனை வரும் போது சில சமயங்களில் சோர்ந்து போகிறோம். ஆனாலும் சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவானாகயிருக்கிறான். சோதிக்கப்படுகிற மனுஷன் பாக்கியவானல்ல. சோதனையைச் சகிக்கிற மனுஷனே பாக்கியவான். சோதனையினால் நம்முடைய வாழ்வு அழிந்துபோவதில்லை. வேதனை உண்டாகலாம். ஆனாலும் நாம் சோதனையைச் சகித்து, விசுவாசத்தின் பரீட்சையில் தேர்ச்சி பெறவேண்டும். சோதனையினால் நாம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள முடியும்.

தேவனுடைய நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பாடுகளும் சோதனைகளும் உபாயங்களாகயிருக்கிறது. சோதனையைச் சகிக்கிற மனுஷன் உத்தமனென்று விளங்குவான். கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைக் கொடுப்பார். சோதனையைச் சகித்து உத்தமனென்று விளங்கின மனுஷன் கர்த்தரிடமிருந்து ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வான்.

தேவனுடைய கிருபைகளே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். பொன் அக்கினியினால் சோதிக்கப்படும். அது போலவே விசுவாசிகளாகிய நாமும் சோதிக்கப்படுகிறோம். நாம் உத்தமர்களா இல்லையா என்பது சோதனையின் முடிவில் தெரியும். சோதனையை நாம் சகிப்போமென்றால், சோதனையில் வெற்றி பெறுவோம். உத்தமன் என்று விளங்குவோம். தேவன் நம்முடைய பொறுமையை அங்கீகரிப்பார். நமக்குத் தம்முடைய மேன்மையான கிருபைகளைக் கொடுப்பார்.

சோதனையைச் சகித்து உத்தமனென்று விளங்குகிற விசுவாசி மேன்மைப்படுத்தப்படுவார். அவர் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வார். நாம் சோதனையைச் சகிக்கும் போது சிலுவையைச் சுமப்போம். சோதனை நித்தியமானதல்ல. சிலுவையின் வேதனையும் நிரந்தரமானதல்ல. இவை தற்காலிகமானது. இவற்றை சகித்துக் கொண்டால் நாம் ஜீவகிரீடத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஜீவகிரீடமோ நித்தியமானது.

கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு, ஜீவகிரீடத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். நீதியாக பாடுகளை அனுபவிக்கிறவர்கள் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வார்கள். துன்மார்க்கமாக ஜீவித்து வேதனைகளை அனுபவிக்கிறவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமும் கிடைக்காது. நம்முடைய சோதனை எதனால் உண்டாயிற்று என்பதையும் நாம் தியானித்துப் பார்க்கவேண்டும்.

கர்த்தரைப் பற்றும் நம்முடைய விசுவாசத்தினிமித்தம் நாம் சோதிக்கப்படும் போது ஆசீர்வதிக்கப்படுகிறோம். தேவன் மீதுள்ள அன்பினாலும், கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலும் நாம் சோதிக்கப்படும் போது, அந்தச் சோதனையைச் சகித்துக் கொள்ள வேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் முழுமனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு இருதயத்தோடும் அன்புகூர வேண்டும். தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு மாத்திரமே கர்த்தர் ஜீவகிரீடத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். நம்முடைய இருதயங்களில் தேவனுடைய அன்பு ஆளுகை செய்யும்போது நம்முடைய சிரசுகளில் ஜீவகிரீடங்களைப் பெற்றிருப்போம்.

சோதிக்கப்படுகிற எவனும் யாக் 1:13

யாக் 1:13. சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லா திருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

மனுஷருடைய பாவங்களுக்கு தேவன் காரணமல்ல. கர்த்தரை விசுவாசிக்கிற சில விசுவாசிகள் சோதனைகளில் சிக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் செய்த தப்பிதத்தினிமித்தமாய் இவர்களுக்கு சோதனைகள் வந்திருக்கும். ஆனால் இவர்களோ தாங்கள் தேவனால் சோதிக்கப்படுவதாக சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு யாக்கோபு ஒரு ஆலோசனை சொல்லுகிறார். "சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக" என்று புத்திமதி சொல்லுகிறார்.

தேவன்மீது தேவையில்லாமல் வீண்பழி சுமத்தக்கூடாது. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் தீமையினால் சோதிக்கிறவருமல்ல. தேவன் பொல்லாங்கினால் தம்மைத்தாமே சோதித்துப் பார்க்கமாட்டார். அதே வேளையில் அவர் மற்றவர்களையும் பொல்லாங்கினால் சோதிக்கமாட்டார்.

பாவம் செய்வது மிகவும் பயங்கரமானது. நாம் பாவம் செய்துவிட்டு, அந்தப் பாவத்திற்கு தேவனே காரணம் என்று அவர்மீது குற்றம் சொல்லுவது அதிபயங்கரமானது. நம்முடைய துன்மார்க்கத்தினால் நாம் பாவம் செய்கிறோம். பாடுகளை அனுபவிக்கிறோம். இந்தப் பாவத்திற்கும், நாம் அனுபவிக்கிற பாடுகளுக்கும் தேவன் எவ்விதத்திலும் காரணமானவரல்ல. ஆகையினால் நமக்கு சோதனைகள் வரும்போது, நாம் தேவனால் சோதிக்கப்படுகிறோம் என்று சொல்லத் துணியக்கூடாது.

நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது நம்முடைய விசுவாசம் பரீட்சை பார்க்கப்படுகிறது. விசுவாசத்தின் பரீட்சையானதுபொறுமையை உண்டாக்கும். சோதனையின் முடிவில் நமக்கு பொறுமை உண்டானால் அது ஆசீர்வாதம். பொறுமைக்குப் பதிலாக கோபம், பிறர் மீது பழிசொல்லுவது, தேவையில்லாமல் மற்றவர்களைக் குற்றப்படுத்துவது ஆகிய சுபாவங்கள் உண்டாகுமானால் அது நமக்கு சாபம்.

சுயஇச்சை
யாக் 1 : 14,15

யாக் 1:14. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.

யாக் 1:15. பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.

நாம் சோதிக்கப்படுவதற்கு தேவன் காரணமானவரல்ல. நம்முடைய சோதனைக்கு நாமே காரணம். அவனவன் தன் தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, அந்த சுயஇச்சையிலே சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான் (யாக் 1:14). நம்முடைய இருதயங்களிலுள்ள தீயசிந்தனைகளே எல்லா தீமைகளுக்கும் காரணம். நாம் சோதிக்கப்படுவதற்கு நம்முடைய தீயஎண்ணங்களும், சுயஇச்சைகளும் காரணமாயிருக்கிறது.

வெடிமருந்து நம்முடைய இருதயத்திற்குள்தான் இருக்கிறது. வெடியை வெடிக்கச் செய்கிற திரி வெளியிலிருக்கலாம். அந்தத் திரியில் ஏதாவது நெருப்புப்பட்டால் வெடி உடனே வெடித்துவிடும். வெடி வெடிப்பதற்கான வெடி மருந்து வெளியிலிருப்பதில்லை. அது நம்முடைய இருதயத்திற்குள் தான் இருக்கிறது. நம்முடைய இருதயத்தில் வெடிமருந்து இல்லையென்றால், திரியில் எவ்வளவு நெருப்பைப் பற்றவைத்தாலும் வெடி வெடிக்கப்போவதில்லை.

நாம் செய்கிற பாவம் ஒருபோதும் அமைதியாயிருப்பதில்லை. அது எப்போதும் ஏதாவது செய்துகொண்டேயிருக்கும். முதலாவது நம்முடைய சுயஇச்சையானது கர்ப்பம் தரிக்கும். அதன் பின்பு அது பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும். பூரணமான பாவம் மரணத்தைப் பிறப்பிக்கும். நமக்குள் பாவம் வரும்போது நம்முடைய இருதயம் வஞ்சிக்கப்படும். பாவம் நம்முடைய இருதயத்தை நன்மையான காரியங்களை விட்டு விலக்கி இழுத்துச் செல்லும். நன்மையைப் பற்றிக்கொள்ளாமல், தீமையைப் பற்றிக்கொள்ள வைக்கும்.

நமக்குள் பாவம் வரும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் அசுத்தமடையும். தேவனுக்குப் பிரியமாய் ஜீவிப்பதற்குப் பதிலாக பாவத்திற்குப் பிரியமாய் ஜீவிப்போம். தேவசிநேகத்திற்குப் பதிலாக உலகசிநேகம் நமக்குள் வரும். ஆவியின் சிந்தைக்குப் பதிலாக நமக்குள் மாம்ச சிந்தை நிரம்பியிருக்கும். நம்முடைய சுயஇச்சை நம்மை இழுத்துச்செல்லும். சுயஇச்சை நம்மை இழுத்துச்செல்லும்போது நம்மால் அதற்கு எதிர்த்து நிற்கமுடியாது. அது தன்னுடைய இஷ்டத்திற்கு நம்மைப் பலவந்தம் செய்து இழுத்துச்செல்லும். சுயஇச்சைக்குக் கீழ்ப்படியுமாறு நம்மைக் கட்டாயம்பண்ணும்.

நம்முடைய சுயஇச்சையினாலே நாம் இழுக்கப்படும்போது, தப்பிப்பதற்கு நமக்கு வேறு வழியில்லாமல், சுயஇச்சையில் சிக்கிக் கொள்வோம். சுயஇச்சையில் சிக்கிக் கொள்கிறவர்கள் இச்சையினால் கட்டப்படுகிறார்கள். நம்முடைய சுயபலத்தினால் இந்தச் சிக்கலிலிருந்து விடுதலை பெறமுடியாது. பாவம் நம்மை வஞ்சிக்கும். சுயஇச்சை ஒரு கண்ணியைப்போன்றது. அது எப்போதுமே மறைவாயிருந்து நம்மை சிக்க வைத்துவிடும். பாவம் ஒருபோதும் வெளிப்படையாக நம்மை இழுப்பதில்லை (யாக் 1:14).

பாவம் நம்முடைய இருதயத்திற்குள் புகுந்துவிட்டால், அதற்கு ஒரு சாதகமான வாசஸ்தலம் கிடைத்து விடுகிறது. நம்முடைய இருதயத்தில் பிரவேசித்துள்ள பாவம் தான் விரும்பியபடியெல்லாம் கிரியை செய்ய ஆரம்பித்துவிடும். நமது இருதயத்திலுள்ள இச்சையானது கர்ப்பந்தரிக்கும். பாவம் செய்ய வேண்டும் என்னும் ஆசையை நமக்குள் உற்பத்தி பண்ணும். அந்த ஆசை வளர்ந்து பேராசையாக மாறும். இச்சையானது கர்ப்பந்தரித்து அது பாவத்தைப் பிறப்பிக்கும்.

ஆரம்பத்தில் பாவம் சிறிதாகத் தெரியும். அது எப்போதுமே சிறிதாகயிருப்பதில்லை. பாவம் வளரும். அது பெரிதாகும். பாவம் பூரணமாகும். பாவம் பூரணமாகும்போது அது மரணத்தைப் பிறப்பிக்கும். அது நம்முடைய ஆத்துமாவையும் சரீரத்தையும் கொன்று போடும். இதுவே சாத்தானின் தந்திரம். அவனுடைய தந்திரம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு புரியாத இரகசியமல்ல. ஆகையினால் பாவத்திற்கு விரோதமாக நம்முடைய இருதயத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். கர்த்தர் தாமே நம்முடைய இருதயத்தின்மீது தம்முடைய இரத்தத்தைத் தெளித்து, தம்முடைய இரத்தக்கோட்டைக்குள்ளே நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கருத்தாய் ஜெபிக்க வேண்டும்.

நன்மையான ஈவு
யாக் 1 : 16-18

யாக் 1:16. என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.

யாக் 1:17. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

யாக் 1:18. அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

எல்லா நன்மைகளுக்கும் தேவனே பிதாவாகவும் ஆதாரமாகவும் இருக்கிறார். தேவனைப்பற்றிய சிந்தையில் நாம் தெளிவாயிருக்கவேண்டும். யாக்கோபு இந்த ஆலோசனையைச் சொல்லும்போது, "என் பிரியமான சகோதரரே மோசம்போகாதிருங்கள்" (யாக் 1:16) என்று சொல்லுகிறார்.

தீமையான எந்தக் காரியமும் பரத்திலிருந்து உண்டாவதில்லை. நன்மையான ஈவுகளும், பூரணமான வரங்களும் பரத்திலிருந்து உண்டாகிறது. அவைசோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லை. அவரிடத்தில் நன்மையான ஈவுகளும் பூரணமான வரங்களும் மாத்திரமே உள்ளது. நம்மிடத்தில் மாறுதலும், வேற்றுமையின் நிழலும் காணப்படுமென்றால் அதற்கு கர்த்தர் காரணமல்ல. இவற்றிற்கு நாமே காரணம். நம்முடைய சுயஇச்சைகளே காரணம். நம்முடைய பாவங்களே இவற்றிற்கு காரணம்.

நம்முடைய கர்த்தர் சோதிகளின் பிதாவாகயிருக்கிறார். நன்மையான எல்லா ஈவுகளும் அவரிடத்திலிருந்து நமக்கு இறங்கி வருகிறது. அவர் சோதிகளின் பிதாவாகயிருப்பதினால், எல்லா சத்தியங்களையும் நமக்கு தெளிவாக விளங்கப்பண்ணுகிறார். அவரே நமக்கு ஒளியாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார். சத்தியங்களைக் கற்றுக் கொள்வதற்கு அவரே நமக்குத் தேவையான ஞானத்தைக் கொடுக்கிறார். நம்முடைய ஞானத்திற்கும் அறிவுக்கும் தேவனே ஊற்றின் கண்ணாகயிருக்கிறார்.

தெய்வீக வெளிப்பாடுகள் எல்லாமே பரத்திலிருந்துதான் உண்டாகிறது. பூரணமான எல்லா வரங்களும் அங்கிருந்துதான் நமக்கு வருகிறது. நம்முடைய சுயமுயற்சியினால் நமக்கு ஒரு நன்மையுமில்லை. நன்மையான ஈவுகளை நாம் தேவனிடமிருந்தே பெற்றுக் கொள்கிறோம். பூரணமான வரங்களை பரத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம். தேவனுடைய மெய்யான ஆசீர்வாதங்களுக்காக நாமும், நம்முடைய சந்ததியாரும் கர்த்தரையே துதிக்க வேண்டும். அவருக்கே துதியும் கனமும், மகிமையும் உண்டாவதாக என்று நாமும் நம்முடைய குடும்பத்தாரும் அவரைப் போற்றிப் புகழவேண்டும்.

ஒவ்வொரு மெய்யான விசுவாசியும் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார். தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்கள் ஆகவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். நம்முடைய சுயபலத்தினாலோ அல்லது நம்முடைய சுயஞானத்தினாலோ நாம் தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன் ஆவதில்லை. நம்முடைய சுயத்தினால் நம்மை நாமே ஜெநிப்பித்துக் கொள்ள முடியாது. தேவனுடைய தெய்வீக சித்தத்தினாலும், அவருடைய மகிமையான கிருபையினாலும் நாம் அவருடைய சிருஷ்டிகளின் முதற்பலன்களாயிருக்கிறோம். தம்முடைய சிருஷ்டிகளில் நம்மை முதற்பலன்கள் ஆக்குவதற்கு, அவர் நம்மை ஜெநிப்பித்திருக்கிறார். நம்மை ஜெநிப்பிப்பதற்கு கர்த்தர் சத்திய வசனத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்.

சத்திய வசனம் என்பது சுவிசேஷத்தைக் குறிக்கிற வார்த்தை. சுவிசேஷம் மெய்யாகவே சத்திய வார்த்தைதான். சுவிசேஷம் சத்திய வசனமாகயில்லையென்றால், அதினால் நம்மை ஜெநிப்பிக்க முடியாது. அது நிலைத்திருக்காது. அது சத்தியமானதாக இல்லையென்றால், நன்மையான எந்த ஈவும் சுவிசேஷத்தினால் உண்டாகாது. சுவிசேஷம் சத்திய வசனமாகயிருப்பதினால் தான், அது தேவனுடைய சித்தத்தின்படி நம்மை ஜெநிப்பிக்கிறது. நாம் கர்த்தருடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாயிருக்கிறோம் (யாக் 1:18).

கிறிஸ்துவே எல்லா விசுவாசிகளுக்கும் முதற்பலனாயிருக்கிறவர். விசுவாசிகளாகிய நாமோ எல்லா சிருஷ்டிகளுக்கும் முதற்பலனாகயிருக்கிறோம். சிருஷ்டிகளெல்லாமே கர்த்தருடையவை. கர்த்தரே சர்வசிருஷ்டியையும் சிருஷ்டித்தவர். அவரே சிருஷ்டி கர்த்தா. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாக வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். சுவிசேஷத்தினால் தேவனுடைய சித்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறுகிறது. அவருடைய சித்தத்தின் பிரகாரம் சுவிசேஷத்தினால் நாம் ஜெநிப்பிக்கப்படுகிறோம். தேவனுடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாயிருக்கிறோம்.

கோபிக்கிறதற்கு தாமதம்
யாக் 1:19

யாக் 1:19. ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் ஆவிக்குரிய நல்ல சுபாவங்கள் காணப்பட வேண்டும். நம்மிடத்தில் பொறுமை பூரணகிரியை நடப்பிக்கவேண்டும். நாம் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டிருப் போமென்றால், பொறுமையினால் பூரணகிரியை நடப்பிக்க கற்றுக் கொண்டிருப்போம். தேவனுடைய வார்த்தை நமக்கு உபதேசம்பண்ணப்படும் போது, அதைக் கேட்பதற்கு நாம் தீவிரமாயிருக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நமக்கு சோதனைகளும் பாடுகளும் வரலாம். சோதனை வந்தவுடன் இந்தச் சோதனைக்குகர்த்தர்தான் காரணமென்று அவர்மீது வீண்பழி சுமத்தக்கூடாது. நம்முடைய வாயைத் திறந்து பேசுவதற்கு பொறுமையாயிருக்க வேண்டும். உடனே யாரையாவது குற்றம் சொல்வதற்குப் பதிலாக, நம்முடைய செவிகளைத் திறந்து கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்கவேண்டும். இந்தச் சோதனைகளின் மூலமாய் கர்த்தர் நமக்கு கற்றுக் கொடுக்கிற சத்தியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் நம்முடைய இருதயத்தோடு பேசுவதற்கு நாம் இடங்கொடுக்க வேண்டும். தேவன் பல சமயங்களில் நம்முடைய மனச்சாட்சியோடு பேசுகிறார்.

பல சமயங்களில் விசுவாசிகளுக்குள் கருத்து வேறுபாடு வந்துவிடும். விசுவாசிகள் ஒருமனமில்லாமல் தங்களுக்குள் விவாதம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், பிரிந்திருக்கிற ஏதோ ஒரு கூட்டத்தாரோடு சேர்ந்து, நாமும் விவாதம்பண்ணக்கூடாது. விவாதத்தினால் பிரயோஜனமான எந்த முடிவும் ஏற்படப் போவதில்லை. விவாதம் பண்ணுகிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நம்முடைய காதுகளைத் திறந்து கேட்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் கேட்கிறதற்கு தீவிரமாயிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லும்போது, நாம் அவற்றை தீவிரமாய்க் கேட்கவேண்டும். அவர்கள் சொன்னதை பொறுமையாய்த் தியானிக்க வேண்டும். நாம் பதில் பேசுகிறதற்கு பொறுமையாயிருக்க வேண்டும். அதே வேளையில் அவர்கள் சொல்லுகிற நியாயமான காரியங்களை கேட்பதற்கு தீவிரமாயும் இருக்கவேண்டும்.

நாம் மற்றவர்களிடத்தில் பிரதியுத்தரம் சொல்லும்போது நம்முடைய வார்த்தையில் கோபம் இருக்கக்கூடாது. நாம் பேசுகிறதற்கு பொறுமையாயிருக்க வேண்டும். கோபமான வார்த்தைகளுக்குப் பதிலாக அன்பான வார்த்தைகளைப் பேசவேண்டும். அவசரப்பட்டு பேசாமல் நிதானமாய்ப் பேசவேண்டும். நம்முடைய நாவை நமக்கு அடக்கத் தெரிந்திருக்குமென்றால், நம்முடைய கோபத்தையும் நாம் அடக்கக்கற்றுக் கொள்ளலாம்.

நாம் பேசுகிறதற்கு பொறுமையாயிருப் போமென்றால், கோபிக்கிறதற்கு தாமதமாயிருப்போம். விசுவாசிகளுக்குள் கருத்து வேறுபாடு உண்டாகும்போது கோபம் எந்தவிதமான நல்ல முடிவையும் கொடுக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்க வேண்டும். சண்டை பண்ணுகிறவர்களாயிருக்கக் கூடாது.

மனுஷருடைய கோபம் யாக் 1:20

யாக் 1:20. மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.

கோபம் மனுஷருடைய சுபாவம். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதிக்கு விரோதமாக கிரியை செய்கிறது. மனுஷருடைய கோபத்தினால் தேவனுடைய நீதியை நடப்பிக்க முடியாது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கோபிக்கிறதற்கு தாமதமாயிருக்க வேண்டும். விசுவாசிகளுக்குள் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி கருத்து வேறுபாடு வரும்போது, உடனே அவர்கள் கோபப்பட ஆரம்பித்து விடுவார்கள். விவாதத்தினால் நன்மை உண்டாகாது. கோபம்தான் உண்டாகும். நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருந்தாலும் மனுஷசுபாவமுள்ளவர்களாகத்தான் இருக்கிறோம்.

ஒரு சில விசுவாசிகள் கோபப்பட்டாலும் தாங்கள் தேவனுடைய நீதியினிமித்தம் கோபப்படுவதாக காரணம் சொல்லுகிறார்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்று யாக்கோபு தெளிவாகச் சொல்லுகிறார். நம்முடைய கோபமும் தேவனுடைய சித்தமும் ஒருபோதும் ஒத்துப்போகாது. நாம் கோபப்படுவது தேவனுக்குப் பிரியமல்ல. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுக்குப் பிரியமானதைச் செய்து, அவருக்குப் பிரியமானபடி ஜீவிக்கவேண்டும்.

அழுக்கும் துர்க்குணமும்
யாக் 1:21

யாக் 1:21. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.

நம்முடைய ஜீவியத்தில் எல்லாவித அழுக்கையும், கொடிய துர்குணத்தையும் ஒழித்துவிட வேண்டும். நம்முடைய இருதயத்தில் கோபசுபாவம் இருக்கக் கூடாது. நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வழிகளுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் விரோதமாகக் கிரியை செய்கிற சகலதுர்க்குணங்களையும் நம்மைவிட்டு ஒழித்துவிடவேண்டும்.

நாம் இந்தப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் நம்முடைய இருதயங்களில் கொடிய துர்க்குணங்கள் ஏராளமாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. தீமையிலிருந்து நாம் விலகி ஜீவித்தால் மாத்திரம் போதாது. தீயசுபாவங்கள் நம்மைவிட்டு நீங்க வேண்டும். இதற்காக கொடிய துர்க்குணங்கள் அனைத்தையும் நம்மைவிட்டு ஒழித்துவிட வேண்டுமென்று யாக்கோபு புத்திமதி சொல்லுகிறார்.

கொடிய துர்குணங்கள் என்பது நாம் துணிகரமாக செய்கிற பாவங்களையும் குறிப்பிடுகிறது. அதே வேளையில் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிற பாவசிந்தனைகளையும் குறிப்பிடுகிறது. மாம்ச இச்சையும் நமக்கு கொடிய துர்குணமாகவே இருக்கும். பாவமான பேச்சுக்களையும், பாவமான கிரியைகளையும் நம்மைவிட்டு ஒழித்துவிட வேண்டும். இவையெல்லாம் நம்முடைய இருதயத்தில் அழுக்காயிருக்கிறது. இருதயம் சுத்திகரிக்கப்பட வேண்டுமென்றால், இருதயத்திலுள்ள அழுக்குகளெல்லாம் நீக்கப்படவேண்டும்.

திருவசனம்
யாக் 1:22

யாக் 1:22. அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

நம்முடைய சுயமுயற்சியினால் அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் நம்மால் ஒழித்துவிடமுடியாது. இதற்கு தேவனுடைய கிருபை தேவை. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு தேவவசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவவசனம் நம்முடைய உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிறது.

நாம் தேவவசனத்தை நம்முடைய காதுகளினால் கேட்கும்போது, அதை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக் கொள்கிறோம். நம்முடைய இருதயத்தில் தேவவசனத்தை ஏற்றுக்கொள்வது, ஒரு செடியோடு மற்றொரு செடியை ஒட்டவைப்பதற்கு சமமாயிருக்கிறது. ஒட்டவைக்கப்பட்ட செடியிலிருந்து, பழைய சுபாவக்கிளைகளின் கனி உற்பத்தியாகாது. ஒட்டவைக்கப்பட்ட புதிய கிளைகளின் கனி உற்பத்தியாகும்.

இதுபோலவே சுவிசேஷம் நம்முடைய இருதயத்தில் நாட்டப்படும் போது, நம்மிடத்திலிருந்து நம்முடைய பழைய பாவசுபாவம் வெளிப்படாமல், சுவிசேஷத்தின் பரிசுத்தமான சுபாவம் வெளிப்படும். ஆகையினால் சத்திய வசனத்தை நம்முடைய இருதயத்தில் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். சத்திய வசனத்திற்குக் கீழ்ப்படியவேண்டும்.

தேவனுடைய வசனம் நம்முடைய தப்பிதங்களை வெளிப்படுத்திக் காண்பிக்கும் போது, அதை சாந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். சத்திய வசனத்திற்கு எதிர்த்து நிற்கக்கூடாது. நன்றியுள்ள இருதயத்தோடு வசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் வசனத்தைக் கேட்கும் போதெல்லாம் நம்முடைய ஆத்துமாவின் இரட்சிப்பே நமக்கு பிரதானமாயிருக்க வேண்டும். தேவனுடைய வசனம் நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

நாம் திருவசனத்தை கேட்பதினால் நமக்கு ஆசீர்வாதம் உண்டு. வசனத்தைக் கேட்டால் மாத்திரம் போதாது. வசனத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். திருவசனத்தைக் கேட்டு, அதன்படி செய்யாதவர்கள், தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். நாம் கிரியை செய்ய வேண்டுமென்பதற்காகவே வசனத்தைக் கேட்கவேண்டும். நாம் எவ்வளவுதான் சத்திய வசனங்களைக் கேட்டாலும், வசனத்தின்படி கிரியை நடப்பிக்கவில்லையென்றால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

நாம் கேட்ட வசனங்களை நம்முடைய இருதயத்தில் மனப்பாடம் செய்தால் மாத்திரம் போதாது. அந்த வசனங்களுக்கெல்லாம் கீழ்ப்படிந்து கிரியை நடப்பிக்கவேண்டும். வசனங்களை கேட்கிறவர்களாய் மாத்திரம் இருக்கிறவர்கள், தங்களைத்தாங்களே வஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். நம்மைநாமே வஞ்சிக்கும்போது, நம்மை வஞ்சிப்பதற்கு வேறு யாரும் தேவைப்படமாட்டார்கள். சுயவஞ்சனை கொடிய வஞ்சனையாயிருக்கும்.

கண்ணாடி.
யாக் 1 : 23-25

யாக் 1:23. என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்.

யாக் 1:24. அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்.

யாக் 1:25. சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன்செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.

நாம் திருவசனத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நமக்கு பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். யாக்கோபு கர்த்தருடைய வார்த்தையை ஒரு கண்ணாடியோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். நாம் கண்ணாடியிலே நம்முடைய முகத்தைப் பார்க்கிறோம். கண்ணாடியைப் பார்த்த பின்பு அங்கிருந்து புறப்பட்டுப்போய் விடுகிறோம். அவ்விடம் விட்டுப் போனவுடன், கண்ணாடியில் பார்த்த நம்முடைய சாயல் இன்னதென்பதை மறந்துவிடுகிறோம்.

இது போலவே ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதன்படி செய்யவில்லையென்றால், அவன் கண்ணாடியில் தன்னைத்தானே பார்த்து, அதன்பின்பு தன்னுடைய சாயலை மறந்து போகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். நம்முடைய முகத்தை கண்ணாடியில் பார்க்கும்போது நம்முடைய முகத்திலுள்ள அழுக்குகள், கறைகள், அசுத்தங்கள் எல்லாம் பிரத்தியட்சமாய்த் தெரியும். முகத்தின் அசுத்தத்தையெல்லாம் கண்ணாடி தெளிவாய்க் காண்பிக்கும்.

கர்த்தருடைய வசனமும் அது போலவே கிரியை செய்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது, நம்மிடத்திலுள்ள பாவங்களையெல்லாம் திருவசனம் நமக்குக் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. நம்மிடத்திலுள்ள அழுக்கு, துர்குணம் ஆகியவற்றையெல்லாம் திருவசனம் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. இவற்றையெல்லாம் நாம் பார்த்து, இவற்றை நம்மைவிட்டு ஒழித்துவிடவேண்டும்.

தேவனுடைய வார்த்தையினால் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய உண்மையான சுபாவம் என்ன என்பதை திருவசனத்தினால் உற்றுப் பார்க்க வேண்டும். திருவசனத்தை சரியான முறையில் பயன்படுத்தி, நம்மிடத்திலுள்ள அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிடவேண்டும். திருவசனமானது ஒரு கண்ணாடியைப்போல இருக்கிறது. கண்ணாடியில் பார்க்கும்போது நம்முடைய முகத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் தெரியும். கண்ணாடியின் உதவியினால் அந்த அசுத்தங்களை உற்றுப்பார்த்து, அவற்றை நம்மைவிட்டு நீக்கிப்போட வேண்டும். அப்போதுதான் நம்முடைய முகம் சுத்தமாகும். திருவசனத்தின் உதவியினால் நம்முடைய இருதயத்தை சுத்திகரிக்கும் போதுதான் இருதயம் சுத்தமாகும்.

கண்ணாடியில் நம்முடைய சுபாவ முகத்தைப் பார்த்துவிட்டு, நம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ளவில்லையென்றால், நம்முடைய முகம் சுத்தமாகாது. அதுபோலவே ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதன்படி செய்ய வில்லையென்றால் அவனுடைய இருதயம் சுத்தமாகாது.

கர்த்தருடைய வசனத்தை நாம் வீணாய்க் கேட்கிறவர்களாயிருக்கக் கூடாது. ஒருவன் கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்த்து, அவ்விடம் விட்டுப்போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுகிறான். கண்ணாடியில் பார்த்ததினால் அவனுக்கு பிரயோஜனம் உண்டாகவில்லை. நாம் திருவசனத்தைக் கேட்கும் போது, நம்முடைய இருதயத்திலுள்ள அழுக்கும், கொடிய துர்க்குணமும் நமக்குப் பிரத்தியட்சமாய்த் தெரியும். இவற்றை ஒழித்துப் போடவேண்டுமென்றால் திருவசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். திருவசனத்திற்குக் கீழ்ப்படிய வில்லையென்றால், அழுக்கும் கொடிய துர்க்குணமும் இருதயத்தில் இருந்தது போலவே தங்கியிருக்கும்.

திருவசனத்தை கேட்ட பின்பு, வசனத்தை மறந்துவிடுவோம். நம்முடைய இருதயத்திலுள்ள அழுக்கையும் துர்க்குணத்தையும் மறந்துவிடுவோம். அவற்றை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதையும் மறந்துவிடுவோம். வசனத்தைக் கேட்டோம். ஆனால் வசனத்திற்குக் கீழ்ப்படியவில்லை. நாம் கீழ்ப்படியாததினால் வசனம் நமக்குப் பிரயோஜனப்படவில்லை.

நாம் வசனத்தை எப்படி கேட்க வேண்டுமோ அப்படி கேட்கவேண்டும். வசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்னும் தீர்மானத்தோடு வசனத்தைக் கேட்கவேண்டும். அப்போதுதான் வசனம் நமக்குள் கிரியை செய்யும். கண்ணாடியிலே நம்முடைய சுபாவ முகத்தை எதற்காகப் பார்க்கவேண்டும் என்பது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். முகத்தை சுத்தம் செய்வதற்காகவே கண்ணாடியைப் பார்க்கிறோம் என்னும் தெளிவு நமக்குள் இருக்கவேண்டும்.

முகத்தில் அசுத்தம் காணப்படும் போது, கண்ணாடியின் உதவியினால் அந்த அசுத்தத்தை உடனே சுத்தப்படுத்திவிட வேண்டும். அப்போது தான் கண்ணாடி நமக்கு பிரயோஜனமுள்ளதாகயிருக்கும். சத்திய வசனம் நம்மைச் சுத்திகரிக்கும் போது தான், வசனம் நமக்கு பிரயோஜனமுள்ளதாகயிருக்கும். தேவவசனம் நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ளது. திருவசனத்தை நாம் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளும்போது நமக்கு தெய்வீக ஆசீர்வாதங்கள் உண்டு (யாக் 1:23,24).

சுவிசேஷம் சுயாதீனப் பிரமாணமாயிருக்கிறது. இது பூரணபிரமாணம். நியாயப்பிரமாணம் சடங்காச்சார பிரமாணம். அது அடிமையின் பிரமாணம். இந்தப் பிரமாணம் நம்மை அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படுத்துகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமோ அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கிற சுயாதீனப் பிரமாணமாயிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் குறை ஏதுமில்லை. இது பூரணபிரமாணம். நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது, சுயாதீனப் பிரமாணமாகிய பூரணபிரமாணத்தை உற்றுப்பார்க்கிறோம்.

நாம் சுவிசேஷமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப்பார்த்தால் மாத்திரம் போதாது. நாம் அதிலே நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய பிரமாணத்திலும் தேவனுடைய வார்த்தையிலும் நாம் நிலைத்திருந்தால் மாத்திரமே, நம்முடைய செய்கைகளில் நாம் பாக்கிய வான்களாயிருப்போம். வசனத்தில் நிலைத்திருந்தால் மாத்திரமே நாம் கேட்ட வசனத்தை மறக்காமலிருப்போம். சுவிசேஷத்தை அறிகிற அறிவினால் நமக்கு ஆசீர்வாதம் உண்டாகாது. சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி கிரியை செய்யும்போதுதான் நமக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்தால் மாத்திரமே அவருடைய சித்தத்திற்கு நம்மால் கீழ்ப்படிய முடியும். ஆனாலும் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்து, அதற்குக் கீழ்ப்படிய வில்லையென்றால் நமக்குப் பிரயோஜனமில்லை. நாம் சுவிசேஷத்திலே நிலைத்திருக்க வேண்டும். சுவிசேஷத்தை மறந்துவிடக் கூடாது. சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற கிரியைகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய செய்கைகளிலும் பாக்கியவான்களாயிருப்போம்.பேசுவதினால் நாம் பரலோகம் போகப்போவதில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் மாத்திரமே நம்மால் பரலோகத்திற்குப் போகமுடியும்.

நாவு
யாக் 1:26

யாக் 1:26. உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய நாவை அடக்கவேண்டும். தங்களுடைய நாவை அடக்காதவர்கள் தங்கள் இருதயத்தை வஞ்சிக்கிறார்கள். நம்முடைய நாவை அடக்க வில்லையென்றால் நம்மிடத்தில் தேவபக்தியில்லை. நம்முடைய நாவை அடக்காமலேயே, நம்மை தேவபக்தியுள்ளவர்கள் என்று எண்ணினால், நம்முடைய தேவபக்தி வீணாயிருக்கும். வெளிப்பார்வைக்கு நம்மிடத்தில் தேவபக்தியுள்ளது போல தெரியும். நம்முடைய இருதயமோ வஞ்சிக்கப்பட்டிருக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் தங்களை பெரிய பரிசுத்தவான்கள் போல காண்பித்துக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்களுடைய பேச்சுக்கும் கிரியைக்கும் சம்பந்தம் இருக்காது. இருதயம் அசுத்தமாயிருக்கும். ஆனால் வெளிப்பார்வைக்கு பக்தியுள்ளவர்கள்போல வேஷம் போடுவார்கள். இது ஒரு மாய்மாலம். இவர்களுடைய தேவபக்தியும் வீணானது.

நம்மிடத்தில் மெய்யான தேவபக்தியில்லையென்றால், நாம் எப்போதுமே மற்றவர்களை நியாயந் தீர்த்துக் கொண்டிருப்போம். பிறர் செய்கிற தப்பிதங்களை பெரிதுபடுத்துவோம். அதே தப்பிதங்கள் நம்மிடத்தில் காணப்படும் போது, அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவோம். இதுவும் ஒரு மாய்மாலம்.

மற்றவர்களுடைய தப்பிதங்களைப் பற்றி குற்றம் சொல்லுகிறவர்கள், தங்களை ஞானிகளாகவும் பரிசுத்த வான்களாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். இது இவர்களுடைய சுயகற்பனை. இந்தக் கற்பனையில் உண்மையில்லை. தங்களைத்தாங்களே பரிசுத்தவான்கள் என்று நினைத்துக் கொண்டு, மற்றவர்களை குற்றம் சொல்லுகிறவர்களிடத்தில் மெய்யான தேவபக்தி இருக்காது.

பிறரை குற்றப்படுத்தும் நாவை உடையவர்களுடைய இருதயம் கிருபையுள்ளதாக இருக்காது. நம்முடைய நாவை நாம் கட்டுப்படுத்த வில்லையென்றால், நமக்கு ஆவிக்குரிய பெலமும் இருக்காது. நம்முடைய நாவையே நம்மால் கட்டுப்படுத்த முடிய வில்லையென்றால், நம்முடைய சரீரத்தின் மற்ற அவயவங்களை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். தேவனுடைய ராஜ்யம் பேச்சில் அல்ல, அது தேவபெலத்திலிருக்கிறது.

ஒரு சிலர் தங்களுடைய நாவின் பேச்சினாலேயே எல்லாவற்றையும் சாதித்து விட வேண்டுமென்று நினைப்பார்கள். நாவைக் கட்டுப்படுத்தாமல் வீண்வார்த்தைகளைப் பேசுவார்கள். இவர்களுக்கு தேவனுடைய கிருபை கிடைக்காது. இவர்களுடைய விருப்பமும் சித்திக்காது. இவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கலாமென்று கற்பனை பண்ணுகிறார்கள். ஆனால் மெய்யாகவே, தங்களுடைய நாவை அடக்காதவர்கள், தங்கள் இருதயத்தையே வஞ்சித்து விடுகிறார்கள். நம்முடைய தேவபக்தி வீணாயிருக்கும் போது, எல்லாமே வீணாய்ப் போய்விடும். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து கர்த்தருடைய பிள்ளைகள், தங்களுடைய நாவை அடக்க வேண்டும். நம்முடைய நாவை அடக்குவதற்கு தேவகிருபையையும், தேவனுடைய ஒத்தாசையையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மாசில்லாத சுத்தமான பக்தி
யாக் 1 : 27

யாக் 1:27. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

பக்தியிலே வீணான தேவபக்தியும் இருக்கிறது. மாசில்லாத சுத்தமான பக்தியும் இருக்கிறது. தங்களுடைய நாவை அடக்காமல், தங்களை தேவபக்தியுள்ளவர்கள் என்று எண்ணினால், அவர்களுடைய தேவபக்தி வீணானது. திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளும் உதவிசெய்து, உலகத்தால் கறைபடாதபடிக்கு தங்களைக் காத்துக் கொள்கிறவர்களுடைய பக்தி, தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

கிறிஸ்துவின் உபதேசம் மகிமையுள்ளது. அது சுத்தமானது. தீட்டுப்படாதது. கர்த்தருடைய மெய்யான உபதேசத்தை பின்பற்றுகிற நம்முடைய ஜீவியம் பரிசுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். கிருபையுள்ள கர்த்தரை ஆராதிக்கிற நம்முடைய இருதயமும் கிருபை நிறைந்ததாயிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியத்தில் அன்பும் பரிசுத்தமும் இணைந்திருக்க வேண்டும். இதுவே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எதை செய்தாலும் அது தேவனுக்கு மறைவாக இருக்காது. நம்முடைய பேச்சுக்களும் கிரியைகளும் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாகயிருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய பாவங்களை எப்படித்தான் மூடிமறைத்தாலும் அது தேவனுக்குத் தெரிந்துவிடும். தேவனை யாரும் வஞ்சிக்க முடியாது. தேவனை வஞ்சிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் திக்கற்றப் பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் உதவிபுரிய வேண்டும். அவர்கள் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்க வேண்டும். ஏழைகள் மீது மனதுருக்கமாயிருப்பதும், அவர்களுக்கு உதவிபுரிவதும் மெய்யான தேவபக்தியில் ஒரு அம்சம். நாம் யாருக்கு உதவி செய்கிறோம் என்பதில் கவனமாயிருக்க வேண்டும். உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி புரிய வேண்டும்.

பிறருக்கு உதவிசெய்வதில் நாம் கவனம் செலுத்துவதுபோல, நம்முடைய பரிசுத்த ஜீவியத்திலும் கவனம் செலுத்த வேண்டும். உலகத்தால் கறைபடாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். இந்த உலகம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறது. நம்மிடத்தில் சிறிய தப்பிதம் காணப்பட்டாலும் இப்பிரபஞ்சம் அதைப் பெரிதுபடுத்திவிடும். இப்பிரபஞ்சத்தில் கறைபடாதபடிக்கு ஜீவிப்பது மிகவும் கடினம். இது கடினமாகயிருந்தாலும், உலகத்தால் கறைபடாதபடிக்கு நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி புரிவதும், ஆத்துமாவை உலகத்தால் கறைபடாதபடிக்கு காத்துக்கொள்வதுமே, பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

2 அதிகாரம்

ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்கக் கூடாது. தரித்திரரை கனவீனம்பண்ணக்கூடாது (யாக் 2:1-7). நம்மிடத்தில் அன்புகூருவதுபோல நாம் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும் (யாக் 2:8-13). விசுவாசம் கிரியை நடப்பிக்க வேண்டும். கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக் 2:14-22).

பட்சபாதமுள்ள விசுவாசம்
யாக் 2 : 1-3

யாக் 2:1. என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக.

யாக் 2:2. ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது,

யாக் 2:3. மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்திலும் பட்சபாதம் இருக்கக் கூடாது. நம்முடைய விசுவாசமும் பட்சபாதமில்லாத சுத்தமான விசுவாசமாயிருக்க வேண்டும். நாம் மனுஷரை முகஸ்துதி பண்ணக்கூடாது. யாக்கோபு பட்சபாதமுள்ள விசுவாசத்திற்கு விரோதமாக எச்சரித்துச் சொல்லுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையுள்ளவர். நாம் அவரிடத்தில்விசுவாசம் வைத்திருக்கிறோம். கர்த்தரிடத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசமே நம்முடைய ஐசுவரியம். நம்முடைய விசுவாசத்தை நாம் சுத்தமுள்ளதாகக் காத்துக் கொள்ள வேண்டும். விசுவாசத்தில் பட்சபாதம் இருக்கக் கூடாது. மாய்மாலமான விசுவாசம் நம்மிடத்தில் காணப்படக் கூடாது. நம்முடைய விசுவாசம் சுத்தமுள்ளதாகயிருந்தால் தான், கர்த்தர் அதை அங்கீகரிப்பார்.

யாக்கோபு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும்போது, அவரை நம்முடைய "மகிமையுள்ள கர்த்தர்" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவே நமக்கு மகிமையுள்ள கர்த்தர். நம்முடைய துதி கன மகிமை அனைத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கே செலுத்தவேண்டும். நாம் மனுஷர்மீது அன்புகூரவேண்டும். அதே வேளையில் மனுஷரை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சமமாக உயர்த்தி விடக்கூடாது. நம்முடைய மகிமையுள்ள கர்த்தருக்கு மகிமையை குறைத்துவிட்டு, மனுஷருக்கு மகிமையை உயர்த்தக்கூடாது. கர்த்தருக்குரிய கனத்தை கர்த்தருக்கு மாத்திரமே கொடுக்க வேண்டும். மனுஷருக்குரிய மரியாதையை மாத்திரம் மனுஷருக்குக் கொடுத்தால் போதுமானது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள நம்முடைய விசுவாசம் பட்சபாதமுள்ளதாக இருக்கக் கூடாது. விசுவாசிகள் மத்தியில் காணப்படுகிற பட்சபாதத்தை யாக்கோபு ஒரு எடுத்துக்காட்டின் மூலமாக இங்கு விவரிக்கிறார். ஒரு சிலர் பார்வைக்குப் பகட்டாக இருப்பார்கள். பொன் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருப்பார்கள். வேறு சிலரோ கந்தையான வஸ்திரம் தரித்திருப்பார்கள். மினுக்குள்ள வஸ்திரம் தரித்திருக்கிறவருக்கு அதிக மரியாதையையும், கந்தையான வஸ்திரம் தரித்து தரித்திரராயிருக்கிறவருக்கு அவமரியாதையையும் காண்பித்தால், நாம் பட்சபாதம் பண்ணுகிறவர்களாயிருப்போம்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார். ஒருவருடைய வஸ்திரத்தின் தோற்றத்தை வைத்து அவருக்கு மரியாதை கொடுக்கும் போது, நாம் முகஸ்துதி பண்ணுகிறவர்களாயிருப்போம்.விசுவாசிகள் ஐசுவரியவான்களாகவும், தரித்திரராகவும் இருக்கலாம். கர்த்தர் வித்தியாசம் பாராமல், ஐசுவரியவானையும் தரித்திரனையும் ஒன்று போலவே நேசிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் சமுதாயத்திலுள்ள எல்லா அந்தஸ்துக்களிலும் இருப்பார்கள். கர்த்தருக்கு மீதமாயிருக்கிற ஜனங்கள் எல்லா தேசங்களிலும், எல்லா ஜாதிகளிலும், சமுதாயத்திலுள்ள எல்லா அந்தஸ்துக்களிலும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் பொன் மோதிரமும் மினுக்கான வஸ்திரமும் தரித்திருக்கிற ஐசுவரியவான்களாக இருக்கலாம். வேறு சிலரோ கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற தரித்திரராகயிருக்கலாம். இவர்கள் எல்லோருமே ஆலயத்திற்கு வருவார்கள். கர்த்தரை ஆராதிப்பதற்காகத்தான் ஆலயத்திற்கு வருகிறார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஐசுவரியவான், தரித்திரன் என்னும் பாகுபாடு எதுவுமில்லை. கர்த்தருடைய பார்வையில் எல்லோருமே சமமாகத்தான் இருக்கிறார்கள்.

ஒருவன் ஐசுவரியவானாகயிருப்பதினால், தேவனுடைய சமுகத்தில் நெருங்கிச் சேருகிற சிலாக்கியத்தைப் பெறுவதில்லை. அது போலவே ஒருவன் தரித்திரனாகயிருப்பதினால் அவன் தேவனுடைய சமுகத்தை விட்டு தூரவிலகிப்போய்விட வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளெல்லோரையும், பட்சபாதமில்லாமல், சமமாகவே நேசிக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் தேவனுடைய பட்சபாதமில்லாத சுபாவம் காணப்படவேண்டும். உலகத்தின் ஐசுவரியங்களுக்கும், பெருமைகளுக்கும் நாம் தேவையில்லாமல் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. மனுஷர் மத்தியிலே பட்சபாதம் காண்பிப்பது தேவனுக்கு விரோதமான பாவம். இந்தத் தீயசுபாவம் நம்மிடத்தில் காணப்படாதபடிக்கு நாம் மிகவும் எச்சரிப்போடிருக்கவேண்டும்.

தரித்திரன் ஒருவன் நற்குணமுள்ளவனாகயிருக்கலாம். ஆனாலும் அவன் தரித்திரனாகயிருப்பதினால் அவனை அவமரியாதை பண்ணிவிடக்கூடாது. அதே வேளையில் ஐசுவரியவான் ஒருவன் துன்மார்க்கனாகயிருக்கலாம். ஆனாலும் அவன் ஐசுவரியவானாகயிருப்பதினால், அவனுடைய துன்மார்க்கத்தை கண்டும் காணாமல் இருந்துவிடக் கூடாது. துன்மார்க்கனைக் கனப்படுத்தக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் தரித்திராகயிருந்தாலும் அவர்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகயிருக்கிறார்கள். தங்கள் ஜீவியத்தில் ஆவியின் கனிகளை அதிகமாகக் கொடுக்கிறார்கள். சாதாரண வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். தாழ்மையோடு ஜீவிக்கிறார்கள். கர்த்தருக்கு முன்பாக கறை திரையில்லாமல் பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். இவர்களிடத்தில் பொன் மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் இல்லையென்று தீர்மானித்து, இவர்களை அவமானப்படுத்திவிடக்கூடாது.

நாம் ஆலயத்திற்கு வரும் போது கர்த்தருடைய பிள்ளைகளாகத் தான் வருகிறோம். நாம் ஐசுவரிய வான்களாகயிருந்தாலும், தரித்திரராகயிருந்தாலும், நாமெல்லோருமே கர்த்தருடைய பிள்ளைகள்தான். நாமெல்லோருமே தேவனுக்கு உடன் சுதந்தரராகவே இருக்கிறோம். நம்முடைய ஐசுவரியத்தை வைத்து தேவன் பட்சபாதத்தோடு நம்மீது அன்பு கூருவதில்லை.

ஆலயத்திற்கு வருகிற ஐசுவரியவானைப்பார்த்து "நீ இந்த நல்ல இடத்தில் உட்காரும்" என்றும், தரித்திரனைப்பார்த்து "நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையில் உட்காரு" என்றும் சொன்னால் நாம் தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்போம். நம்முடைய போகதம் நன்றாயிருக்கிறது. ஆனால் நம்முடைய சிந்தனையும் செயலும் தகாததாயிருக்கிறது.

ஐசுவரியவான்களும் தரித்திரரும் யாக் 2 : 4-7

யாக் 2:4. உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?

யாக் 2:5. என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?

யாக் 2:6. நீங்களோ தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்?

யாக் 2:7. உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?

தரித்திரரை கனவீனம் பண்ணுகிறவர்கள், தங்களுக்குள்ளே தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே வித்தியாசம் காண்பிக்க வேண்டுமென்றுஇவர்கள் தங்களுக்குள்ளே போதகம்பண்ணிக்கொள்கிறார்கள். நாம் மனுஷருக்குள் வித்தியாசம் காண்பிக்கக் கூடாது. கர்த்தருடைய சமுகத்தில் எல்லோரும் ஒன்றுதான். பணத்தை வைத்து மனுஷரைப் பிரிக்கக் கூடாது. ஐசுவரியத்தினால் மனுஷரை பிரிக்கிறவர்கள் தகாத சிந்தனைகளோடே நியாயந்தீர்க்கிறார்கள். இப்படி நியாயந் தீர்க்கிறவர்களுடைய நீதியும் நீதியாயிருப்பதில்லை. தங்களுடைய சுயஎண்ணங்களை இவர்கள் நீதியாக மாற்றுகிறார்கள் (யாக் 2:4).

தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்கு வேண்டும் என்று விரும்புகிறோம். அதே வேளையில் உலக ஐசுவரியத்தின்மீதும், ஆடம்பரத்தின்மீதும் பிரியம் வைக்கிறோம். கிருபையைக் காணமுடியாது. ஆனால் ஐசுவரியத்தைக் காணமுடியும். காணமுடியாத கிருபையை விரும்புவதைவிட, காணக்கூடிய ஐசுவரியத்தை நாம் அதிகமாய் விரும்புகிறோம். இந்த விருப்பம் நம்முடைய இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. இது வெளியே தெரியாத இரகசியமாகயிருக்கும். ஆனாலும் தப்பிதமான இந்தச் சிந்தனை நமக்குள்ளே போதகம்பண்ணிக்கொண்டிருக்கும். நாம் வெளிப்படையாக ஐசுவரியவான்களைக் கனம்பண்ணி, தரித்திரரை கனவீனம் பண்ணும்போது தான் நம்முடைய இரகசியமான சிந்தனை வெளி உலகத்திற்குத் தெரியும். மனுஷருக்குள்ளே பட்சபாதம் பண்ணுவது தேவனுக்கு விரோதமான பகை. பட்சபாதம் தேவனுக்கு விரோதமான சுபாவம்.

தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகத் தெரிந்து கொள்கிறார். தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை, தாம் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சுதந்தரிக்கிறவர்களாகத் தெரிந்து கொண்டார் (யாக் 2:5). நாம் இப்பிரபஞ்சத்தில் தரித்திருக்கு எந்தவிதமானமரியாதையும் கொடுக்காமல், அவர்களைக் கனவீனம்பண்ணினாலும், அவர்களும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள். தம்முடைய வாக்குத்தத்தத்திற்கு சுதந்தரராக தேவன் தரித்திரரையும் தெரிந்து கொண்டார்.

இப்பிரபஞ்சத்தில் தரித்திரராயிருக்கிற அநேகரை தேவன் தம்முடைய பிள்ளைகளாகத் தெரிந்து கொண்டார். அவர்கள் ஐசுவரியத்தில் தரித்திரராயிருந்தாலும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள்.

தேவன் தரித்திரரைத் தெரிந்து கொள்வதினால், நாம் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கக்கூடாது. தேவன் தெரிந்து கொண்டவர்களைப் புறக்கணிப்பதற்கு நமக்கு அனுமதியில்லை. விசுவாசிகள் தரித்திரராகயிருக்கிறார்கள் என்னும் காரணத்திற்காக அவர்களைக் கனவீனப்படுத்தக் கூடாது. நாம் அவர்களோடு பட்சபாதமாய் நடந்து கொள்ளக் கூடாது. தேவன் நம்முடைய பொன் மோதிரத்தையும், மினுக்கான வஸ்திரத்தையும் பார்ப்பதில்லை. அவர் நம்முடைய இருதயத்தையும், அதின் பரிசுத்தத்தையும் மாத்திரமே பார்க்கிறார். தேவன் தரித்திரரைப் புறக்கணித்துவிட வில்லை. விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகயிருக்கவும், தம்முடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவும் தேவன் தரித்திரரையும் தெரிந்துவைத்திருக்கிறார்.

உலக ஐசுவரியத்தினால் ஐசுவரியவான்களாகயிருக்கிறவர்கள், நற்கிரியைகளைச் செய்வதிலும் ஐசுவரியவான்களாகயிருக்க வேண்டும். இவ்வுலகத்தில் தரித்திராகயிருக்கிற வர்களோ தங்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகயிருக்க வேண்டும். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்பிரபஞ்சத்தில் நமக்கு ஐசுவரியம் இருக்கிறதா, இல்லையா என்பதை தேவன் பார்ப்பதில்லை. நம்மிடத்தில் விசுவாசம் இருக்கிறதா என்பதை மாத்திரமே தேவன் பார்க்கிறார். கர்த்தரை விசுவாசித்து, அவரிடத்தில் அன்புகூருகிறவர்கள் அவருடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள்.

விசுவாசத்தில் ஐசுவரிய வான்களாகயிருக்கிறவர்கள்,தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் தரித்திரராகயிருந்தாலும் சோதனையைச் சகிக்கிற மனுஷராகயிருக்க வேண்டும். தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தேவன் ஜீவகிரீடத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார் (யாக் 1:13). தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்கள், ஜீவகிரீடத்தோடு, தேவனுடைய ராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். கர்த்தர் நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிற கிரீடம் ஜீவகிரீடம். அவர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற ராஜ்யம் நித்திய ராஜ்யம்.

விசுவாசிகளாகிய நாம் ஐசுவரியவான்களைக் கனப்படுத்தி, தரித்திரரை கனவீனம்பண்ணக்கூடாது. நாம் தரித்திரரை கனவீம்பண்ணும் போது ஐசுவரியவான்கள் நம்மை ஒடுக்குகிறார்கள். அவர்களே நம்மை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள். ஐசுவரியவானைக் கனப்படுத்துகிறவர்கள் உலகத்தின் சம்பத்துக்களின் மீதும், உலகத்தின் பெருமையின் மீதும் ஆசைப்படுகிறவர்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் ஐசுவரியவானைக் கனப்படுத்தி, தரித்திரரை கனவீனப்படுத்தும்போது, நம்முடைய பாவம் பிரத்தியட்சமாகத் தெரியும்.

கர்த்தர் நம்மை தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரித்திருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அதற்குரிய சுபாவத்துடன் ஜீவிக்க வேண்டும். நம்முடைய வார்த்தையும் கிரியையும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். கர்த்தருடைய நாமத்தை நாம் ஒருபோதும் தூஷிக்கக்கூடாது. நாம் ஐசுவரியவானைக் கனம்பண்ணி, தரித்திரரை கனவீனம்பண்ணும் போது, தேவனுடைய நாமம் நம்மூலமாக தூஷிக்கப்படுகிறது. ஐசுவரியவான்களை பட்சபாதத்தோடு கனம்பண்ணியதினால், அவர்கள் நம்மை ஒடுக்குவார்கள். அவர்கள் நிமித்தமாய் நாம் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படுவோம்.

ராஜரிக பிரமாணம்
யாக் 2 : 8,9

யாக் 2:8. உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.

யாக் 2:9. பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ் செய்து, மீறினவர்களென்று நியாயப் பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.

நம்மிடத்தில் அன்புகூருவதுபோல நாம் பிறரிடத்திலும் அன்புகூரவேண்டும். இதுவே வேதவாக்கியத்தின் தெளிவான உபதேசம். இதுவே ராஜரிக பிரமாணம். இந்தப் பிரமாணம் நம்மை ஆளுகை செய்து வழிநடத்தவேண்டும். மற்றவர்கள் ஐசுவரியவான்களாகயிருந்தாலும், தரித்திர ராகயிருந்தாலும் அவர்களிடத்திலும் அன்புகூர வேண்டும். வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நாம் நிறைவேற்றவேண்டும்.

பிறரிடத்தில் அன்புகூர வேண்டுமென்பது மனுஷருடைய கற்பனையோ அல்லது மனுஷருடைய உபதேசமோ அல்ல. "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று வேதவாக்கியம் சொல்லுகிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எப்படி நடக்கவேண்டும் என்று வேதவாக்கியம் தீர்மானம்பண்ணுகிறது (யாக் 2:5).

வேதவாக்கியம் சொல்லுகிற இந்த உபதேசம் ராஜரிக பிரமாணம். நம்முடைய ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவே இந்தப் பிரமாணத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நம்முடைய ராஜாவின் பிரமாணத்தை நாம் கனப்படுத்த வேண்டும். ராஜாவின் பிரமாணத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். ராஜரிக பிரமாணத்திற்கு நம்மை பூரணமாய் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

ராஜரிக பிரமாணத்தில் பட்சபாதத்திற்கு இடமேயில்லை. பட்சபாதம் தேவனுக்கு விரோதமான பாவம்.

ராஜரிக பிரமாணத்தை நாம் சரியாக வியாக்கியானம்பண்ண வேண்டும். நம்மிடத்தில் அன்புகூருவது போல பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும் என்று சொல்லும் போது, ஐசுவரிய வான்களிடத்திலும், தரித்திரரிடத்திலும் பட்சபாதமில்லாமல் அன்புகூர வேண்டும் என்பதுதான் பொருள். நாம் பட்சபாதமுள்ளவர்களாயிருப்போமென்றால் பாவம் செய்கிறோம். ராஜரிக பிரமாணத்தை மீறுகிறோம். நியாயப் பிரமாணமும் நம்மை ராஜரிக பிரமாணத்தை மீறினவர்கள் என்றும் நியாயந்தீர்க்கும் (யாக் 2:9).

நியாயப்பிரமாணம்
யாக் 2 : 10,11

யாக் 2:10. எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.

யாக் 2:11. ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ் செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப் பிரமாணத்தை மீறினவனாவாய்.

தேவனுடைய ராஜரிக பிரமாணத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். ராஜரிக பிரமாணத்தினுடைய ஒரு பகுதிக்கு நாம் கீழ்ப்படிவதுபோல, மற்றொரு பகுதிக்கும் கீழ்ப்படியவேண்டும். ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.

ஐசுவரியவான்களிடத்தில் அன்பு கூரும் போது, நம்மிடத்தில் அன்பு கூருவதுபோல அவர்களிடத்திலும் அன்பு கூருகிறோம் என்று நாம் விவாதம் பண்ணலாம். ஐசுவரியவான்களிடத்தில் அன்புகூருவது தவறல்ல. மெய்யாகவே நாம் ஐசுவரியவான்களிடத்திலும் அன்புகூர வேண்டும்.

அதே வேளையில் நாம் தரித்திரரிடத்திலும் அன்புகூர வேண்டும். நம்மிடத்தில் அன்பு கூருவதுபோல தரித்திரரிடத்திலும் அன்புகூர மறந்துவிடக் கூடாது. ராஜரிக பிரமாணத்திற்கு நாம் பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும். பிறர் என்று சொல்லும்போது அதில் ஐசுவரியவான்களும் இருக்கிறார்கள், அதில் தரித்திரரும் இருக்கிறார்கள்.

நாம் ஐசுவரியவான்களிடத்தில் அன்புகூர்ந்து விட்டு, தரித்திரரிடத்தில் அன்பு கூராமல்போனால், ராஜரிக பிரமாணத்தை நாம் முற்றிலுமாக நிறைவேற்றவில்லை என்பதுதான் பொருள். நாம் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்போம். ஐசுவரிய வான்களுக்குக் கொடுக்கிற அதே மரியாதையை, தரித்திரருக்கும் குறைவில்லாமல் கொடுக்க வேண்டும். ஐசுவரியவான்களுக்கு மாத்திரம் மரியாதை கொடுத்து விட்டு, தரித்திரர்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையென்றால் நாம் மாய்மாலம்பண்ணுகிறவர்களாகவே இருப்போம். ராஜரிக பிரமாணத்திற்கு முழுவதும் கீழ்ப்படியாமல், நமக்கு பிரியமான பகுதிக்கு மாத்திரம் கீழ்ப் படிகிறவர்களாகயிருப்போம் (யாக் 2:10).

பழைய ஏற்பாட்டுக் காலத்திலே யூதர்கள் நியாயப் பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் அவர்களால் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ள முடியவில்லை. நியாயப் பிரமாணத்தின் ஒரு பகுதியை கைக்கொண்டார்கள். மற்ற பகுதியை கைக்கொள்ள முடியாமல் விட்டு விட்டார்கள்.

நியாயப் பிரமாணத்தில் விபசாரம் செய்யாதிருப்பாயாக என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் கொலைசெய்யமாட்டார்கள். ஆனால் விபசாரம் செய்வார்கள். வேறு சிலரோ விபசாரம் செய்யமாட்டார்கள். ஆனால் கொலை செய்து விடுவார்கள். நியாயப்பிரமாணத்தில் ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மற்றொரு கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனாலும் அது பாவமாகவே இருக்கும். ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாக இருப்பார்கள். ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மற்றொரு கட்டளைக்குக் கீழ்ப்படியாதவர்கள், நியாயப் பிரமாணம் முழுவதையும் மீறினவர்களாகவே இருப்பார்கள்.

நியாயப் பிரமாணத்திலுள்ள கட்டளைகளை நாம் தியானிக்கும்போது, நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த தேவனைப் பற்றியும் நாம் தியானிக்க வேண்டும். உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பது ராஜரிக பிரமாணம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே இந்தப் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் பட்சபாத மில்லாதவர். ஐசுவரியவான்களையும், தரித்திரரையும் பட்சபாதமில்லாமல் நேசிக்கிறவர்.

ராஜரிக பிரமாணத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது, கிறிஸ்துவின் சுபாவம் நம்மிடத்தில் காணப்பட வேண்டும். பிரமாணத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிய வேண்டும். ஐசுவரியவான்களிடத்தில் அன்புகூருவதுபோல தரித்திரரிடத்திலும் அன்புகூர வேண்டும். நாம் பட்சபாதமுள்ளவர்களாயிருக்கக்கூடாது. நாம் பட்சபாதமுள்ளவர்களாய் அன்பு கூருவோமென்றால், நாம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களாகவும், தேவனுடைய ராஜரிக பிரமாணத்தை மீறினவர்களாகவும் இருப்போம்.

சுயாதீனப்பிரமாணம்
யாக் 2 : 12,13

யாக் 2:12. சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத் தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.

யாக் 2:13. ஏனென்றால், இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத் தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.

கிறிஸ்துவின் பிரமாணம் சுயாதீனப் பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் பிரமாணமே நம்மை ஆளுகை செய்து வழிநடத்தவேண்டும். சுவிசேஷத்திற்கு பிரமாணம் என்றும் ஒரு பெயர் உள்ளது. சுவிசேஷம் விசுவாசிகளுடைய கடமைகளையும் நடத்தைகளையும் எடுத்துச் சொல்லுகிறது. கிறிஸ்துவானவர் சுயாதீனப் பிரமாணத்திற்கு ராஜாவாகயிருக்கிறார். அதே வேளையில் அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்து, தம்முடைய சுயாதீனப் பிரமாணத்தை நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். ராஜாவாகவும், தீர்க்க தரிசியாகவும் இருக்கிற இயேசுகிறிஸ்து, ஆசாரியராகவும் இருந்து நமக்காக பலிசெலுத்தி, தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷம் சுயாதீனப் பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. சுவிசேஷத்தின் பிரகாரமாக, நாம் பரிபூரணமான விடுதலையோடு தேவனுக்கு ஆராதனை செய்கிறோம். சுயாதீனப்பிரமாணத்தினால் நாம் எல்லோரும் நியாயத்தீர்ப்பு அடையப் போகிறோம். ஆகையினால் சுயாதீனப் பிரமாணத்திற் கேற்றபடி நாம் பேசவேண்டும். அதற்கேற்றபடி நாம் கிரியை நடப்பிக்கவேண்டும். சுவிசேஷமே நம்மை ஆளுகை செய்யவேண்டும். சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரமாணத்திற்குட்பட்டு நாம் பேசவேண்டும். சுவிசேஷத்திற்குட்பட்டுத்தான் கிரியை நடப்பிக்கவேண்டும் (யாக் 2:12).

விசுவாசிகள் இரக்கம் காண்பிக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லையென்றால் தேவன் நமக்கு இரக்கம் காண்பிக்கமாட்டார். இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும். நியாயத்தீர்ப்பு மேன்மையானதா அல்லது இரக்கம் மேன்மையானதா என்று கேட்கும்போது, நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கமே மேன்மை பாராட்டப்படும். இரக்கமே உன்னதமானது. இரக்கமே தமக்குத் தேவையானது.

கிரியையும் விசுவாசமும்
யாக் 2:14

யாக் 2:14. என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு விசுவாசம் மிகவும் அவசியம். ஒரு சில விசுவாசிகளிடத்தில் விசுவாசம் மாத்திரமே இருக்கும். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் நமக்கு இரட்சிப்பு உண்டு. விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். ஆனாலும் நம்முடைய விசுவாசத்தோடு கிரியைகளும் சேர்ந்திருக்கவேண்டும். விசுவாசத்தினால் மாத்திரம் நாம் நீதிமானாக்கப்பட வில்லையென்றும், விசுவாசத்தோடு சேர்ந்த கிரியையினாலேயே நாம் நீதிமானாக்கப்படுகிறோம் என்றும் யாக்கோபு எழுதுகிறார்.

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிற விஷயத்தில் யாக்கோபின் உபதேசமும் பவுலின் உபதேசமும் முரண்பட்டிருப்பது போல தோன்றுகிறது. பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்திலும், கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலும் விசுவாசத்தைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார். நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம் என்பதும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நாம் நீதிமானாக்கப்படுவதில்லை யென்பதும் பவுலின் உபதேசம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது பவுலின் உபதேசமும் யாக்கோபின் உபதேசமும் முரண்பாடுள்ளது போன்று தெரிந்தாலும், அடிப்படையில் இவ்விரண்டு உபதேசங்களும் முரண்படவில்லை. ஒரே சத்தியத்தை இவ்விருவரும் வெவ்வேறு பரிமாணங்களில் உபதேசம் பண்ணுகிறார்கள்.

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதி மானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப்பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப்பிரமாணத்தினாலேயே. ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம் (ரோம 3:23-28).

அப்போஸ்தலர் பவுல் கிரியையைப் பற்றி யாக்கோபு சொல்லுகிறதுபோல சொல்லாமல், வேறொரு பரிமாணத்தில் கிரியையைப்பற்றிச் சொல்லுகிறார். ஆனால் இருவரும் ஒரே விசுவாசத்தைத்தான் சொல்லுகிறார்கள். வேறொரு விசுவாசம் எதுவுமில்லை. கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் மாத்திரமே விசுவாசம்.

மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து செய்கிற கிரியைகளைப்பற்றி பவுல் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக, யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தங்களுக்கு இரட்சிப்பு உண்டு என்று நம்பினார்கள். அப்போஸ்தலர் பவுல் நம்முடைய ஆத்தும இரட்சிப்பைப்பற்றி அவர்களுக்குச் சொல்லுகிறார். நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் நமக்கு இரட்சிப்பு இல்லை. இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் தான் நமக்கு இரட்சிப்பு உண்டு என்று பவுல் தெளிவுபடுத்துகிறார். யாக்கோபு பவுலின் இந்த உபதேசத்திற்கு முரண்படவில்லை.

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து கிரியைகளை நடப்பிக்கவேண்டும் என்று யாக்கோபு சொல்லுகிறார். பவுலும் யாக்கோபும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து நற்கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று பவுலும் யாக்கோபும் ஒன்றுபோலவே உபதேசம்பண்ணுகிறார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரமே நமக்கு இரட்சிப்பு உண்டு என்பதில் மாற்று உபதேசம் எதுவுமில்லை. விசுவாசத்தினாலேயே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். நற்கிரியைகளைச் செய்வதினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. நாம் இரட்சிக்கப் பட்டிருப்பதினால் நற்கிரியைகளைச் செய்ய வேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி கிரியை நடப்பிக்க வேண்டும் என்று நம்பிய யூதர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார். தேவனுடைய பார்வையில் மனுஷருடைய கிரியைகள் பிரயோஜனப்படாது. மனுஷருடைய கிரியைகள் அவர்களைப் பரிசுத்தப்படுத்தாது. நம்முடைய கிரியைகளினால்நாம் நீதிமான்களாக்கப்பட முடியாது. தேவனுடைய பார்வையில் நம்மை நீதிமான்களாக்க நம்முடைய கிரியைகள் போதுமானவையல்ல. இதைத் தெளிவுபடுத்தும்விதமாக, அப்போஸ்தலர் பவுல் விசுவாசத்தினாலே நமக்கு இரட்சிப்பு உண்டு என்றும், கிரியைகளினால் நமக்கு இரட்சிப்பு இல்லையென்றும் உபதேசம் பண்ணுகிறார்.

நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட பின்பு, இரட்சிப்புக்கேற்ற கிரியைகள் நம்மிடம் காணப்படவேண்டும். நம்மிடத்திலிருந்து ஆவியின் கனிகள் வெளிப்பட வேண்டும். நம்முடைய விசுவாசம் கிரியை நடப்பிக்கவேண்டும். ஒரு சிலர் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்ஆனால் அவர்களுடைய ஜீவியத்திற்கும் அவிசுவாசிகளுடைய ஜீவியத்திற்கும் வித்தியாசமில்லாமல் இருக்கிறது. தாங்கள் கர்த்தரை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, எந்த ஒரு நன்மையான கிரியையும் செய்யாமலிருக்கிறார்கள். ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டு என்று சொல்லியும், கிரியைகள் இல்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லையென்றும், அந்த விசுவாசம் அவனை இரட்சிக்காது என்றும் யாக்கோபு தெளிவுபடுத்துகிறார்.

ஒரு சிலர் சுவிசேஷம் தான் மேன்மையானது என்று சொல்லி நியாயப்பிரமாணத்தை தேவையற்றது என்று ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். வேறு சிலரோ நியாயப்பிரமாணம்தான் மேன்மையானது என்று சொல்லி, சுவிசேஷத்தை தேவையற்றது என்று ஒதுக்கி வைத்து விடுகிறார்கள். இவ்விரண்டுமே தப்பான காரியங்கள்தான்.

நீதிமானாக்கப்படுவதைப்பற்றி பவுல் சொல்வதும், யாக்கோபு சொல்வதும் வெவ்வேறான உபதேசங்களாகும். தேவனுக்கு முன்பாக நாம் எப்படி நீதிமானாக்கப்படுகிறோம் என்று பவுல் உபதேசம் பண்ணுகிறார். மனுஷருக்கு முன்பாக நம்முடைய விசுவாசம் எப்படி நீதியாயிருக்கும் என்று யாக்கோபு உபதேசம்பண்ணுகிறார். ஆகையினால்தான் "கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி" என்றும், "நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்" (யாக் 2:18) என்றும் யாக்கோபு சொல்லுகிறார்.

அப்போஸ்தலர் பவுலோ தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதைப்பற்றி சொல்லுகிறார். தேவனுடைய சமுகத்தில் நம்முடைய விசுவாசம் மாத்திரமே நம்மை இரட்சிக்கும், நம்மை நீதிமானாக்கும் என்பது பவுலின் உபதேசம். மனுஷருக்கு முன்பாக நம்முடைய விசுவாசத்தைக் கிரியைகளினால் வெளிப்படுத்தவேண்டும். அப்போதுதான் நம்முடைய விசுவாசம் நீதியுள்ளதாகயிருக்கும் என்பது யாக்கோபின் உபதேசம்.

கிரியையில்லாத விசுவாசத்தினால் நமக்குப் பிரயோஜனமில்லை. கிரியையில்லாத விசுவாசம் நம்மை இரட்சிக்காது. யாக்கோபு இதைப்பற்றி சொல்லும்போது, "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டு என்று சொல்லியும், கிரியைகள் இல்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?" என்று கேட்கிறார்.

நம்மை இரட்சிக்காத விசுவாசம் நமக்குப் பிரயோஜனப்படாது. ஒரு காரியம் நமக்குப் பிரயோஜனமுள்ளதா, அல்லது பிரயோஜனம் இல்லாததா என்பதை நம்முடைய ஆத்தும இரட்சிப்பை வைத்துதான் அளந்துபார்க்கவேண்டும். ஒரு காரியம் நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு உதவியாயிருக்குமென்றால் அது நமக்குப் பிரயோஜனமானது.

எந்தக் காரியமாகயிருந்தாலும், அது நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு அது உதவியாகயிருக்காது என்றால், அது நமக்கு பிரயோஜனமானதல்ல.

கிரியையில்லாத விசுவாசம் யாக் 2 : 15-17

யாக் 2:15. ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது,

யாக் 2:16. உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?

யாக் 2:17. அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.

விசுவாசத்தைப்போலவே அன்பும் கிரியை செய்யவேண்டும். ஒருவர்மீது “அன்பு கூருகிறேன்” என்று வார்த்தையினால் சொன்னால் மாத்திரம் போதாது. நம்முடைய அன்பை கிரியையினால் வெளிப்படுத்தவேண்டும். ஒரு சிலர் வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கலாம். அவர்களிடத்தில் நாம் அன்புகூர்ந்து, “நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாருங்கள்” என்று வெறும் வார்த்தையினால் சொன்னால் அவர்களுக்கு வஸ்திரமோ போஜனமோ கிடைக்கப் போவதில்லை. அன்பான வார்த்தைகளைச் சொல்லுவதோடு, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்ய வேண்டும். கஷ்டப்படுகிறவர்களுக்கு வெறும் வார்த்தைகள் பிரயோஜனப்படாது.

விசுவாசத்தையும் கிரியைகளினால் வெளிப்படுத்த வேண்டும். கிரியைகளில்லாத விசுவாசம் தன்னிலே தானே செத்ததாயிருக்கும். அன்பை கிரியைகளினால் வெளிப்படுத்துவதுபோல, விசுவாசத்தையும் கிரியைகளினால் வெளிப்படுத்த வேண்டும். கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறநாம் நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். நம்மிடத்திலிருந்து ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும். நாம் வெறும் வார்த்தைகளைப் பேசுவதினால் யாருக்கும் பிரயோஜன மில்லை. அதுபோலவே நம்மிடத்தில் விசுவாசம் உண்டு என்று சொல்லியும், நற்கிரியைகளைச் செய்யாமலிருப்போமென்றால், நம்முடைய விசுவாசத்தினால் யாருக்கும் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

நம்முடைய அன்பும் விசுவாசமும் கிரியைகளினால் சோதிக்கப்படும். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடிருக்கிறோம் என்று சொல்லியும், எந்த ஒரு நற்கிரியையும் செய்ய வில்லையென்றால் தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நம்முடைய விசுவாசமும் கீழ்ப்படிதலும் மேன்மையுள்ளதாயிருக்கிறது. அதே வேளையில் மனுஷருக்கு முன்பாக நாம் விசுவாசத்தோடு கிரியை செய்வது தேவையாயிருக்கிறது.

ஒரு சிலர் தங்களிடத்தில் விசுவாசம் மாத்திரம் இருந்தால் போதுமென்று நினைக்கிறார்கள். இந்த விசுவாசம் தங்களை இரட்சிக்கும் என்று நம்புகிறார்கள். நற்கிரியைகளைச் செய்வதைப் பற்றி இவர்கள் சிந்தித்துக் கூட பார்ப்பதில்லை. இவர்களுடைய விசுவாசமும் அன்பும் மாய்மாலமுள்ளது. இவர்களுடைய இருதயம் செத்துப் போயிருக்கிறது. செத்துப் போன இருதயத்தினால் விசுவாசிக்கவும் முடியாது. நன்மை செய்யவும் முடியாது. ஆனால் இவர்களோ தங்கள் இருதயம் மரித்துப்போய்விட்டது என்பது தெரியாமல், தங்கள் இருதயத்தில் விசுவாசமிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நம்மிடத்தில் ஜீவன் இருக்கும்போது நம்முடைய சரீரத்தில் அசைவு உண்டாகும். இருதயத்தில் விசுவாசம் இருக்கும்போது அது நற்கிரியைகளைச் செய்யும்.

கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது
யாக் 2 : 18-20

யாக் 2:18. ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

யாக் 2:19. தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

யாக் 2:20. வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வேறு சிலரோ கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். விசுவாசம் கிரியைகள் இல்லாதிருந்தால் அது தன்னிலே தானே செத்ததாயிருக்கும். கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர், விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவரிடம், "உனக்கு விசுவாச முண்டு, எனக்கு கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்" (யாக் 2:18) என்று சொல்லுவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு விசுவாசமும் வேண்டும். கிரியைகளும் வேண்டும். நம்மிடத்திலுள்ள விசுவாசத்தினிமித்தமாகவோ அல்லது கிரியைகளினிமித்தமாகவோ நாம் பெருமைப்படக் கூடாது. நம்மிடத்தில் காணப்படுகிற கிரியைகள் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தவேண்டும். விசுவாசத்தின் கிரியைகள் தானாகவே நடைபெற வேண்டும். மற்றவர்கள் மத்தியிலே நாம் பெருமைப்பட வேண்டுமென்பதற்காக கிரியை செய்யக் கூடாது. நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கவும் கூடாது.

கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் விசுவாசத்திற்கேற்ற நற்கிரியைகளைச் செய்வார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறவர்கள் ஆவியின் கனிகளை வெளிப்படுத்துவார்கள். நம்மிடத்திலுள்ள விசுவாசத்தை நம்மால் மூடி மறைக்க முடியாது. நற்கிரியைகள் என்னும் ரூபத்தில் நம்முடைய விசுவாசம் எல்லோருக்கும் முன்பாக பிரத்தியட்சமாக வெளிப்படும். நியாயத்தீர்ப்பு நாளிலே தேவன் நம்முடைய விசுவாசத்தையும் பார்ப்பார். விசுவாசத்தினாலே நாம் செய்த நற்கிரியைகளையும் பார்ப்பார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் "தேவன் ஒருவர் உண்டு" என்று விசுவாசிக்கிறோம். இப்படி விசுவாசிப்பது நல்லதுதான். ஆனால் இந்த விசுவாசம் மாத்திரம் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு போதுமானதல்ல. விசுவாசமே அஸ்திபாரம். அஸ்திபாரம் மாத்திரம் இருக்குமென்றால் அது ஒரு முழுமையான கட்டிடமாக இருக்காது. தேவன் ஒருவர் உண்டென்று நாம் விசுவாசிப்பதுபோல, பிசாசுகளும் விசுவாசிக்கிறது. தேவன் ஒருவர் உண்டென்று பிசாசுகள் விசுவாசித்து நடுங்குகின்றன.

கர்த்தரிடத்தில் நாம் விசுவாசம் வைத்து சந்தோஷமாயிருக்கிறோம். தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்கு கர்த்தர் நன்மையான ஈவுகளைக் கொடுப்பார் என்று விசுவாசிக்கிறோம். கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறோம். கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவிக்கிறோம். நம்முடைய ஜீவியத்தில் நற்கிரியைகளைச் செய்கிறோம். கர்த்தரை விசுவாசித்து அவரிடத்தில் சந்தோஷமாயிருக்கிறோம்.

பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கின்றன. ஆனால் அவை பயந்து நடுங்குகின்றன. பிசாசுகள் தேவனுக்கு விரோதமாக துர்க்கிரியைகளைச் செய்கின்றன. தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளினிமித்தமாய், தேவன் தங்களுக்குக் கொடுக்கப் போகிற தண்டனைகளுக்குப் பயந்து பிசாசுகள் நடுங்குகின்றன. பிசாசுகளிடத்தில் பயபக்தியில்லை. பயம் மாத்திரமே இருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிக்கிறோம். தேவனுக்குப் பிரியமான நற்கிரியைகளைச் செய்கிறோம். தேவன் நம்மீது பிரியமாயிருக்கிறார் என்று விசுவாசித்து சந்தோஷப்படுகிறோம். கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறார். அவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தி, பயபக்தியோடு பிரவேசிக்கிறோம்.

நம்முடைய விசுவாசத்திற்கும் பிசாசுகளின் விசுவாசத்திற்கும் வித்தியாசமுண்டு. தேவனிடத்திலிருந்து நாம் செய்கிற நற்கிரியைகளுக்கு வெகுமதி உண்டு என்று விசுவாசித்து, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறோம். ஆனால் பிசாசுகளோ தாங்கள் செய்கிற துர்க்கிரியைகளினிமித்தம் தங்களுக்குத் தண்டனை உண்டு என்று விசுவாசித்து, பயந்து நடுங்குகின்றன.

கிரியைகளிலில்லாத விசுவாசம் செத்தது. கிரியைகளில்லாத விசுவாசத்தை ஒரு சிலர் மேன்மையாக எண்ணுகிறார்கள். யாக்கோபு அவர்களை, "வீணான மனுஷனே" என்று அழைக்கிறார். இவர்கள் செத்துப் போன விசுவாசத்தின்மீது மேன்மை பாராட்டுகிறார்கள். கிரியைகளில்லாத விசுவாசத்தினால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஒரு பிரயோஜனமுமில்லை. கிரியைகளில்லாத விசுவாசத்தினால் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது. கிரியைகளில்லாத விசுவாசமுடையவர்கள் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்கவேண்டும். தாங்கள் வீணான மனுஷராயிருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கிரியைகளில்லாத நம்முடைய விசுவாசம் ஒருவருக்கும் பிரயோஜனமற்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் (யாக் 2:20).

ஆபிரகாம்
யாக் 2 : 21-24

யாக் 2:21. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின் மேல் செலுத்தின போது, கிரியைகளினாலே அல்லவோ, நீதிமானாக்கப்பட்டான்?

யாக் 2:22. விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

யாக் 2:23. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

யாக் 2:24. ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப் படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். ஆபிரகாமின் விசுவாசம் கிரியைகளில்லாத விசுவாசமல்ல. அவர் விசுவாசத்தினாலே கிரியைகளைச் செய்தார். ஆபிரகாமின் விசுவாசம் அவருடைய கிரியைகளோடு முயற்சி செய்தது. கிரியைகளினாலே ஆபிரகாமின் விசுவாசம் பூரணப்பட்டது (யாக் 2:22).

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. அவர் தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டார் (யாக் 2:23). ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின்மேல் செலுத்தின போது, கிரியைகளினால் நீதிமானாக்கப்பட்டார். அவரிடத்திலிருந்த விசுவாசம், அவருடைய கிரியைகளோடு கூட முயற்சி செய்தது. இந்தக் கிரியைகளினால் அவருடைய விசுவாசம் பூரணப்பட்டது.

கர்த்தரை விசுவாசிப்பது விசுவாசம். கர்த்தரை விசுவாசித்து அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது கிரியை. நாம் கர்த்தரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படியாமல் போனால் நமக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நாம் விசுவாசத்தினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். நம்மிடத்திலுள்ள விசுவாசம் நற்கிரியைகளைச் செய்துகொண்டேயிருக்க வேண்டும்.

நாம் ஆபிரகாமின் ஆசீர் வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாக யிருக்கிறோம். ஆபிரகாமிடத்தில் காணப்பட்ட அதே விசுவாசம் நம்மிடத்திலும் காணப்பட வேண்டும். ஆபிரகாமின் விசுவாசம் அவருடைய கிரியைகளோடுகூட முயற்சி செய்தது. ஆபிரகாமின் சந்ததியில் வந்திருக்கிற நம்மிடத்திலும் கிரியைகளோடுகூடிய விசுவாசம் காணப்படவேண்டும்.

நாம் விவாசத்தோடு நற்கிரியைகளைச் செய்யும்போது தேவன் நம்மைக்குறித்து நற்சாட்சி கொடுப்பார். ஆபிரகாமை தேவன் தம்முடைய சிநேகிதர் என்று அழைத்தார். நாமும் விசுவாசத்தினாலே கிரியை செய்யும்போது, தேவன் நம்மையும் தம்முடைய சிநேகிதர் என்று அழைப்பார். நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுப்பார்.

நம்மிடத்தில் கிரியைகளில்லாத விசுவாசமிருக்குமென்றால் நம்முடைய கற்பனைகளில்தான் நாம் கனிகளைக் கொடுப்போம். நாம் கொடுக்கிற கனி மெய்யான கனியாக இருக்காது. இது கற்பனையான கனியாக இருக்கும். கற்பனை நிலையானதல்ல. இது ஒரு மாய்மாலம். கற்பனை மனுஷரை வஞ்சிக்கும். சத்தியமே நமக்கு ஜீவனைக் கொடுக்கும். கிரியைகளில்லாத விசுவாசமுள்ளவர்கள் ஆவியின் கனியைக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் கற்பனையான கனிகளை மாத்திரமே கொடுப்பார்கள்.

கற்பனையான கனி என்பது வெறும் வார்த்தைகளைக் குறிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் விசுவாசத்தினால் பேசுவார்கள். ஆனால் விசுவாசத்தினால் கிரியை செய்யமாட்டார்கள். வஸ்திரமும் அநுதின ஆகாரமும் இல்லாதவர்களைப் பார்த்து, "குளிர்காய்ந்து பசியாறுங்கள், சமாதானத்தோடே போங்கள்" என்று வார்த்தையினால் மாத்திரம் சொல்லுவார்கள். அவர்களுக்கு வஸ்திரமோ போஜனமோ கொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் கற்பனையாக உதவி செய்கிறார்கள். பிரத்தியட்சமாக உதவி செய்வதில்லை. கற்பனையான உதவியினால் யாருக்கும் ஒரு நன்மையுமில்லை. இப்படிப்பட்ட வர்களுடைய விசுவாசமும் வீணாகயிருக்கிறது. இவர்களும் வீணான மனுஷராகயிருக்கிறார்கள். கிரியைகளில்லாத செத்த விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு அதை மேன்மை பாராட்டுகிறார்கள்.

கிரியைகளுள்ள விசுவாசம் நாளுக்கு நாள் வளர்ச்சி பெறும். அது பூரணப்படும். நம்மிடத்திலுள்ள விசுவாசம் நம்முடைய கிரியைகளோடுகூட முயற்சி செய்யும். விசுவாசத்தினால் நாம் செய்கிற கிரியைகளின் நிமித்தம் நம்மிடத்திலுள்ள விசுவாசம் பூரணப்படும். விசுவாசத்தின் கிரியைகள் நம்முடைய விசுவாசத்தின் பூரண வளர்ச்சிக் கேதுவாக வழிநடத்துகிறது. விசுவாசத்தின் சத்தியம் நம்மை விசுவாசத்தினால் கிரியை செய்ய வைக்கிறது. நம்மிடத்தில் கிரியை செய்கிற விசுவாசம் காணப்படும்போது, நாமும் ஆபிரகாமைப்போல, தேவனுடைய சிநேகிதராயிருப்போம்.

ராகாப்
யாக் 2:25

யாக் 2:25. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே ஆபிரகாம் விசுவாசத்திற்கு சிறந்த முன்மாதிரியாக ஜீவித்தார். கர்த்தர் அவரை அழைத்த போது, தான் செல்லுமிடம் இன்னதென்று தெரியாமலேயே, கர்த்தருடைய அடிச்சுவடுகளை விசுவாசத்தினாலே பின்பற்றினார். தன்னுடைய ஜீவியகாலத்தில் பரிசுத்தராய் ஜீவித்தார்.

யாக்கோபு ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றி இங்கு சொல்லுகிறார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று குறிப்பிடுகிறார். தேவனுக்கு முன்பாக அவர் பரிசுத்தமாய் ஜீவித்தார். அதனால் அவர் தேவனுடைய சிநேகிதரென்று அழைக்கப்பட்டார்.

யாக்கோபு ஆபிரகாமைப் பற்றிச் சொல்லிவிட்டு ராகாப்பைப்பற்றியும் சொல்லுகிறார். ராகாப் பரிசுத்தமாய் ஜீவிக்கவில்லை. இவள் ஒரு வேசி. இவள் கிரியைகளினால் பாவம் செய்தவள். ஆனாலும் இவள் விசுவாசத்தினால் தூதர்களை ஏற்றுக் கொண்டாள். அவர்களை வேறு வழியாய் அனுப்பிவிட்டாள். இவளுடைய கிரியைகளினால் இவள் நீதியுள்ளவளாக்கப்பட்டாள்.

நம்மிடத்தில் விசுவாசம் இருக்கும் போது அது கிரியை செய்யாமல் சும்மாயிருக்காது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது, நாம் கர்த்தருக்காக எதையாவது செய்ய வேண்டுமென்று விரும்புவோம். நம்மையே தியாகம் செய்து தேவனுடைய பலிபீடத்திலே நம்மை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க முன்வருவோம்.

ராகாபின் பழைய ஜீவியம் பாவம் நிறைந்தது. கர்த்தர் அவளுடைய பழைய பாவங்களையெல்லாம் மன்னித்தார். இப்போது அவள் புதுஜீவனைப் பெற்றிருக்கிறாள். விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறாள். விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டாலும், தன்னுடைய இரட்சிப்பை கிரியைகளினால் வெளிப்படுத்துகிறாள். கர்த்தரை விசுவாசித்து, தூதர்களை ஏற்றுக் கொண்டு, வேறு வழியாய் அனுப்பிவிட்டாள். ராகாப் விசுவாசிக்கவும் செய்கிறாள். கிரியையும் நடப்பிக்கிறாள். ஆகையினால்மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்.

ஆவியில்லாத சரீரம்
யாக் 2:26

யாக் 2:26. அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

நாம் எவ்வளவுதான் கிரியை நடப்பித்தாலும், நம்மிடத்தில் விசுவாசம் இல்லையென்றால், நம்முடைய கிரியைகளெல்லாம் செத்தாகவே இருக்கிறது. நம்மிடத்தில் விசுவாசம் இருக்கும்போது தான் நாம் செய்கிற கிரியைகள் நற்கிரியைகளாக இருக்கும்.

நம்முடைய விசுவாசம் கிரியைகளில்லாமல் இருக்குமென்றால் அந்த விசுவாசமும் செத்தாகவே இருக்கிறது. மரத்திலுள்ள வேர் செத்துப்போனால், அது பசுமையாக வளராது. செத்துப்போன வேர் கனிதராது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விசுவாசமே வேராக இருக்கிறது. நற்கிரியைகள் கனிகளாக இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, நம்முடைய வேர் ஜீவனுள்ளதாகயிருக்கவேண்டும். நாம் கனிகொடுக்கவேண்டும். நம்மிடத்தில் இவ்விரண்டும் காணப்படவேண்டும்.

வேர் உயிரோடில்லையென்றால் கனியில்லை. அதே வேளையில் மரத்தில் கனியில்லையென்றால் வேரில் உயிரில்லை. மரத்தில் வேரும் வேண்டும். கனியும் வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசமும் வேண்டும் கிரியையும் வேண்டும். ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது. அதுபோலவே கிரியைகளில்லாத விசுவாசமும் செத்தாயிருக்கிறது.

3 அதிகாரம்

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய நாவுகளை அடக்கி ஆளுகை செய்யவேண்டும் (யாக் 3:1-12). நாம் பெருமைப்படாமல் தாழ்மையாயிருப்பதே மெய்யான ஞானம். பூமிக்குரிய ஞானத்திற்கும் ஆவிக்குரிய ஞானத்திற்கும் வித்தியாசமுண்டு (யாக் 3:13-18).

போதகராகாதிருப்பீர்களாக யாக் 3 : 1,2

யாக் 3:1. என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.

யாக் 3:2. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.

கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசத்தினால் நமக்கும், மற்றவர்களுக்கும் எந்தவிதமான பிரயோஜனமுமில்லை. நம்மிடத்தில் கிரியைகளிலில்லாத விசுவாசம் இருக்குமென்றால் நம்முடைய பேச்சிலும் செயலிலும் சுத்தம் இருக்காது. நம்முடைய நாவை நாம் அடக்கி ஆளுகை செய்யமாட்டோம். கோபத்தைக் கட்டுப்படுத்தமாட்டோம். ஆகையினால் ஒவ்வொரு விசுவாசியும் விசுவாசத்தினாலே கிரியை நடப்பிக்கவேண்டும். நம்முடைய நாவுகளை நாம் அடக்கி ஆளுகை செய்யவேண்டும்.

நம்முடைய நாவு மற்றவர்களை அடக்கி ஆளுகை செய்யக்கூடாது. நமக்கு மாத்திரமே பெரிதான அதிகாரம் இருக்கிறது என்று நினைத்து, மற்றவர்களை எப்போதும் அடக்கி ஆளுகை செய்துகொண்டேயிருக்கக் கூடாது. நாம் மாத்திரமே புத்திமான்கள் என்று நினைத்து மற்றவர்களுக்கு எப்போதும் புத்திச்சொல்லிக்கொண்டே யிருக்கக்கூடாது. நம்முடைய நாவு நமக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். நாம் நம்முடைய நாவுக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கூடாது. நம்முடைய நாவை நாமே ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய நாவு நம்மை ஆளுகை செய்ய இடங்கொடுக்கக்கூடாது.

யாக்கோபு இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, "உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று ஆலோசனை சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு "உங்களில் அநேகர் ஆசிரியர்களாகாதிருப்பீர்களாக அல்லது உபதேசியார்களாகாதிருப்பீர்களாக"என்றும் பொருள் சொல்லலாம். நம்மிடத்தில் தாழ்மையின் ஆவி இருக்கவேண்டும். நாம் மற்றவர்களுக்கு கற்றுக்கொடுப்பதை விட, மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும்.

மற்றவர்களை நியாயந்தீர்க்கிறவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள். நாம் மற்றவர்களை எந்த அளவினாலே நியாயந் தீர்க்கிறோமோ அந்த அளவினாலே நாமும் நியாயந்தீர்க்கப்படுவோம். "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" (மத் 7:1-5).

நாமெல்லோருமே பாவிகளாகவே இருக்கிறோம். நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். நம்முடைய தப்பிதங்களையும், நம்முடைய பாவங்களையும் நாம் ஆராய்ந்து பார்த்து மனந்திரும்பவேண்டும். நம்முடைய தப்பிதங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாமல் மற்றவர்களை நியாயந்தீர்ப்பது நமக்கு நல்லதல்ல. நம்மை நாமே நிதானித்து அறியும்போது, நாம் மற்றவர்களை தேவையில்லாமல் நியாயந்தீர்க்கமாட்டோம்.

மற்றவர்களை நியாயந்தீர்க்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள். தங்களை நியாயாதிபதியின் ஸ்தானத்தில் அமரச்செய்கிறார்கள். கர்த்தர் கொடுக்காத அதிகாரத்தினால் இவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறார்கள். இந்த அதிகாரத்தை இவர்கள் தங்களுக்குத் தாங்களே கொடுத்துக்கொண்டார்கள். மற்றவர்களை நியாயந்தீர்க்கிற விஷயத்தில் இவர்களுடைய நாவும் இவர்களோடு ஒத்துப்போகிறது. இவர்களுடைய ஆசை இவர்களுடைய நாவை வழிநடத்துகிறது.

ஒருவன் சொல் தவறாதவனாக யிருப்பானென்றால் அவன் பூரண புருஷனாகயிருப்பான். இப்படிப்பட்டவன் தன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருப்பான். சொல் தவறுகிறவனோ குறைவுள்ளவன். இவனுடைய கண்கள் மற்றவர்களிடத்திலுள்ள குறைகளை மாத்திரம் பார்க்கும். தன்னிடத்திலுள்ள குறைகளை காணமுடியாதவாறு, இவனுடைய கண்கள் மங்கிப்போயிருக்கும்.

கடிவாளமும் சுக்கானும் யாக் 3 : 3,4

யாக் 3:3. பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.

யாக் 3:4. கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

நம்முடைய நாவை நாம் ஆளுகை செய்தால் மாத்திரமே நம்முடைய சொல் தவறாததாயிருக்கும். சொல் தவறாதவர்கள் மாத்திரமே பூரணபுருஷரா யிருப்பார்கள். நம்முடைய சரீரம் முழுவதும் நம்முடைய ஆளுகைக்குட் பட்டிருக்கும். ஒருவன் தன்னை பக்தியுள்ளவன் என்று சொல்லிக்கொண்டு, தன்னுடைய நாவை அவனால் அடக்க முடியவில்லையென்றால், அவனுடைய பக்தி வீணாயிருக்கும். அவன் மாய்மாலக்காரனாகயிருப்பான்.

அதிகமான வார்த்தைகளைப் பேசுகிறவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தாமல் உயர்த்துவார்கள். தங்கள் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளாமல் தங்களைப்பற்றி உயர்வாகப் பேசுவார்கள். இவர்கள் சாதாரண விசுவாசிகளாகயிருந்தாலும் தங்களை உத்தம புருஷர்கள் என்று பெருமையாய்ப் பேசுவார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கள் முதிர்ச்சியடைந்துவிட்டதாக சுயபெருமை பேசுவார்கள். ஆனால் இவர்களிடத்தில் மெய்யான விசுவாசமுமில்லை, மெய்யான பக்தியுமில்லை. இவர்களிடத்தில் இல்லாததை இவர்களுடைய நாவு இருப்பதாகச் சொல்லுகிறது. பொய் சொல்லுகிறது.

நம்முடைய நாவை அடக்குவதற்கு நமக்கு தேவனுடைய ஞானமும் கிருபையும் தேவை. தேவனுடைய கிருபை நம்மை ஆளுகை செய்யவேண்டும். அப்போதுதான் நம்முடைய கிரியைகளெல்லாம் நமக்குக் கட்டுப்பட்டிருக்கும். நம்முடைய சரீரம் முழுவதையும் நம்மால் அடக்க முடியும். நம்முடைய நாவை அடக்க முடியும். நம்முடைய பேச்சையும் நம்மால் அடக்க முடியும். யாக்கோபு இந்தச் சத்தியத்தை இரண்டு எடுத்துக்காட்டுக்களினால் விவரிக்கிறார். அவையாவன : 1. குதிரைகளின் கடிவாளம் 2. கப்பலின் சுக்கான்.

குதிரைகளின் வாய்களில் கடிவாளம் போட்டிருப்பார்கள். குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடினாலும், கடிவாளம் அவைகளை கீழ்ப்படிய வைக்கும். கடிவாளம் நம்முடைய கையிலிருக்கும் போது, குதிரை எவ்வளவு வேகமாக ஓடினாலும், அதன் முழுசரீரத்தையும் நம்மால் திருப்பி நடத்த முடிகிறது. கடிவாளத்தின் உதவியினால் குதிரைகள் நமக்குக் கீழ்ப்படிகிறது. குதிரைக்கு கடிவாளம் இல்லையென்றால் அது கட்டுக்கடங்காமல் ஓடும். நம்மால் அதை கட்டுப்படுத்தவே முடியாது.

கடிவாளம் போடப்படாத குதிரை தனக்கு இஷ்டமான திசையிலே, தனக்கு இஷ்டமான வேகத்திலே ஓடும். கடிவாளமோ குதிரையை நமக்குக் கீழ்ப்படுத்துகிறது. வேகமாக ஓடுகிற குதிரையை கடிவாளத்தினால் திருப்பி நடத்த முடிகிறது.

குதிரைக்கு கடிவாளம் போடப்படுவது போல நம்முடைய நாவுக்கும் கடிவாளம் போடப்படவேண்டும். நாவும் குதிரையைப் போல கட்டுப்பாடில்லாமல் பேசும். கடிவாளமில்லாத குதிரையில் நாம் ஏறிப்போனால் அது நம்மையே கீழே தள்ளிவிடும். அதுபோலவே கடிவாளமில்லாத நாவு நம்மையே ஆபத்தில் தள்ளிவிடும். நாவினுடைய வார்த்தையின் மூலமாய் நமக்கு அழிவு வரும். ஆகையினால் நாவைக் கட்டுப் படுத்துவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

கப்பல்கள் உருவத்தில் மகா பெரியவைகளாயிருக்கிறது. இந்தக் கப்பலில் மிகவும் சிறிதான சுக்கானும் இருக்கும். கப்பல்கள் கடலில் போகும்போது கடும்காற்றுக்கள் அதின்மேல் மோதும். பெருங்காற்றில் கப்பல் தத்தளிக்கும். கப்பல் பெரிதாகயிருந்தாலும், ஒரு மாலுமி தன்னுடைய இஷ்டப்பிரகாரம் அதை வழிநடத்திச் செல்லுகிறார். மாலுமிக்கு அந்தக் கப்பலிலுள்ள சிறிதான சுக்கான் உதவியாயிருக்கிறது. மாலுமி எந்த இடத்திற்குப் போகவேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்த இடத்திற்கு நேராக சிறிதான சுக்கானாலே பெரிதான கப்பலை திருப்பி வழிநடத்துகிறார்.

மகா பெரிய கப்பலிலே சுக்கான் மிகவும் சிறிய கருவி தான். அதுபோலவே நம்முடைய முழுசரீரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய நாவு மிகச்சிறிய அவயவம் தான். கப்பலிலுள்ள சுக்கானை சரியாக கட்டுப்படுத்தினால், மிகப்பெரிய கப்பலும் மாலுமியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். அதுபோலவே நம்முடைய நாவையும் நாம் சரியாக கட்டுப்படுத்தினால், அதன் வார்த்தைகளெல்லாம் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

இப்பிரபஞ்சத்தில் சில பொருட்கள் அளவில் சிறியதாகயிருக்கும். ஆனாலும் அவை மிகவும் பிரமாண்டமான வேலைகளைச் செய்யும். நம்முடைய கர்த்தர் சர்வசிருஷ்டிகர். அவர் சகலத்தையும் சிருஷ்டித்தவர். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, நாம் நம்முடைய நாவை அடக்குவதற்குப் பழகவேண்டும். நம்முடைய நாவு பெரிய நன்மைகளையும் செய்யும்.

அதே நாவு பெரிய தீமைகளையும் செய்துவிடும். ஆகையினால் நம்முடைய நாவை நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டும். மாலுமி சுக்கானை இயக்கத் தெரிந்தவர். குதிரை வீரர் கடிவாளத்தைப் பிடிக்கத் தெரிந்தவர். அதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் நம்முடைய நாவை அடக்கி ஆளுகை செய்யத் தெரிந்திருக்கவேண்டும்.

நாவானது சிறிய அவயவம் யாக் 3:5,6

யாக் 3:5. அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமை யானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!

யாக் 3:6. நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடு கிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!

கட்டுப்படாத நாவினால் நமக்கு பல தீங்குகள் உண்டாகும். நாவின் மூலமாய் ஏராளமான அநீதி உண்டாகும். ஆகையினால் நாவு "அநீதி நிறைந்த உலகம்" என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய நாவானது சிறிய அவயவமாயிருந்தும், அது நம்முடைய முழுச்சரீரத்தையும் கறைப்படுத்திவிடுகிறது.

நம்முடைய சரீரம் பாவம் செய்வதற்கு நம்முடைய நாவே காரணமாகயிருக்கும். அது நம்முடைய ஆயுள் சக்கரத்தையே கொளுத்திவிடுகிறது. மனுஷருடைய நாவினால் சமுதாயத்தில் அமைதி கெட்டுப்போகிறது. சிநேகம் கெட்டுப்போகிறது. மனுஷருக்குள்ளே பகையும் சண்டையும் வந்துவிடுகிறது.

நாவு நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. நம்முடைய நாவு நமக்கு எவ்வளவு தீங்கு செய்யும் என்று நமக்கே தெரியாது. ஒரு சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது. அதுபோலவே நம்முடைய நாவு சிறிய அவயவமா யிருந்தும், நம்முடைய ஆயுள் சக்கரம் முழுவதையும் கொளுத்திவிடுகிறது. மனுஷருடைய நாவு நரக அக்கினியினால் கொளுத்தப்படும்போது, நரகத்தின் சுபாவம் தாராளமாய் வெளிப்படும். நம்முடைய பேச்சின் மூலமாய் பகை, பொறாமை, சண்டைகள் போன்றவை தாராளமாய் உண்டாகும். இவையெல்லாம் பிசாசின் கிரியைகள்.

நம்முடைய நாவு அக்கினியைக் கொளுத்துகிறபோது, அதனால் நமக்கு பிரயோஜனம் உண்டாவதில்லை. நாவு நரக அக்கினியைக் கொளுத்துகிறது. நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது. நம்முடைய நாவை நாம் கட்டுப்படுத்தி ஆளுகை செய்யவில்லையென்றால், நாம் இருக்குமிடம் நரகம் போலவே இருக்கும். நம்மிடத்தில் சண்டைகள் உண்டாகும். கோபங்களும் பொறாமைகளும் உண்டாகும். வாக்குவாதங்களும், பேதங்களும் உண்டாகும். இவையெல்லாம் நரகத்தின் கிரியைகள். நம்முடைய நாக்கு கட்டுப்பாட்டில் இல்லையென்றால் அது நரகத்தின் கருவியாக செயல்பட்டு எல்லோருக்கும் தீமை செய்யும்.

இப்பிரபஞ்சத்தில் சில பொருட்கள் அளவில் சிறியதாகயிருக்கும். ஆனாலும் அவை மிகவும் பிரமாண்டமான வேலைகளைச் செய்யும். நம்முடைய கர்த்தர் சர்வசிருஷ்டிகர். அவர் சகலத்தையும் சிருஷ்டித்தவர். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, நாம் நம்முடைய நாவை அடக்குவதற்குப் பழகவேண்டும். நம்முடைய நாவு பெரிய நன்மைகளையும் செய்யும்.

அதே நாவு பெரிய தீமைகளையும் செய்துவிடும். ஆகையினால் நம்முடைய நாவை நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டும். மாலுமி சுக்கானை இயக்கத் தெரிந்தவர். குதிரை வீரர் கடிவாளத்தைப் பிடிக்கத் தெரிந்தவர். அதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் நம்முடைய நாவை அடக்கி ஆளுகை செய்யத் தெரிந்திருக்கவேண்டும்.

நாவானது சிறிய அவயவம் யாக் 3:5,6

யாக் 3:5. அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!

யாக் 3:6. நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!

கட்டுப்படாத நாவினால் நமக்கு பல தீங்குகள் உண்டாகும். நாவின் மூலமாய் ஏராளமான அநீதி உண்டாகும். ஆகையினால் நாவு “அநீதி நிறைந்த உலகம்” என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய நாவானது சிறிய அவயவமாயிருந்தும், அது நம்முடைய முழுச்சரீரத்தையும் கறைப்படுத்திவிடுகிறது.

அடங்காத பொல்லாங்குள்ளது யாக் 3 : 7,8

யாக் 3:7. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு.

யாக் 3:8. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.

நாவை அடக்குவது எளிதான காரியமல்ல. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளது. நாவில் சாவுக்கேதுவான விஷம் நிரம்பியிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் சகலவிதமான மிருகங்களும், பறவைகளும், ஊரும் பிராணிகளும், நீர்வாழும் ஜந்துக்களும் உள்ளன. இந்த சிருஷ்டிகளில் பல கொடூரகுணமுள்ளவை. இவற்றை யாராலும் அடக்க முடியாது. தேவன் தம்முடைய அற்புதத்தை வெளிப்படுத்தினால் மாத்திரமே கொடிய மிருகங்களை நம்மால் அடக்கி ஆளுகை செய்யமுடியும்.

மிருகங்கள், பறவைகள் ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜந்துக்கள் ஆகியவற்றை மனுஷர்கள் அடக்குகிறார்கள். மிருகங்களின் சுபாவங்கள் மனுஷசுபாவத்தால் அடக்கப்படுகிறது. சில சமயங்களில் மிருகங்கள் மனுஷரை அடக்கிவிடும். மிருகசுபாவத்திற்கு முன்பாக மனுஷசுபாவம் அடக்கப்படும். நம்முடைய நாவோ மிருகசுவாபத்தைவிட கொடியது.

மனுஷன் தன் யுக்தியினால் கொடிய மிருகங்களை அடக்கிவிடுகிறான். ஆனால் அவனால் தன்னுடைய நாவை அடக்கமுடியவில்லை. நாவை அடக்கக்கூடிய யுக்தி மனுஷனுக்குத் தெரியவில்லை. ஆகையினால் ஒரு மனுஷனாலும் தன்னுடைய நாவை அடக்க முடியவில்லை.

"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது" என்று யாக்கோபு சொல்லும்போது, நாவை அடக்குவது இயலாத காரியம் என்று பொருள்படுமாறு சொல்லவில்லை. நாவை அடக்குவது கடினமான காரியம் என்று பொருள்படுமாறே இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார். ஆகையினால் நாவை அடக்குவதற்கு மிகுந்த கவனம் தேவை. நாம் அதிக சிரமப்பட்டுத்தான் நாவை அடக்க முடியும். நம்முடைய நாவை அடக்குவதற்கு நாம் அதிகமாய் ஜெபம்பண்ணவேண்டும். தேவகிருபையைப் பெற்றுக்கொண்டு நம்முடைய நாவை நாம் அடக்கவேண்டும்.

நம்முடைய நாவு சிறிய அவயவமாயிருக்கிறது. ஆனாலும் அது அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. நாவு எப்போது விஷத்தைக் கக்குமென்று நமக்கே தெரியாது. விஷம் கக்கப்பட்டால் அதன் பாதிப்பு நிச்சயமாகவே இருக்கும். ஆகையினால் நாவை அடக்குவது மிகவும் அவசியம்.

நம்முடைய நாவு அடங்காத பொல்லாங்குள்ளது. பொல்லாங்கான காரியங்களை அதிகமாய்ப் பேசக்கூடியது. நாவு சிறிய அவயவமாயிருந்தும் அது பெருமையானவைகளைப் பேசும். நம்முடைய முழுசரீரத்தையும் அது கறைப்படுத்திவிடும். நம்முடைய நாவை நாம் ஆளுகைசெய்யவில்லையென்றால் அது நம்முடைய ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடும்.

துதித்தலும் சபித்தலும் யாக் 3 : 9-12

யாக் 3:9. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

யாக் 3:10. துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

யாக் 3:11. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?

யாக் 3:12. என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது.

நம்முடைய நாவு அடங்காத பொல்லாங்குள்ளதாயிருந்தாலும், தேவனுடைய கிருபையினாலே நாம் அதை அடக்கவேண்டும். நம்முடைய பக்திவிருத்திக்கேதுவாக நம்முடைய நாவை பயன்படுத்தவேண்டும். கர்த்தரைத் துதிப்பதற்கும், அவரை ஆராதிப்பதற்கும் நம்முடைய நாவு பயன்படவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் நம்முடைய நாவு பிரயோஜனமுள்ளதாயிருக்கவேண்டும்.

நம்முடைய நாவினாலே பக்திவிருத்திகேதுவான வார்த்தைகளைப் பேசமுடியும். அதே வேளையில் இதே நாவினாலே மனுஷரை தூஷித்து சபிக்கவும் முடியும். நம்முடைய நாவினால் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. ஆனால் இப்படியிருக்கலாகாது. இது இயற்கையின் பிரமாணத்திற்கு முரண்பட்ட சுபாவம். தேவனைத் துதிக்கிற நம்முடைய நாவு, தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கக்கூடாது.

ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பான தண்ணீரும், கசப்பான தண்ணீரும் சுரப்பதில்லை. அத்திமரம் ஒலிவப்பழங்களைக் கொடுப்பதில்லை. திராட்சச்செடி அத்திப்பழங்களைக் கொடுப்பதில்லை. உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுப்பதில்லை. ஒவ்வொன்றும் தன் சுபாவத்தின்படி கிரியை செய்யும். இதுவே இயற்கையின் பிரமாணம். உவர்ப்பான நீரூற்று உவர்ப்பான ஜலத்தைத்தான் கொடுக்கும். ஆனால் மனுஷனுடைய நாவோ இயற்கையின் பிரமாணத்திற்கு முரண்பட்டு தாறுமாறாகக் கிரியை செய்கிறது. துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. ஒரே நாவு பிதாவாகிய தேவனைத் துதிக்கிறது. அதே நாவு தேவசாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கிறது.

நம்மிடத்தில் மாறுபாடுள்ள கிரியைகள் இருக்குமென்றால் நம்மால் தேவகிருபையைப் பெற்றுக்கொள்ளமுடியாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தெளிவு இருக்கவேண்டும். முரண்பாடு இருக்கக்கூடாது. நம்முடைய வார்த்தைகளிலும் கிரியைகளிலும் ஒழுங்கும் கிரமமும் காணப்படவேண்டும். ஒருபோதும் முரண்பாடு இருக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சொல் தவறாதவர்களாகயிருக்கவேண்டும். நாம் நம்முடைய நாவை கடிவாளத்தினாலே அடக்கவேண்டும். நம்முடைய நாவு நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாமே நம்முடைய நாவை ஆளுகை செய்யவேண்டும்.

ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் யாக் 3:13

யாக் 3:13. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

ஒரு சிலர் தங்களிடத்தில் ஞானம் இல்லாமலிருந்தாலும் அவர்கள் தங்களை ஞானிகளாகவும், விவேகிகளாகவும் காண்பித்துக்கொள்வார்கள். ஞானத்தில் இரண்டு வகை உண்டு. அவையாவன :
1.லௌகீக சம்பந்தமான ஞானம்
2. பரத்திலிருந்து வருகிற ஞானம்.

ஒருவரிடத்தில் அறிவும் ஞானமும் இருப்பதினால் அவர் ஞானியாகி விடுவதில்லை. ஒரு சில காரியங்களைப் பற்றி நமக்குத் தெரிந்திருப்பதினால் மாத்திரம் நாம் புத்திசாலிகளல்ல. நமக்கு இருக்கிற அறிவையும் ஞானத்தையும் நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை வைத்தே நாம் ஞானியாகவும் விவேகியாகவும் இருக்கிறோம். ஞானியும் விவேகியுமாயிருக்கிறவர்கள், தங்கள் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே, தங்கள் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கவேண்டும்.

ஞானியிடம் ஞானமும் இருக்க வேண்டும். நல்ல நடக்கையும் இருக்கவேண்டும். இவை இரண்டும் சேர்ந்திருந்தால்தான் அது மெய்யான ஞானம். நாம் மற்றவர்களைவிட அதிக ஞானமுள்ளவர்களாக இருக்கலாம். நாம் அதிகமாகப் படித்திருக்கலாம். நம்முடைய ஞானத்தை நம்முடைய அறிவை வைத்து அளக்கக்கூடாது. நம்முடைய ஞானம் நல்ல நடக்கையினாலே வெளிப்படுத்தப் படவேண்டும். நம்மிடத்தில் ஞானமுண்டு என்று சொல்லிக்கொண்டு, நாம் நல்ல நடக்கையை காண்பிக்கவில்லையென்றால் நம்மிடத்தில் மெய்யான ஞானமில்லை. நாம் ஞானம் என்று சொல்வது வீணான ஞானமாயிருக்கும்.

நம்முடைய வாயின் வார்த்தைகளினால் நம்மிடத்திலுள்ள ஞானத்தை வெளிப்படுத்தினால் போதாது. நம்மிடத்திலுள்ள ஞானத்தை நல்ல கிரியைகளினாலும் வெளிப்படுத்த வேண்டும். நம்மிடத்திலுள்ள ஞானத்திற்குரிய சாந்தத்தோடே, நம்முடைய கிரியைகளை, நல்ல நடக்கையினாலே காண்பிக்கவேண்டும்.

விவேகமாக சிந்திக்கிறவர்கள், ஞானமாக சிந்திக்கிறவர்கள் எல்லோரும் விவேகியும் ஞானியும் ஆகிவிடுவதில்லை. அல்லது ஞானியைப்போல பேசுகிறவர்களும், விவேகியைப்போல பேசுகிறவர்களும் உண்மையிலேயே ஞானிகளோ அல்லது விவேசிகளோ அல்ல. நம்முடைய கிரியைகள் ஞானமுள்ளதாகயிருக்கவேண்டும். நம்முடைய ஜீவியம் விவேகமுள்ளதாகயிருக்கவேண்டும். நம்முடைய பேச்சோடு நம்முடைய கிரியைகளும் நல்ல நடக்கையுள்ளவையாக இருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஞானமும் விவேகமும் மெய்யானதாகயிருக்கும்.

மெய்யான ஞானமுள்ளவர்கள் பெருமைப்படமாட்டார்கள். அவர்களிடத்தில் பெருமையின் ஆவி இருக்காது. அவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருப் பார்கள். அவர்களுடைய இருதயத்தில் தாழ்மையின் ஆவி நிரம்பியிருக்கும். எளிதில் கோபப்படமாட்டார்கள். நீடிய பொறுமையோடிருப்பார்கள்.

மெய்யான ஞானமுள்ளவர்கள் தங்களுடைய கோபத்தைக் கடிவாளம் போட்டு ஞானமாய் அடக்குவார்கள். மற்றவர்கள் தங்கள்மீது கோபப்படும்போது நீடிய பொறுமையினாலே அவர்களுடைய கோபத்தை ஞானமாய்ச் சகித்துக்கொள்வார்கள். நாம் அமைதலுள்ளவர்களாகவும், மனத்தாழ்மை யுள்ளவர்களாகவும் இருக்கும்போது மற்றவர்கள் சொல்லுகிற ஆலோசனைகளை பொறுமையோடு கேட்போம். நாமும் மற்றவர்களோடு ஞானத்தோடும் விவேகத்தோடும் பேசுவோம். ஞானம் மனத்தாழ்மையை கொடுக்கிறது. மனத்தாழ்மை ஞானத்தை விருத்தியடைச்செய்கிறது.

லௌகிக சம்பந்தமான ஞானம் யாக் 3 : 14-16

யாக் 3:14. உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள்.

யாக் 3:15. இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.

யாக் 3:16. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

ஒரு சிலர் தங்களை ஞானமுள்ள வர்களென்று சொல்லுவார்கள். ஆனால் அவர்களுடைய பேச்சுக்கும் நடத்தைக்கும் சம்பந்தம் இருக்காது. பேச்சிலும் கிரியையிலும் அவர்கள் முரண்பட்டிருப் பார்கள். ஞானமுள்ளவர்கள் மனத்தாழ்மை யோடிருப்பார்கள். ஒரு சிலர் தங்களை ஞானிகளென்றும், விவேகிகளென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்திலோ கசப்பான வைராக்கியமும் விரோதமும் நிரம்பியிருக்கிறது. தங்களுடைய ஞானத்தைப்பற்றி வீண்பெருமை பாராட்டு கிறார்கள். வைராக்கியமும் விரோதமும் ஞானத்திற்கு விரோதமாயிருக்கிறது. ஞானம் இருக்குமிடத்தில் மனத்தாழ்மை யிருக்கும்.

இருதயத்தில்தான் ஞானம் இருக்கிறது. அதே இருதயத்தில்தான் கசப்பான வைராக்கியமும் விரோதமும் இருக்கிறது. ஆனால் ஒரே இருதயத்தில் ஞானமும், வைராக்கியமும், விரோதமும் சேர்ந்து வாசம்பண்ணாது. வைராக்கியமும் விரோதமும் இருக்கிற இடத்தில் ஞானம் இருக்காது. அதுபோலவே ஞானம் இருக்கிற இடத்தில் வைராக்கியமும் விரோதமும் இருக்காது.

வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளும் உண்டு. வைராக்கியத் தினால் விரோதமுண்டாகும். விரோதத்தினால் பெருமை பாராட்டுதல் உண்டாகும். பெருமை பாராட்டுவதினால் பொய்சொல்லுதல் உண்டாகும். வீண்பெருமையுள்ளவர்கள் சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லுவார்கள். ஞானமில்லாதவர்களுடைய இருதயத்தில் கசப்பான வைராக்கியமும் விரோதமும் இருக்கும். இவர்கள் தங்களைத் தாழ்த்துவதற்குப் பதிலாக பெருமை பாராட்டுவார்கள். இதனால் கலகமும் துர்ச்செய்கைகளும் உண்டாகும். குழப்பமுண்டாகும்.

ஒரு பாவம் மற்றொரு பாவத்தைப் பிறப்பிக்கும். கசப்பான வைராக்கியமும் விரோதமும் கலகத்தையும் துர்ச்செய்கைகளையும் உண்டாக்கும். ஒரு துர்ச்செய்கையானது இன்னும் அநேக துர்ச்செய்கைகளைப் பிறப்பிக்கும். இதன் முடிவு எப்படியிருக்குமென்று நம்மால் நிதானித்துப் பார்க்கமுடியாது. எங்கே வைராக்கியமும் விரோதமும் உண்டோ அங்கே சகல துர்ச்செய்கைகளும் உண்டு. எல்லாமே துன்மார்க்கமாகவும், துர்ச்செய்கையாகவும் இருக்கும்.

தங்கள் இருதயத்தில் கசப்பான வைராக்கியமும் விரோதமும் இருந்தாலும், இவர்கள்கூட தங்களை ஞானிகளென்றும் விவேகிகளென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களுடைய ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமல்ல. இது பூமியிலிருந்து வருகிற ஞானம். இது மெய்யான ஞானமல்ல. இது லௌகிக சம்பந்தமானது. ஜென்ம சுபாவத்திற்குரியது. இது பேய்த்தனத்திற்கு அடுத்ததாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமுமுள்ள சுபாவம் ஆவிக்குரிய ஞானமல்ல. இது மாம்சத்திற்குரிய ஞானம். இது தேவனுக்குப் பிரியமான ஞானமல்ல. இது பிசாசின் கிரியை நிறைந்த ஞானம்.

தங்கள் இருதயத்தில் வைராக்கியமும் விரோதமும் நிரம்பியுள்ளவர்கள், தங்களை பெருமை பாராட்டி உயர்த்தும்போது, அவர்கள் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்குட் படுத்தப்படுவார்கள். தங்களை ஞானிகளும் விவேகிகளும் என்று உயர்த்துகிறவர்கள் பிசாசுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அக்கினி கடலிலே விழுந்துவிடுவார்கள்.

பரத்திலிருந்து வருகிற ஞானம் யாக் 3 : 17,18

யாக் 3:17. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

யாக் 3:18. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

மெய்யான ஞானம் தேவனுடைய ஈவாக நமக்குக் கொடுக்கப்படுகிறது. இது பரத்திலிருந்து வருகிறது. மெய்யான ஞானம் சுத்தமுள்ளது. இதில் சிறிதும் அசுத்தம் இருக்காது. வேறு எந்தக் கலப்படமும் இருக்காது. பரத்திலிருந்து வருகிற ஞானம் பரிபூரண சுத்தமுள்ளதாகயிருக்கிறது. தெய்வீக ஞானம் நம்மை அசுத்தப்படுத்தாது. நாம் மெய்யான ஞானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய இருதயத்திலும் ஜீவியத்திலும் பரிசுத்தம் நிரம்பியிருக்கும்.

பரத்திலிருந்து வருகிற ஞானம் சமாதானமுள்ளதாகயிருக்கிறது. மெய்யான ஞானமுள்ளவர்கள் சமாதானமுள்ளவர்களாகவும், சமாதானம்பண்ணுகிறவர்களாகவும் இருப்பார்கள். சமாதானம் முறிந்துபோகாமல் சமாதானத்தின் கட்டைக் காத்துக்கொள்வார்கள். சமாதானம் இழந்துபோன இடங்களில் இவர்கள் மறுபடியும் சமாதானத்தைப் புதுப்பிப்பார்கள்.

பரத்திலிருந்து வருகிற மெய்யான ஞானம் இணக்கமுள்ளதாகயிருக்கும். மெய்யான ஞானமுள்ளவர்கள் சாந்தகுணமுள்ளவர்களாகவும், மென்மையான சுபாவமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். எளிதில் கோபப்படமாட்டார்கள். கடினவார்த்தைகளைப் பேசமாட்டார்கள். நீடியபொறுமையோடிருப்பார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு இணங்குவார்கள்.

மெய்யான ஞானமுள்ளவர்களுக்கு நன்மை தீமை இன்னதென்று எளிதாகக் கற்றுக்கொடுக்கலாம். இவர்களிடத்தில் கற்றுக்கொள்கிற ஆவி இருக்கும். பரத்திலிருந்து வருகிற ஞானமுள்ளவர்கள் நன்மையைப் பற்றிக்கொள்வார்கள். தீமையை விட்டுவிலகுவார்கள். குற்றமில்லாமல், கறைதிறை இல்லாமல் ஜீவிப்பார்கள். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இணங்குவார்கள். பரிசுத்த ஆவியானவர் தங்களை சுத்தப்படுத்தி வழிநடத்த ஒப்புக்கொடுப்பார்கள். மற்றவர்களிடத்தில் அன்பாகவும், நீதியாகவும் பழகுவார்கள்.

பரத்திலிருந்து வருகிற ஞானம் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்திருக்கும். தங்களுக்கு விரோதமாக தவறுசெய்கிறவர்களை இவர்கள் மன்னிப்பார்கள். பிறரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கமாட்டார்கள். தங்களை சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிப்பார்கள்.

பரத்திலிருந்து வருகிற ஞானம் பட்சபாதமில்லாததாயிருக்கிறது. மேலும் இந்த ஞானம் மாயமற்றதாயுமிருக்கிறது. மெய்யா ஞானமுள்ளவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பது கடினம். இவர்கள் சுத்தமுள்ளவர்களாகவும், சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்திருப்பார்கள். பட்சபாதமில்லாதவர்களாகவும், மாய மில்லாதவர்களாகுவும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை எளிதில் குறை சொல்லமுடியாது. அப்படி குறை சொன்னாலும், அந்தக் குறையில் உண்மையிருக்காது. இதுவே மெய்யான ஞானம். இது பரத்திலிருந்து வருகிற ஞானம். இந்த ஞானத்தில் வைராக்கியமோ, விரோதமோ இருக்காது. இது தேவனுக்குரிய ஞானம். இது பேய்த்தனத்திற்கடுத்த ஞானமல்ல.

பரத்திலிருந்து வருகிற ஞானம் மாய்மாலமில்லாமலிருக்கிறது. ஒளிவு மறைவில்லாமல் வெளிச்சமாகவும் தெளிவாகவும் இருக்கிறது. தாறுமாறாக இல்லாமல் நிலையாகயிருக்கிறது. மெய்யான ஞானம் சமாதானத்திலே நீதியாகிய கனியை விதைத்துக்கொண்டேருக்கும். பரத்திலிருந்து வருகிற ஞானத்தையுடைவர்கள் சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள். இவர்களே நீதியாகிய கனியை சமாதானத்திலே விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாய் இப்பிரபஞ்சத்தில் சமாதானம் பெருகும்.

லௌகிக சம்பந்தமான ஞானத்தினால் வைராக்கியமும் விரோதமும் பெருகும். அதன் விளைவினால் கலகமும் சகல துர்ச்செய்கைகளும் உண்டாகும். பரத்திலிருந்து வருகிற மெய்யான ஞானத்தினாலோ சமாதானம் பெருகும். ஆவியின் கனிகள் உற்பத்தியாகும். சமாதானத்தில் விதைக்கப்படுவது சந்தோஷத்தின் அறுவடையைக் கொடுக்கும்.

4 அதிகாரம்

யுத்தங்களும் சண்டைகளும் வருவதற்கான காரணங்கள் (யாக் 4:1-3). உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக் 4:4-10). நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசக்கூடாது. மற்றவர்களை நியாயந் தீர்க்கக்கூடாது (யாக் 4:11-12). தேவனுடைய கிருபைக்கும் அவருடைய பராமரிப்புக்கும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் (யாக் 4:13-17).

இச்சைகள் யாக் 4 : 1-3

யாக் 4:1. உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?

யாக் 4:2. நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

யாக் 4:3. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி, செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.

யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டவர்கள் இன்னும் முழுமையாய் மனந்திரும்பவில்லை. அவர்களிடத்தில் பழைய மாம்ச சுபாவம் இருக்கிறது. அவர்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வருகிறது.

அவர்களுடைய அவயவங்களில் போர் செய்கிற இச்சைகள் இருப்பதினால் அவர்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வருகிறது.

ஜனங்களிடத்தில் மெய்யான தேசபக்தியில்லை. அவர்கள் தேவனையும் மகிமைப்படுத்தவில்லை. ஆனாலும் யுத்தங்களும் சண்டைகளும் அவர்களுக்குள்ளே வருகிறது. அவர்கள் தங்களுடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று விரும்பு கிறார்கள். அவர்களுடைய அவயவங்களில் போர்செய்கிற இச்சைகள் இருக்கிறது. மாம்சத்தின் இச்சைகளே யுத்தங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணம்.

யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர் களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வருகிறது. தேவன்மீது தாங்கள் கொண்டிருக்கிற பக்தி வைராக்கியத்தினால் இவர்கள் யுத்தம் பண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். தேவனுக்காக சண்டையிடுவதாகச் சொல்லுகிறார்கள். இவர்களுடைய யுத்தங்களுக்கும் சண்டைகளுக்கும் தேவனோ அல்லது அவர்களுடைய தேவபக்தியோ காரணமல்ல. அவர்களுடைய போர் செய்கிற இச்சைகளும், மனதின் வீண்பெருமைகளுமே யுத்தங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணம். ஒருவரிடத்தில் மார்க்க வெறியிருக்கும் போது அது வீண்பெருமையாக மாறி, யுத்தங்களிலும் சண்டைகளிலும் முடிவடையும்.

யூதர்கள் தங்களுக்குள்ளும் சண்டைபோடுகிறார்கள். புறஜாதியாரோடும் சண்டைபோடுகிறார்கள். தங்களுக்குள்ளே யார் பெரியவர் என்னும் பிரச்சனை வருகிறது. பதவியின்மீதும் அதிகாரத்தின் மீதும் ஆசைப்பட்டு யுத்தம்பண்ணு கிறார்கள். ஐசுவரியத்தை இச்சிக்கிறார்கள்.

உலகப்பிரகாரமான ஆசைகளை நிறைவேற்றவேண்டுமென்று விரும்பு கிறார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை அறியாதிருக்கிறார்கள். இந்த உலகத்தில் மாம்சத்தின் இச்சைகள் அதிகரிக்கும் போது யுத்தங்களும் சண்டைகளும் அதிகரிக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குள் யுத்தங்களும் சண்டைகளும் வரக்கூடாது. நம்முடைய அவயவங்களில் போர் செய்கிற இச்சைகள் இருக்கக் கூடாது. இதற்குக் காரணமான இச்சைகளை வேரோடு வெட்டி வீழ்த்தவேண்டும். சரீர அவயவங்களில் போர் செய்யத் தூண்டுகிற மாம்சத்தின் இச்சைகளை சிலுவையில் அறைய வேண்டும். இச்சைகளுக்கு இடங் கொடுத்தால் நமக்கு அழிவு நிச்சயம்.

நாம் பல காரியங்களை இச்சிக்கிறோம். ஆனாலும் நாம் இச்சித்தும் நமக்குக் கிடைக்கவில்லை. நம்முடைய விருப்பம் கர்த்தருடைய விருப்பத்தோடு ஒத்துப்போகவேண்டும். மாம்சத்தின் இச்சையை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பினால் அது நமக்குச் சித்திக்காது. ஆதித்திருச்சபை காலத்தில் விசுவாசிகளில் சிலர் கொலைசெய்தார்கள், பொறாமை யுள்ளவர்களாயிருந்தார்கள். ஆகையினால் அவர்கள் இச்சித்ததை அவர்கள் அடையக்கூடாமற்போனார்கள்.

அவர்களில் சிலர் சண்டை பண்ணினார்கள். யுத்தம்பண்ணினார்கள். தங்களுடைய இச்சைகளை தாங்களே பூர்த்திசெய்துகொள்ள வேண்டுமென்று சுயமுயற்சி செய்தார்கள். அவர்கள் விசுவாசிகளாகயிருந்தும் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவில்லை. தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்று அவர்கள் ஜெபம்பண்ணவில்லை. ஆகையினால் அவர்கள் இச்சித்தது அவர்களுக்குச் சித்திக்கவில்லை (யாக் 4:2).

இப்பிரபஞ்சத்தின் இச்சைகளும், மாம்சத்தின் இச்சைகளும் தேவனுக்கு விரோதமான பகை. கர்த்தருடைய பிள்ளைகள் தெளிந்த சிந்தையுள்ளவர் களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய சிந்தையே நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும். மாம்சத்தின் இச்சை நம்முடைய சிந்தையை ஆளுகை செய்ய அனுமதிக்கக்கூடாது. மாம்சத்தின் இச்சைகள் அதிகரிக்கும்போது ஜெபம்பண்ணவேண்டும் என்னும் வாஞ்சை நம்மைவிட்டு நீங்கிப்போகும். ஜெபம்பண்ணாமலேயே மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றுவதற்கு சுயமுயற்சி செய்வோம்.

ஆதித்திருச்சபையில் சில விசுவாசிகள், தங்கள் அவயவங்களிலுள்ள போர் செய்கிற இச்சைகளினால் சண்டைபண்ணினார்கள், யுத்தம்பண்ணி னார்கள். தங்களுடைய இச்சைகளை நிறைவேற்றுவதற்கு இதுபோல முயற்சி செய்தார்கள். அவர்கள் இவ்வளவு செய்தும், கர்த்தருடைய சமுகத்தில் வந்து, தங்களைத் தாழ்த்தி, விண்ணப்பம் பண்ணவில்லை. அவர்களுடைய சுயமுயற்சிகளினால், அவர்களுக்கு ஒன்றும் சித்திக்கவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய வழிகளைத் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் செய்கிற ஒவ்வொரு வேலையிலும் தேவனுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பயபக்தியோடு பின்பற்றவேண்டும். நம்முடைய சுயஆசைகளுக்கும், சுயவிருப்பங்களுக்கும், சுயஇச்சைகளுக்கும் நம்மை ஒப்புக்கொடுக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தத்திற்கே நம்மை ஒப்புக் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாமல், நம்முடைய சுயஇச்சைகளின் பாதையில் நடந்தால் நமக்கு ஏமாற்றமுண்டாகும். நாம் விரும்பியது நமக்குச் சித்திக்காது (யாக் 4:2).

ஒரு சில விசுவாசிகள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணு கிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தின் சிந்தை சுத்தமில்லாம லிருக்கிறது. தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, தங்களுடைய இச்சைகள் நிறைவேறவேண்டும் என்றே விண்ணப்பம்பண்ணுகிறார்கள். இவர்கள் தேவனிடத்தில் தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுவதினால், இவர்கள் தேவனிடத்திலிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்வதில்லை (யாக் 4:3).

பெருமை, மாயை, ஐசுவரியம், மாம்சத்தின் இச்சைகள் நிறைவேறுவது ஆகியவையே ஜெயஜீவியம் என்று ஒரு சில விசுவாசிகள் தப்பிதமாக நினைக்கிறார்கள். இவையெல்லாம் தங்களுக்கு சித்திக்கவேண்டுமென்று தேவனிடம் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள். தங்களுடைய மாம்சத்தின் இச்சைகள் நிறைவேறவேண்டும் என்று தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணு கிறவர்கள் ஜெபத்தையே அசுத்தப்படுத்து கிறார்கள். தேவனையும் அவருடைய மகிமையையும் தூஷிக்கிறார்கள். இவர்கள் தேவனிடத்தில் எப்படி விண்ணப்பம்பண்ண வேண்டுமோ அப்படி விண்ணப்பம்பண்ணாமல், தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். இதனால் தேவனிடத்திலிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறார்கள். நாம் தகாதவிதமாய் ஜெபம்பண்ணினால் தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில்கொடுக்கமாட்டார்.

சில விசுவாசிகள் தங்களுடைய குடும்பங்களில் ஆசீர்வாதம் வேண்டும் என்று ஜெபிக்கிறார்கள். தொழில்களிலும், வியாபாரங்களிலும், கைகளின் பிரயாசங்களிலும் தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

தேவன் தங்களை ஆசீர்வதிக்கும் போது பரலோகத்தின் தேவன் மகிமைப்படவேண்டும் என்பது இவர்களுடைய நோக்கமல்ல. தேவன் தங்களை ஆசீர்வதிப்பதினால் தாங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டும் என்பதோ, அல்லது தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்தினால் பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்பதோ இவர்களுடைய நோக்கமல்ல.

தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதத்தை வைத்து, தங்களுடைய இச்சைகளை நிறைவேற்றவேண்டும் என்பதே இவர்களுடைய நோக்கம். தங்களுடைய இச்சைகளை நிறைவேற்றும்படி தேவனுடைய ஆசீர்வாதங்களை செலவழிக்கவேண்டுமென்று இவர்கள் ஆசைப்படுகிறார்கள். இது தேவனுடைய சித்தமல்ல. இவர்கள் விண்ணப்பம் பண்ணுவதும் தகாதவிதமாயிருக்கிறது. ஆகையினால் இவர்கள் தேவனிடமிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்ளாமலிருக் கிறார்கள்.

நம்முடைய ஜெபத்தில் பரிசுத்தம் இருக்கவேண்டும். தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் நாம் ஜெபிக்க வேண்டும். கர்த்தரிடத்தில் நம்மைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்து நம்முடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங் களையும் ஏறெடுக்க வேண்டும்.

நாம் தேவனிடத்தில் ஜெபம் பண்ணாமல், நம்முடைய சுயபலத்தை நம்புவோமென்றால் நமக்கு ஒன்றும் சித்திக்காது. நாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, தாகாத விதமாய் விண்ணப்பம் பண்ணினாலும் நாம் ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டோம். நாம் ஜெபிக்கவேண்டும். தகுந்த விதமாய் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஆசைகள் நிறைவேறவேண்டுமென்று ஜெபிக்கக் கூடாது. தேவனுடைய கிருபைகள் நமக்கு வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும்.

கர்த்தர் நம்முடைய இச்சைகளின் வார்த்தைகளைவிட, கிருபை நிறைந்த இருதயத்தின் வார்த்தைகளுக்கே செவிகொடுக்கிறார். நாம் தகாதவிதமாய் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினால், நம்முடைய ஜெபத்திற்கு ஒரு பதிலும் கிடைக்காது. நம்முடைய வார்த்தைகள் எப்படி போனதோ அப்படியே வெறுமையாய்த் திரும்பி வரும்.

உலகசிநேகம் யாக் 4 : 4,5

யாக் 4:4. விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.

யாக் 4:5. நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?

இப்பிரபஞ்சத்தில் துன்மார்க்கம் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இப்பிரபஞ்சம் நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. ஒரு சிலர் இப்பிரபஞ்சத்தின் ஐசுவரியங்களை தாராளமாய்ப் பெற்றிருப்பார்கள். அதே வேளையில் அவர்கள் கர்த்தரிடத்திலும் முழுஇருதயத்தோடு அன்புகூருவார்கள். இவர்களுடைய ஐசுவரியம் தேவனுடைய சமுகத்திலிருந்து இவர்களைப் பிரிக்காது. இவர்களுடைய ஐசுவரியத்தினால் இவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆபத்தும் இல்லை.

எல்லா ஐசுவரியவான்களும் தேவ பக்தியுள்ளவர்களாயிருப்பதில்லை. ஐசுவரியவான்களில் அநேகர் தேவனிடத்தில் அன்புகூருவதற்குப் பதிலாக, தங்களுடைய ஐசுவரியத்தில் அதிக அன்புகூருகிறார்கள். ஐசுவரியத்தைத் தேடி தேவனைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இவர்களுடைய இருதயத்தின் சிம்மாசனத்தில் உலகப்பிரகாரமான காரியங்கள் வீற்றிருக்கிறது. இவர்கள் தேவனுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். உலகத்திற்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் (யாக் 4:4).

நம்முடைய அவயவங்களில் போர் செய்கிற இச்சைகள் இருக்கும்போது நமக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வருகிறது. இந்த உலகத்தின்மீது மாம்ச பிரகாரமாக அன்புகூரும்போதும் யுத்தங்களும் சண்டைகளும் வரும். நாம் தேவனுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும்போது நமக்கு சமாதானம் இல்லை. கர்த்தர் சமாதானம்பண்ணுகிறவர். அவரே சமாதான பிரபு. நம்முடைய இருதயத்தில் கர்த்தர் வாசம்பண்ணினால் நமக்கு சமாதானம் உண்டு. நம்முடைய இருதயத்தில், கர்த்தருக்குப் பதிலாக உலகசிநேகம் வாசம்பண்ணினால், நமக்கு சண்டைகளும் யுத்தங்களும் உண்டு.

விசுவாசிகளில் சிலர் உலகத்தை சிநேகித்து தேவனைப் பகைத்து விடுகிறார்கள். உலகப்பிரகாரமான ஆடம்பரங்களுக்கும், அதிகாரங்களுக்கும், பெருமைகளுக்கும், ஐசுவரியங்களுக்கும், காமகளியாட்டுக்களுக்கும் ஆசைப்பட்டு சத்துருவினுடைய கண்ணியில் விழுந்துவிடுகிறார்கள். தங்களுடைய இச்சைகளை நிறைவேற்றுவதற்காக யுத்தம்பண்ணுகிறார்கள். சண்டைபண்ணு கிறார்கள். தேவனை மறந்துவிடுகிறார்கள். ஜெபிக்க மறந்துவிடுகிறார்கள். ஜெபித்தாலும் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்காமல் தகாதவிதமாய் ஜெபிக்கிறார்கள்.

இதன் விளைவினால் இவர்கள் உலகத்திற்கு சிநேகிதராகிறார்கள். தேவனுக்கும் பகைஞராகிவிடுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குள் உலகசிநேகம் இருக்கக்கூடாது. யுத்தங்களும் சண்டைகளும் வரக்கூடாது. நம்முடைய அவயவங்களில் போர் செய்கிற இச்சைகள் இருக்கக்கூடாது. நாம் தேவனுக்குரியவர்கள். தேவன் நம்மை பராமரிக்கிறவர். அவரே நமக்குத் தேவையான கிருபைகளைத் தருகிறவர். அவருடைய கிருபை நமக்குப்போதும் என்று நாம் ஆறுதலடைந்திருக்க வேண்டும். போதுமென்கிற பக்தியே மிகுந்த ஆதாயம். தேவனுடைய பிள்ளைகள் அவருடைய கிருபையை மாத்திரமே விரும்பவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லிக்கொண்டு உலகப்பிரகாரமான காரியங்களில் ஆசைப்படுவோமென்றால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சுத்தம் இருக்காது.

நம்மிடத்தில் உலகசிநேகம் இருக்குமென்றால், இந்தத் தப்பிதத்தை கர்த்தரிடத்தில் அறிக்கைசெய்யவேண்டும். தேவன் தம்முடைய கிருபையினால் நம்மிடத்தில் வாசம்பண்ணுகிற உலகசிநேகத்தின் ஆவியை அப்புறப்படுத்திவிடுவார். நம்முடைய ஆவியைக் குணப்படுத்துவார். நம்முடைய இருதயத்தைச் சுத்தப்படுத்துவார். நமக்குள்ளே வந்து வாசம்பண்ணுவார். நமக்கு ஒரு புதிய ஆவியைக் கொடுப்பார். அது இந்த உலகத்தின் ஆவியல்ல. கர்த்தர் நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணும்போது, அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் (யாக் 4:5).

பெருமையும் தாழ்மையும்
யாக் 4:6

யாக் 4:6. அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

தேவன் பெருமைக்கும் தாழ்மைக்கும் வித்தியாசம் பார்க்கிறவர். பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்பதும் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிப்பதும் தேவனுடைய சுபாவம். பெருமையுள்ளவர்கள் தேவனுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். தமக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்களுக்கு தேவனும் எதிர்த்து நிற்கிறார். பெருமையின் ஆவியுள்ளவர்கள் இந்தச் சத்தியத்தைத் தியானித்து, கர்த்தருடைய சமுகத்தில் நடுக்கத்தோடு வந்து தங்களைத் தாழ்த்தவேண்டும். நம்முடைய இருதயத்தில் பெருமை நிரம்பியிருக்கு மென்றால் கர்த்தர் நம்முடைய முகங்களை வெட்கப்படுத்துவார்.

கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். அவர்களுக்கு உதவிபுரிகிறார். அவர்களைக் கனப்படுத்துகிறார். கர்த்தருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தினால் மாத்திரமே நமக்கு தேவனுடைய கிருபை கிடைக்கும். தங்களைத் தாழ்த்துகிற வர்களுக்கு தேவன் அதிகமான கிருபையை அளிக்கிறார். அவர் எங்கெல்லாம் தம்முடைய மெய்யான கிருபையை அளிக்கிறாரோ அங்கெல்லாம் அவர் தம்முடைய கிருபையை இன்னும் அதிகமாக அளிக்கிறார்.

தாழ்மையுள்ளவர்களுக்கு தேவனுடைய கிருபை அதிகமாய்த் தேவைப்படுகிறது. அவர்கள் தேவனுடைய கிருபையை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தேவகிருபைக்காக கர்த்தருடைய சமுகத்தில் தாழ்மையோடு விண்ணப்பம்பண்ணுவார்கள். தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற கிருபைகளுக்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாகயிருப்பார்கள். கர்த்தர் இப்படிப்பட்டவர்களுக்குத்தான் தம்முடைய கிருபையைக் கொடுக்கிறார். சாதாரண கிருபையைக் கொடுக்காமல் அவர்களுக்கு அதிகமான கிருபைகளைக் கொடுக்கிறார்.

பிசாசு யாக் 4:7

யாக் 4:7. ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்மை தேவனுடைய சமுகத்தில் முழுவதுமாக ஒப்புக்கொடுக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை நாம் புரிந்துகொண்டு, உலகசிநேகத்தை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். உலகத்தின் இச்சைகளுக்கு நாம் கீழ்ப்படியக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாய் நம்முடைய இருதயம் தேவனை மகிமைப்படுத்துகிறது.

நாம் கர்த்தருடைய பிள்ளைகள். ஆகையினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருப்பது நமக்கு அவசியமாயிருக்கிறது. நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். அதே வேளையில் நாம் அன்போடும் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை பிசாசு விரும்புவதில்லை.

நம்முடைய கீழ்ப்படிதலுக்கு பிசாசு எப்போதுமே தடையாகயிருப்பான். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். அப்பொழுது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான்.

நாம் பிசாசுக்கும் அவனுடைய சோதனைகளுக்கும் கீழ்ப்படிந்தால் அவன் நம்மை ஆளுகை செய்வான். நம்மை இன்னும் அதிகமாய்ச் சோதிப்பான். நம்மிடத்தில் பிசாசின் கிரியைகள் அதிகமாய் நடைபெறும். நாம் பிசாசுக்குக் கீழ்ப்படியக்கூடாது. தேவனுக்கு மாத்திரமே கீழ்ப்படியவேண்டும். பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். அவனுடைய ஆலோசனைகளுக்கும், தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்கவேண்டும். அப்போது பிசாசு நம்மைவிட்டு ஓடிப்போவான்.

பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்னும் தீர்மானம் நம்முடைய இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டும். இந்தத் தீர்மானத்தில் நாம் உறுதியாயிருக்கவேண்டும். கர்த்தருக்குள் நாம் வைத்திருக்கிற பக்திவைராக்கியமும், பிசாசுக்கு எதிர்த்து நிற்கும் உறுதியும், சோதனைகள் நம்மை அணுகாதவாறு பாதுகாக்கும்.

தேவன் யாக் 4 : 8-10

யாக் 4:8. தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.

யாக் 4:9. நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.

யாக் 4:10. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்தில் சேரவேண்டும். தேவனுக்கு விரோதமாக கலகம் செய்த நம்முடைய இருதயம், மனந்திரும்பவேண்டும். தேவனுடைய பாதபடியில் நம்முடைய இருதயத்தை சமர்ப்பிக்கவேண்டும். தேவனைவிட்டு விலகிப்போன நம்முடைய ஜீவியத்தில் மாற்றமுண்டாகவேண்டும். தேவனோடு ஐக்கியமாக ஜீவிப்பதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் இதுவரையிலும் உலகத்தில் சேர்ந்திருந்தால், அதிலிருந்து பிரிந்துவந்து, தேவனிடத்தில் சேரவேண்டும். நாம் தேவனிடத்தில் சேரும்போது அவர் நம்மிடத்தில் சேருவார் (யாக் 4:7).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய கைகளை சுத்திகரிக்க வேண்டும். கர்த்தரிடத்தில் சேருகிறவர்கள் சுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். முதலாவதாக நாம் தேவனிடத்தில் சேரும்போது, நம்முடைய கரங்கள் சுத்திகரிக்கப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய கரங்கள் சுத்திகரிக்கப்பட வில்லையென்றால், நாம் தேவனிடத்தில் சேர்ந்தும் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

இதுவரையிலும் நம்முடைய இருதயம் இருமனமுள்ளதாகயிருந் திருக்கலாம். உலகத்தையும் சிநேகித்திருக்கலாம். தேவனையும் சிநேகித்திருக்கலாம். இருமனமுள்ளவர்கள் தங்களுடைய நடைகளிலெல்லாம் தடுமாறுவார்கள். தேவனிடத்தில் சேரும்போது நம்முடைய இருதயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் வரும்போது நாம் இருமனமுள்ளவர்களாய் தடுமாறாமல், ஒருமனமுள்ளவர்களாய் சீராய் வரவேண்டும். நம்முடைய இருதயங்களைப் பரிசுத்தமாக்கவேண்டும் (யாக் 4:8).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், தேவனிடத்தில் சேரும்போது துயரப்பட்டு துக்கித்து அழவேண்டும். கர்த்தர் நம்மை கண்டித்து உணர்த்தும்போது நாம் மனந்திரும்பவேண்டும். தேவனுடைய சிட்சையை அற்பமாய் எண்ணக்கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் துன்பமும் பாடுகளும் வரும்போது, துயரப்பட்டு துக்கித்து அழவேண்டும். கர்த்தர் நம்மைத் திருத்துவதற்காக, நமக்கு துன்பங்களையும் பாடுகளையும் அனுமதித்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு மனந்திரும்பவேண்டும். நமக்குள்ளே பிரச்சனைகளும் பிரிவினைகளும் வரும்போது துயரப்பட்டு துக்கித்து அழவேண்டும்.

நமக்கு பிரச்சனைகள்வந்தாலும் அதை கண்டும் காணாததுபோல் உதாசீனம்பண்ணக்கூடாது. பிரச்சனை களைப் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் அதினிமித்தமாய் துயரப்பட்டு துக்கித்து அழவேண்டும். நமக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வரும்போது நாம் துயரப்படவேண்டும். நம்முடைய அவயங்களில் போர் செய்கிற இச்சைகளும், நம்முடைய இருதயங்களில் பாவங்களும் இருப்பதினால்தான் நமக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் வருகிறது என்பதைப் புரிந்துகொண்டு, அதினிமித்தமாய் துயரப்பட்டு துக்கித்து அழவேண்டும் (யாக் 4:9).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்தில் சேரும்போது, நம்முடைய நகைப்பு துக்கிப்பாகவும், நம்முடைய சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறவேண்டும். நாம் இப்போது சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருக்கலாம். ஆனாலும் துக்கமான காலம் ஒன்று நமக்கு வரப்போகிறது என்பதை எதிர்நோக்கிப் பார்க்கவேண்டும். நிலமை மோசமடைவதற்கு முன்பாக நம்முடைய நகைப்பையும், சந்தோஷத்தையும் நிறுத்திவிட்டு, துக்கப்படவும் சஞ்சலப்படவும் துவங்கவேண்டும்.

நம்முடைய மாம்சப்பிரகாரமான நகைப்பும் சந்தோஷமும் நம்மைவிட்டு நீங்கவேண்டும். இவையெல்லாம் மாயையான சந்தோஷங்கள். இவை மாம்சத்தின் இச்சைகள். நம்மிடத்தில் மாம்சப்பிரகாரமான நகைப்பும் சந்தோஷமும் இருப்பதற்குப் பதிலாக, பக்திவிருத்திக்கேதுவான துக்கிப்பும் சஞ்சலமும் நிரம்பியிருக்கவேண்டும் (யாக் 4:9).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்தில் சேரும்போது, அவருக்கு முன்பாக நாம் தாழ்மைப்படவேண்டும். அப்பொழுது அவர் நம்மை உயர்த்துவார். நாம் செய்த தீமையான காரியங்களை நினைத்து நாம் துக்கப்படவேண்டும். தேவசமுகத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும். நாம் நன்மையான காரியங்களைச் செய்யும்போதும் நம்மிடத்தில் பெருமை இருக்கக்கூடாது. அப்போதும் கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். அப்பொழுது அவர் நம்மை உயர்த்துவார். தேவன் எப்போதுமே பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே கிருபையளிக்கிறார் (யாக் 4:10).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனிடத்தில் சேரும்போது, இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சமுகத்தில் சேர்ந்தால், நமக்கு ஆசீர்வாதம் உண்டு. நாம் தேவனுடைய அதிகமான கிருபைகளைப் பெற்றுக்கொள்ளலாம். தேவனிடத்தில் சேருகிறவர்கள் தேவனுடைய கிருபையினிடத்திற்கும் அவருடைய இரக்கத்தினிடத்திற்கும் வந்து சேருகிறார்கள்.

தேவனுக்கும் நமக்கும் நடுவே நெருங்கிய ஐக்கியம் இல்லையென்றால் அது நம்முடைய தப்பிதமேயல்லாமல், அது ஒருபோதும் தேவனுடைய தப்பிதமாகாது. தமக்கு முன்பாக தாழ்மைப்படுகிறவர்களை மாத்திரமே கர்த்தர் உயர்த்துகிறார். நம்முடைய துக்கிப்பிலிருந்தும், நம்முடைய சஞ்சலத்திலிருந்தும் நம்மை நீக்கி உயர்த்துவார். பிரச்சனைகளிலிருந்தும், பாடுகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் தேவன் நம்மை நீக்கி, நம்மை உயர்த்துவார். நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை உயர்த்துவார்.

தேவன் நம்மை உயர்த்தும்போது அதுவே நமக்கு மெய்யான உயர்வாக இருக்கும். தேவன் நம்மை உயர்த்தும்போது நாம் துன்பத்திலிருந்தாலும் அது நமக்கு ஆறுதலைத் தரும். நாம் பூமியில் கர்த்தருக்கு முன்பாக எந்த அளவுக்கு நம்மைத் தாழ்த்துகிறோமோ, அந்த அளவுக்கு பரலோகத்திலே நம்முடைய பலன் மிகுதியாயிருக்கும். பூமியிலே தாழ்மை, பரலோகத்திலே மேன்மை, இதுவே கர்த்தருடைய வழி. பூமியிலே சிலுவை, பரலோகத்திலே கிரீடம். இதுவே கர்த்தருடைய ஆசீர்வாதம்.

ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசுவது யாக் 4 : 11,12

யாக் 4:11. சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்.

யாக் 4:12. நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர், மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பிறருக்கு விரோதமாக தீமையான காரியங்களைப் பேசக்கூடாது. ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசுவது பாவம். தேவை ஏற்படும்போது, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்லலாம். பாவம் செய்த சகோதரருக்கு விரோதமாக தேவை ஏற்படும்போது பேசலாம். அவர்கள் தப்பிதமாய் நடந்து கொண்டாலும், நாம் அவர்களுக்கு விரோதமாகப் பேசக்கூடாது. அவர்களுக்கு நன்மை உண்டாகும் விதத்தில் மிகுந்த கவனத்தோடு பேசவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய நாவுகளை அன்பின் பிரமாணம் ஆளுகை செய்யவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்பதுபோல, நாம் ஒருவருக்கொருவர் உதடுகளின் அன்பான கனியையே பேசவேண்டும். சத்தியமும் நீதியும் நம்முடைய வார்த்தைகளை வழிநடத்த வேண்டும்.

நம்மைப்போலவே மற்ற சகோதரரும் தேவனுடைய சாயலின்படியே உண்டாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். அவர்களும் நமக்கு கிறிஸ்துவுக்குள் சகோதரராயிருக் கிறார்கள். நம்முடைய சகோதரருக்கு முன்பாக நாம் நல்லொழுக்கமுள்ள வர்களாக நடந்துகொள்ளவேண்டும். மற்ற சகோதரரின் நற்பெயருக்கு நாம் களங்கம் ஏற்படுத்திவிடக்கூடாது. மற்றவர்களுக்கு நம்மால் உபகாரம் செய்யமுடியாமற் போனாலும், உபத்திரவம் செய்யாமலிருக்க வேண்டும். மற்றவர்களைப்பற்றி நம்மால் நன்மையான காரியங்களை பேசமுடியா விட்டாலும், அவர்களைப்பற்றி தீமையான காரியங்களைப் பேசாதிருக்க வேண்டும்.

மற்றவர்களைக் குற்றப்படுத்து கிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பேசுகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் நியாயப்பிரமாணத்தை நியாயந்தீர்த்து, அதையே குற்றப்படுத்து கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நம்முடைய சகோதரர் தப்பிதம் செய்யும்போது, அவரை கண்டித்து உணர்த்தலாம். அதையும் வேதவாக்கியத்தின் அடிப்படையில்தான் செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு முரணாக நாம் செயல்படும்போது, நாமும் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களாகவே இருப்போம். தேவனுடைய வார்த்தையானது தவறு செய்த சகோதரரைத் திருத்துவதற்கு சரியானதல்ல என்று தீர்மானித்து, அவரைத் திருத்துவதற்காக நாம் விரும்புகிறதைப் பேசுகிறோம். இதனால் தேவனுடைய வார்த்தையை அவமதித்து தூஷிக்கிறோம்.

நம்முடைய சுயபிரமாணத்தின்படி ஒரு சகோதரனைக் குற்றப்படுத்தும்போது, நாம் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசுகிறோம். அந்தச் சகோதரனை திருத்துவதற்கு நியாயப்பிரமாணம் பெலனற்றது என்று தீர்மானம் செய்கிறோம். இதன் மூலமாய் நாம் நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்து கிறோம். கர்த்தருடைய பிரமாணம் எக்காலத்திலும் பரிபூரணமுள்ளது.

மனுஷர் கர்த்தருடைய பிரமாணத்தை மீறும்போது, அந்தப் பிரமாணமே அவர்களை நியாயந்தீர்க்கும். அதே வேளையில் மனுஷர் கர்த்தருடைய பிரமாணத்தை மீறவில்லையென்றால், அந்தப் பிரமாணம் அவர்களை நியாயந் தீர்க்காது. கர்த்தர் நமக்குக் கொடுக்காத ஊழியத்தை நாம் செய்துகொண்டிருக்கக் கூடாது.

நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பேசுகிற ஊழியத்தை கர்த்தர் நமக்குக் கொடுக்கவில்லை. நாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிற நீதிபதியல்ல.

நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே. அவரே நம்முடைய தேவன். அவரே மனுஷருடைய ஆத்துமாவை இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர். மனுஷரைக் குற்றப்படுத்துகிற அதிகாரம் தேவனுக்கு மாத்திரமே உள்ளது. இந்த அதிகாரத்தை தேவன் எந்த மனுஷருக்கும் கொடுக்கவில்லை. மற்றவர்களைக் குற்றப்படுத்துவதற்கு நமக்கு எவ்வித அதிகாரமுமில்லை. நாம் மற்றவர்களைக் குற்றப்படுத்தும்போது, நாம் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசுகிறோம். நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறோம்.

நியாயப்பிரமாணத்தைக் குற்றப் படுத்துகிறவர்கள், நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவர்களல்ல. அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு தங்களை நியாயாதிபதிகளாக்கிக் கொள்கிறார்கள். தேவன் தங்களுக்குக் கொடுக்காத ஊழியத்தை, இவர்கள் தாங்களாகவே எடுத்துக்கொள்கிறார்கள்.

தேவனே நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிட்டிருக்கிறவர். மனுஷரை நியாயந்தீர்க்கிற உரிமை தேவனுக்கு மாத்திரமே உள்ளது. மனுஷரை இரட்சிக்கவும், அழிக்கவும் தேவன் மாத்திரமே வல்லவர். நாமே தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரம் தேவனுடைய பிரமாணத்தை நமக்குக் கீழ்ப்படுத்த நாம் முயற்சிபண்ணக்கூடாது. நாம் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்களாக மாத்திரமே இருக்கவேண்டும். அதற்கு நியாயாதிபதி களாயிருக்கக்கூடாது.

தேவனே மனுஷருக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். தேவனால் மாத்திரமே தம்முடைய பிரமாணத்தை நம்முடைய மனச்சாட்சியில் பதிய வைக்கமுடியும். நாம் தேவனுக்கு மாத்திரமே கீழ்ப்படியவேண்டும். தம்முடைய பிரமாணத்தை நிறைவேற்று வதற்கு தேவன் வல்லவராயிருக்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரம் தேவன் தம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றுகிறார். பிரமாணத்தை நிறைவேற்றுகிற அதிகாரமும் உரிமையும் தேவனுக்கு மாத்திரமே உரியது.

தேவன் மாத்திரமே மனுஷரை இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர். தம்முடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தேவனால் மாத்திரமே வெகுமதிகளைக் கொடுக்க முடியும். அதுபோலவே தம்முடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு, தேவனால் மாத்திரமே தண்டனைகளையும் கொடுக்க முடியும். தேவன் மாத்திரமே தம்முடைய பிரமாணத்திற்கு நியாயாதிபதியாயிருக்கிறார்.

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், தங்களைத் தேவனுடைய பிரமாணத்திற்கு நியாயாதிபதிகளாக ஆக்கிக்கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் சகோதரருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். தங்கள் சகோதரர்களைக் குற்றப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசக்கூடாது. நம்முடைய சகோதரருக்கு நாம் நியாயதிபதிகளாயிருக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை நமக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய பிரமாணம் நமக்கு கிடைத்திருப்பது பெரிய சிலாக்கியம். நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருக்கிற நாம் அதற்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய பிரமாணம் நம்மை ஆளுகை செய்யவேண்டும். நாம் தேவனுடைய பிரமாணத்திற்கு நியாயாதிபதிகளாயிருந்து மற்றவர்களைக் குற்றப்படுத்தக்கூடாது.

ஆண்டவருக்குச் சித்தமானால்
யாக் 4 : 13-15

யாக் 4:13. மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம்பண்ணுவோ மென்கிறவர்களே, கேளுங்கள்.

யாக் 4:14. நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப்போலிருக்கிறதே.

யாக் 4:15. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் இந்தப்பிரபஞ்சத்தில் தாங்கள் நித்தியகாலமாக ஜீவிக்கப்போவதாக நினைக்கிறார்கள். தங்களுடைய ஜீவியம் எப்படிப்பட்டது என்பது இவர்களுக்கு தெரியவில்லை. மனுஷருடைய ஜீவியம் கொஞ்சக்காலம் தோன்றி பின்பு தோன்றாமல்போகிற புகையைப் போலிருக்கிறது. நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. ஆனால் மனுஷரில் சிலர் இந்தச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளாமல், எல்லாம் தங்களுடைய ஆளுகைக்குட்பட்டிருப்பதுபோல பேசுகி றார்கள். அதற்கேற்ற பிரகாரமாக சிந்திக்கிறார்கள். தங்கள் விருப்பத்தின்படியே எல்லாம் நடைபெறும் என்று நினைக்கிறார்கள்.

யூததேசத்திலே பழங்காலத்து பழமொழி ஒன்று உண்டு. "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரம் செய்து சம்பாத்தியம்பண்ணுவோம்" என்று சொல்வதுதான் அந்தப்பழமொழி (யாக் 4:13). இப்படி பேசுகிறவர்கள் தேவனுடைய வழிநடத்துதலையும் பராமரிப்பையும் புறக்கணித்துவிடுகிறார்கள்.

உலகப்பிரகாரமான ஜனங்கள் தேவனை தங்களுடைய ஜீவியத்திலிருந்து புறம்பே தள்ளிவிடுகிறார்கள். சகலமும் தங்களுடைய விருப்பத்தின்படியும், தங்களுடைய முயற்சியின்படியும் நிறைவேறும் என்பது இவர்களுடைய நம்பிக்கை. தாங்கள் நினைக்கிற பிரகாரமாகவே எல்லாம் நடைபெறும் என்பதுபோல இவர்கள் பேசுகிறார்கள். தங்களுக்கு இன்னன்ன நன்மைகளெல்லாம் வருமென்று கற்பனை செய்கிறார்கள். தங்களுடைய கற்பனைகள், தாங்கள் நியமிக்கிற காலத்தில் நிறைவேறும் என்றும் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். நாளைக்கு என்ன நடைபெறும் என்பதை தங்களுக்குத் தெரிந்ததுபோல பேசுகிறார்கள். தங்கள் இஷ்டப்பிரகாரம் இன்றைய தினத்தில் காரியங்கள் நடைபெறும் என்றும், அதுபோலவே நாளையதினமும், அடுத்தமாதமும், அடுத்த வருஷமும் நடைபெறும் என்றும் கற்பனை பண்ணுகிறார்கள்.

தேவனுடைய சித்தமில்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது. கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லையென்றால் நம்முடைய சுயமுயற்சிகளெல்லாம் வீணானவையாகவே இருக்கும். தேவனுடைய அநுக்கிரகமும் ஆசீர் வாதமும் இல்லாமல் நமக்கு ஒரு நன்மையும் சித்திக்காது. உலகப் பிரகாரமான ஜனங்களோ "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போவோம்" என்று சொல்லுகிறார்கள். தங்களால் போகமுடியு மென்று நிச்சயமாய் நம்புகிறார்கள். இவர்களுடைய நம்பிக்கை நிறைவேறாமல் போகலாம். போகும் வழியில் இவர்களுக்குத் தடைகள் உண்டாகலாம். இவர்களால் தாங்கள் சொன்ன பட்டணத்திற்கு போகமுடியாமலேயே போய்விடலாம். ஒருவேளை இவர்கள் திட்டமிட்ட பட்டணத்திற்குப் போவதற்குப் பதிலாக, வேறு ஏதாவது பட்டணத்திற்கு போக நேரிடலாம்.

இவர்களுடைய கையில் எதுவுமில்லை. சகலமும் கர்த்தருடைய சித்தத்தின்படியும், அவருடைய தீர்மானத்தின்படியுமே நடைபெறும்.

ஒரு சிலர் தங்கள் வீட்டைவிட்டு வேறு பட்டணத்திற்குப்போக புறப்பட்டுப் போகிறார்கள். பாதிவழியில் விபத்தில் சிக்கி மரணமடைந்துவிடுகிறார்கள். இவர்கள் தீர்மானித்த பட்டணத்திற்கு போகமுடியாமல் போய்விடுகிறது. வழியில் என்ன நடைபெறும் என்று இவர்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. நம்முடைய ஜீவன் இப்பிரபஞ்சத்தில் நிச்சயமானதல்ல. தங்களுடைய ஜீவன் எப்படிப்பட்டது என்பதும் இவர்களுக்குத் தெரியவில்லை.

உலகப்பிரகாரமான ஜனங்கள், "நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய் அங்கே ஒருவருஷம் தங்குவோம்" என்று சொல்லுகிறார்கள். இவர்கள் நாளைக்கு போகப்போவதும் நிச்சயமில்லை. அப்படியே பிரமாணம் செய்தாலும் தாங்கள் நினைத்த பட்டணத்திற்கு போகப்போவதும் நிச்சயமில்லை. அப்படியே தாங்கள் நினைத்த பட்டணத்திற்குப்போனாலும், அங்கு தாங்கள் நினைத்தபடி ஒருவருஷம் தங்குவார்கள் என்பதும் நிச்சயமுமில்லை.

உலகப்பிரகாரமான ஜனங்கள், "அந்தப் பட்டணத்திலே ஒருவருஷம் தங்கி, வியாபாரம் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோம்" என்று சொல்லுகிறார்கள். அங்கு அவர்கள் வியாபாரம் பண்ணுவார்கள் என்னும் நிச்சயமுமில்லை. அப்படியே அவர்கள் வியாபாரம் பண்ணினாலும் அவர்கள் சம்பாத்தியம் பண்ணுவார்கள் என்னும் நிச்சயமுமில்லை. அவர்களுடைய வியாபாரத்தில் லாபத்திற்குப் பதிலாக நஷ்டம் ஏற்படுவதற்கும் வாய்ப்புண்டு.

இப்பிரபஞ்சத்தில் சம்பாத்தியம் பண்ணுவது நல்லதுதான். நம்முடைய வியாபாரத்தில் நமக்கு லாபம் கிடைப்பதும் நல்லதுதான். ஆனால் இவையெல்லாம் நிச்சயமானவையல்ல. நாம் ஒன்று நினைப்போம். தேவனுடைய சித்தம் வேறுவிதமாகயிருக்கும். நம்முடைய சித்தத்தின்படியல்ல, தேவனுடைய சித்தத்தின்படியே நமக்கு எல்லாம் நடைபெறும். இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிப்பதும் கொஞ்சக்காலம்தான். நம்முடைய வியாபாரமும் நிலையற்றது. நம்முடைய நாட்களும் கொஞ்சக் காலம்தான்.

மனுஷனோ நிலையில்லாத காரியங்கள்மீது நம்பிக்கை வைத்து ஜீவிக்கிறான். தான் நினைத்தது நடக்குமென்று சொல்லுகிறான். இவன் நினைத்தது நடக்காமல் வேறொன்று நடக்கும்போது பதறிப்போகிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எப்போதுமே கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும். அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. நாம் எவ்வளவு காலம் ஜீவிப்போம் என்பதும் நமக்குத் தெரியாது. கர்த்தர் வருங்காலத்தை நமக்கு பிரத்தியட்சமாக வெளிப்படுத்தவில்லை. நாளைக்கு இன்னின்ன காரியங்களை யெல்லாம் செய்யவேண்டும் என்னும் விருப்பம் நமக்குள் இருக்கலாம். அதற்குத் தேவையான திட்டங்களையும் நாம் வகுக்கலாம். ஆனாலும் அவை நிறைவேறாமல் போவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உண்டு. நம்முடைய ஜீவியமும், விருப்பமும், திட்டமும் கொஞ்சக்காலம் தோன்றி பின்பு தோன்றாமல் போகிற புகையைப் போலிருக்கிறது (யாக் 4:14).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய வழிநடத்துதலை நம்முடைய ஜீவியத்தில் பின்பற்றவேண்டும். நாம் எதைப் பேசினாலும், எதைச் செய்தாலும், கர்த்தருடைய சித்தமும் அதில் இடம்பெறவேண்டும். "நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரம் செய்து, சம்பாத்தியம்பண்ணுவோம்" என்று சொல்லுவதற்குப் பதிலாக, "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்" என்று சொல்லவேண்டும்.

நம்முடைய காலங்கள் நம்முடைய கைகளில் இல்லை. அது நம்முடைய கர்த்தருடைய பலத்த கரத்தில்தான் உள்ளது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சித்தத்திற்கும் அவருடைய விருப்பத்திற்கும் கீழ்ப்படியவேண்டும். "ஆண்டவருக்குச் சித்தமானால்" என்னும் வார்த்தையே நம்முடைய வாயிலிருந்து முதலாவதாக வரவேண்டும். நம்முடைய கிரியைகளும் திட்டங்களும் பரலோகத்திலிருந்து ஆளுகை செய்யப்படுகிறது. கர்த்தர் நம்மை ஆளுகை செய்கிறார். அவரே நம்மை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக இயக்குகிறார். நாமும் அவருடைய சித்தத்தின் பிரகாரமாக இயங்குகிறோம். கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையினால் நம்முடைய ஆலோசனைகளையும், நம்முடைய கிரியைகளையும் தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். அவருடைய சித்தத்தின் பிரகாரமாக திட்டமிடவும் செயல்படவும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் (யாக் 4:15).

வீம்புகள் யாக் 4 : 16,17

யாக் 4:16. இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

யாக் 4:17. ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

ஒரு சிலர் தங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறார்கள். தங்களுக்குத் தாங்களே மேன்மையான வாக்குத்தத்தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள். தங்களைத்தாங்களே ஆசீர்வதித்துக்கொள்கிறார்கள். நீண்ட ஆயுசை தங்களுக்கு வாக்குப்பண்ணு கிறார்கள். இப்பிரபஞ்சத்திலுள்ள மேன்மையான காரியங்களைத் தங்களுக்கு வாக்குப்பண்ணுகிறார்கள். இப்படி தங்களைத் தாங்களே ஆசீர்வதிக்கி றவர்கள் தேவனைப்பற்றியோ, அவருடைய நீதியைப்பற்றியோ, அவருடைய சித்தத்தைப்பற்றியோ சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தங்கள் ஜீவியத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதுமில்லை. இவர்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறார்கள். மாயையான காரியங்களைப் பின்பற்றுகிறார்கள்.

வீம்புகளில் மேன்மை பாராட்டுவது பொல்லாங்காயிருக்கிறது. நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். நம்மை நாமே சந்தோஷப்படுத்திக்கொள்ள முயற்சி பண்ணக்கூடாது. நம்முடைய ஆயுசு நாட்களைக் குறித்து நமக்கு நாமே வாக்குத்தத்தம்பண்ணக்கூடாது. ஏனெனில் நம்முடைய நாட்கள் கர்த்தருடைய கரத்தில்தான் இருக்கிறது.

சகலமும் தேவனுடைய சித்தத்தின் படியும், அவருடைய விருப்பத்தின்படியும் தான் நடைபெறும். அதுவும் நமக்கு விருப்பமான காலத்தில் நடைபெறாது. தேவனுக்குச் சித்தமான காலத்தில்தான் தேவன் நியமித்திருக்கிற காரியங்கள் நிறைவேறும்.

கர்த்தரே நம்முடைய தேவனாகயிருக்கிறார். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதான் நமக்கு நல்லது. அதுவே மெய்யான ஆசீர்வாதம். வீம்புகளில் மேன்மை பாராட்டினால் அது நமக்குப் பொல்லாங்காயிருக்கும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தால் அது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நம்முடைய சுயநம்பிக்கையை நாம் சார்ந்துகொள்ளக்கூடாது. கர்த்தரைச் சார்ந்துகொள்ளவேண்டும். வீம்புகளில் மேன்மை பாராட்டக்கூடாது. கர்த்தருடைய கிருபையை நினைத்து அவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும் (யாக் 4:16).

சில சமயங்களில் நம்முடைய அறிவுக்கும் நம்முடைய செயலுக்கும் சம்பந்தம் இருக்காது. இரண்டும் ஒத்துப்போகாது. ஒருவர் நன்மை செய்ய அறிந்திருப்பார். ஆனால் அவர் நன்மை செய்யமாட்டார். அது அவருக்குப் பாவமாயிருக்கும். அவருடைய அறிவு அவருடைய பாவத்திற்குச் சாட்சிகொடுக்கும். ஒரு சிலர் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாவம் செய்வார்கள். அவர்களுடைய மனச் சாட்சியே அவர்களைக் குற்றப்படுத்தும்.

பாவங்களில் இரண்டு வகை உண்டு. அவையாவன: 1. செய்யக்கூடாததை செய்வது 2. செய்யவேண்டியதை செய்யாமலிருப்பது. கர்த்தருடைய சமுகத்தில் நாம் நியாயம் விசாரிக்கப்படும் போது, கர்த்தர் இவ்விரண்டு விதமான பாவங்களையும் விசாரிப்பார். நன்மை செய்ய அறிந்திருக்கிறவர்கள் அதைச் செய்யவேண்டும். அதைச் செய்யவில்லையென்றால் அது அவர்களுக்குப் பாவமாயிருக்கும். அதுபோலவே ஒரு காரியம் தீமையென்று அறிந்திருந்தும் அந்த தீமையை செய்கிறவர்களுக்கு அது பாவமாயிருக்கும் (யாக் 4:17).

5 அதிகாரம்

ஏழைகளை ஒடுக்கிற ஐசுவரியவான்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் (யாக் 5:1-6). நீதிமான்களுக்கு ஆக்கினைகளும் சோதனைகளும் வந்தாலும் அவற்றை அவர்கள் பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும் (யாக் 5:7-11). வானத்தின் பேரிலோ, பூமியின் பேரிலோ சத்தியம் பண்ணுவதைத் தவிர்த்துவிடவேண்டும் (யாக் 5:12). நாம் துன்பப்படும்போது ஜெபம்பண்ணவேண்டும். மகிழ்ச்சியாயிருக்கும்போது சங்கீதம் பாடவேண்டும் (யாக் 5:13). பிணியாளிகளுக்காக எண்ணெய் பூசி ஜெபம்பண்ணுவது (யாக் 5:14,15). விசுவாசிகள் தங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும். ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணவேண்டும் (யாக் 5:16-18). சத்தியத்தை விட்டு விலகி மோசம்போகிறவர்களை கர்த்தரிடத்தில் திரும்பவும் அழைத்து வரவேண்டும் (யாக் 5:19,20).

ஐசுவரியவான்கள்
யாக் 5 : 1-3

யாக் 5:1. ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்.

யாக் 5:2. உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின.

யாக் 5:3. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.

யாக்கோபு இந்த அதிகாரத்தில் முதலாவது பாவிகளுக்கும் அதன்பின்பு பரிசுத்தவான்களுக்கும் ஆலோசனைகள் சொல்லுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐசுவரியவான்களை கடிந்துகொண்டதை யாக்கோபு அங்கீகரித்து எழுதுகிறார். இயேசுகிறிஸ்து அநியாயம் செய்கிற ஐசுவரியவான்களைப் பற்றிச் சொல்லும்போது, "ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ, உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது" (லூக் 6:24) என்று சபிக்கிறார்.

யூதமார்க்கத்தில் ஐசுவரியவான்களும் இருக்கிறார்கள். தரித்திரரும் இருக்கிறார்கள். தரித்திரர்கள் அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கிறார்கள். ஐசுவரியவான்களில் அநேகர் கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்களுக்கு தங்கள் ஐசுவரியமே பிரதானமானதாக தெரிகிறது. இயேசுகிறிஸ்துவை நம்புவதற்குப் பதிலாக உலக ஐசுவரியத்தை நம்புகிறார்கள். ஐசுவரியவான்கள் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். பிறருக்குத் தீங்கு செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற தரித்திரர்களை இவர்கள் ஒடுக்குகிறார்கள். துன்பப்படுத்துகிறார்கள்.

பிறருக்குத் தீங்கு செய்யும் ஐசுவரியவான்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று யாக்கோபு முன்னறிவிக்கிறார். "ஐசுவரியவான்களே கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்" (யாக் 5:1) என்று கூறுகிறார். அவர்கள்மீது நிர்ப்பந்தங்கள் வரப்போகிறது. அவர்கள் தங்கள் ஐசுவரியத்தினிமித்தம் சந்தோஷமாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்களுடைய ஐசுவரியத்தினிமித்தமாய் அவர்களுக்கு நிர்ப்பந்தம் வரப்போகிறது.

ஐசுவரியவான்கள் புசித்து, குடித்து, மகிழ்ச்சியாயிருக்க விரும்புவார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை அலறி அழுமாறு எச்சரிக்கிறார். மிருகங்களைப்போல ஜீவிக்கிறவர்கள் அவற்றைப்போல ஊளையிட்டுத்தான் ஆகவேண்டும்.

ஐசுவரியவான்களுடைய ஐசுவரியம் அழிந்துபோகும். அவர்களுடைய வஸ்திரங்கள் பொட்டரித்துப்போகும் (யாக் 5:2). ஐசுவரியவான்கள் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது தங்கள் ஐசுவரியத்தின்மீது பற்றுதலாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்புகிற ஐசுவரியம் அழிந்துபோகும். அது அவர்களுக்கு பிரயோஜனமில்லாமல் போகும்.

ஐசுவரியவான்கள் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்க்கிறார்கள். தங்களுடைய முதிர்வயதில் பொக்கிஷம் தங்களுக்கு பிரயோஜனமாயிருக்குமென்று நினைத்து அவற்றைச் சேர்த்து குவிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துப்போகும். அவைகளிலுள்ள துரு அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியாயிருக்கும். அவர்களுடைய பொன்னும் வெள்ளியும் அக்கினியைப்போல அவர்களுடைய மாம்சத்தைத் தின்னும்.

அவர்களுடைய பொக்கிஷத்தினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் இருக்காது. தங்கள் சந்தோஷத்திற்காக அவர்கள் பொக்கிஷங்களைச் சேர்த்தார்கள். ஆனால் அவர்கள் சேர்த்து வைத்த பொக்கிஷங்களோ அவர்களுக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுக்கும். அவர்களுடைய ஐசுவரியத்தினிமித்தமாய் அவர்களுக்கு ஆக்கினை வரும். சந்தோஷத்தின் ஐசுவரியம் கோபாக்கினையின் ஐசுவரியமாய் மாறிப்போகும்.

அநியாயம்
யாக் 5 : 4-6

யாக் 5:4. இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது.

யாக் 5:5. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்.

யாக் 5:6. நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்துநிற்கவில்லை.

ஐசுவரியவான்கள் பேராசை உள்ளவர்களாக இருக்கிறார்கள். கர்த்தரே நமக்கு ஐசுவரியத்தைத் தருகிறவர். கர்த்தர் கொடுக்கிற ஐசுவரியத்தை நாம் பயபக்தியோடு ஏற்றுக்கொண்டு, கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். ஐசுவரியத்தினிமித்தம் பெருமைப்படக் கூடாது. மனத்தாழ்மையோடு ஜீவிக்க வேண்டும். நம்முடைய ஐசுவரியத்தினால் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

நம்முடைய ஐசுவரியத்தை கர்த்தருக்குச் சித்தமான வழியில் செலவுபண்ணாமல், பேராசைப்பட்டு சேர்த்து வைப்போமென்றால், நம்முடைய ஐசுவரியமே நமக்கு சாபமாகயிருக்கும். நாம் சேர்த்து வைத்த பொன்னும் வெள்ளியும் துருப்பிடிக்கும். அவைகளிலுள்ள துரு நமக்கு விரோதமாகச் சாட்சி கொடுக்கும்.

ஐசுவரியமுள்ளவர்களுடைய கைகளில் அதிகாரமும் சேர்ந்துவிடுகிறது. ஐசுவரியவான்கள் தங்களிடத்திலுள்ள அதிகாரத்தை நீதியாயும் நியாயமாயும் பயன்படுத்தவேண்டும். ஆனால் ஐசுவரியவான்களில் அநேகர் நீதியுள்ளவர்களாக இருப்பதில்லை. ஐசுவரியவான்கள் தங்களிடத்திலுள்ள அதிகாரத்தை தவறுதலாகப் பயன்படுத்துகிறார்கள். ஏழைகளை ஒடுக்குகிறார்கள். வேலைக்காரர்களுக்கு நியாயமாய் கூலி கொடுப்பதில்லை. வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலியை ஐசுவரியவான்கள் அநியாயமாய்ப் பிடித்துக்கொள்கிறார்கள்.

வேலைசெய்கிறவர்களுக்கு சரியான கூலியைக் கொடுக்கவேண்டும். ஆனால் ஐசுவரியவான்களோ வேலைக்காரர்களுக்கு நியாயமான கூலியைக் கொடுக்காமல் அவர்களோடு பேரம் பேசுகிறார்கள். வேலைக்காரர்களிடத்தில் கடினமாய் வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட கூலியைக் கொடுக்காமல் அதை அநியாயமாய்ப் பிடித்துக் கொள்கிறார்கள். வேலைக்காரருடைய கூலியை அநியாயமாய்ப் பிடித்துக்கொண்டால் அது கர்த்தருடைய சமுகத்தில் கூக்குரலிடும். அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்படும்.

ஐசுவரியவான்கள் பூமியிலே சம்பிரமமாய் வாழ்கிறார்கள். அவர்கள் சுகபோகத்தில் உழல்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கொழுத்தவைகளை அடித்து விருந்து பரிமாறுவது வழக்கம். எல்லா நாட்களிலும் கொழுத்தவைகளை அடிக்க மாட்டார்கள். எப்போதாவது ஒரு விசேஷித்த நாளில்தான் கொழுத்தவைகளை அடித்து சந்தோஷமாய்ப் புசிப்பார்கள். ஆனால் ஐசுவரியவான்களோ கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல தங்கள் இருதயங்களை அநுதினமும் போஷிக்கிறார்கள் (யாக் 5:5).

நாம் சந்தோஷமாயிருப்பதை கர்த்தர் தடைபண்ணவில்லை. புசிப்பதையும் அவர் தடுப்பதில்லை. ஆனால் இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும்போது, புசிப்பது மாத்திரமே நம்முடைய பிரதான வேலையென்று நினைத்து, இடைவிடாமல் புசித்துக் கொண்டிருக்கக்கூடாது. பெருந்தீனி உண்பது பாவம். நாம் சந்தோஷப்படுவது தவறல்ல. ஆனால் உலகப்பிரகாரமான காரியங்களில் எப்போதுமே சந்தோஷப்பட வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இப்பிரபஞ்சத்தின் ஆசையை நிறைவேற்றுவது தேவனுக்கு விரோதமான பாவம். மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறவர்கள் பாவமான கண்ணிகளில் சிக்கிக்கொள்வார்கள்.

சம்பிரமமாய் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் சுகபோகத்தில் உழலுவார்கள். நமக்கு ஐசுவரியம் தாராளமாயிருக்கும் போது மனத்தாழ்மையிருக்காது. பெருமை வந்துவிடும். எல்லாவற்றையும் அனுபவிக்கவேண்டும் என்னும் ஆசை உண்டாகும். ஐசுவரியத்தின் மிகுதியினால் சம்பிரமமாய் வாழவேண்டும் என்னும் ஆசை உண்டாகும். சுகபோகங்களை அனுபவிக்கவேண்டும் என்னும் இச்சை உண்டாகும். இந்த இச்சைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஐசுவரியவான்களிடத்தில் பணம் தாராளமாகயிருக்கிறது.

ஐசுவரியவான்கள் கர்த்தரை மறந்துவிட்டு தங்களுடைய காரியங்களை மாத்திரமே கவனிக்கிறார்கள். தங்கள் ஐசுவரியத்தைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவிபுரிவதற்குப் பதிலாக சம்பிரமமாய் வாழ்கிறார்கள். சுகபோகத்தில் உழலுகிறார்கள். கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல தங்கள் இருதயங்களைப் போஷிக்கிறார்கள். எல்லா நாட்களுமே இவர்களுக்கு பண்டிகை நாட்களைப்போல இருக்கிறது. பண்டிகை நாட்களில் கொழுத்த ஆடுகளையும் கடாக்களையும் பலிசெலுத்தி, அவற்றை புசிப்பதுபோல, ஐசுவரியவான்கள் அநுதினமும் புசிக்கிறார்கள். தங்கள் இருதயங்களை சந்தோஷமாய்ப் போஷிக்கிறார்கள்.

ஐசுவரியவான்களின் சம்பிரமமான வாழ்வைப்பற்றி வேதபண்டிதர்கள் பலவிதமாக கருத்து சொல்லுகிறார்கள். ஐசுவரியவான்கள் தங்கள் இருதயங்களை சந்தோஷமாய்ப் போஷிப்பதினால் தவறு ஒன்றுமில்லையென்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். தங்களிடத்திலுள்ளதை அவர்கள் தங்களுக்கு செலவு பண்ணுகிறார்கள். ஐசுவரியவான்களிடத்தில் பணம் தாராளமாயிருக்கிறது. ஆகையினால் எல்லா காரியங்களுக்கும் தாராளமாய்ப் பணம் செலவுபண்ணுகிறார்கள். இதில் தவறு ஒன்றுமில்லை என்பது ஒரு சிலருடைய கருத்து. இப்படிப்பட்ட ஐசுவரியவான்களுக்கு அவர்களுடைய வயிறுதான் தேவனாகயிருக்கிறது.

பெருந்தீனி உண்பது பாவம். கர்த்தருக்காக ஜீவிக்காமல் நம்முடைய வயிற்றுக்காக நாம் ஜீவிப்போமென்றால் அது கர்த்தருக்கு விரோதமான பாவமாகவே இருக்கும். நம்மிடத்தில் எவ்வளவு ஐசுவரியம் இருந்தாலும், அது கர்த்தர் கொடுத்திருக்கிற ஆசீர்வாதம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவருக்குச் சித்தமான வழியில் செலவுபண்ண வேண்டும். நம்முடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் நமக்கு ஐசுவரியம் கொடுக்கவில்லை. தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கே தேவன் நம்மிடத்தில் ஐசுவரியத்தை நம்பி ஒப்புக் கொடுத்திருக்கிறார். ஐசுவரியவான்கள் கர்த்தரிடத்தில் பக்தியாயிருக்கவேண்டும். பிறரிடத்தில் அன்புகூரவேண்டும். ஐசுவரியவான்களிடத்தில் ஐசுவரியம் பெருகியிருப்பதினால் அவர்கள் பிறருக்கு உதவிபுரிகிற காரியங்களிலும் பெருகவேண்டும்.

பெருமை, சோம்பேறித்தனம், பெருந்தீனி ஆகியவையெல்லாமே தேவனுடைய சமுகத்தில் பாவமாகவே இருக்கும். ஐசுவரியவான்களாக இருந்தாலும், தரித்திரராகயிருந்தாலும் நாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே ஜீவிக்கவேண்டும். சம்பிரமமாய் வாழ்ந்து சுகபோகத்தில் உழலவேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுக்கிற ஆசீர்வாதங்களை அவருக்குச் சித்தமான வழிகளில் செலவுபண்ணவேண்டும். நம்மிடத்திலுள்ள ஐசுவரியம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டுமென்றால் நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கீழ்ப்படிய வில்லையென்றால் நம்மிடத்திலுள்ள ஐசுவரியம் நமக்கு ஆசீர்வாதமாயிராது. அது சாபமாகவே இருக்கும்.

கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல நம்முடைய இருதயங்களைப் போஷிப்பதினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப் போவதில்லை. நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய இருதயத்தின் சந்தோஷத்திற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகவும் அஸ்திபாரமாகவும் இருக்கவேண்டும். நம்முடைய சந்தோஷத்திற்கு ஐசுவரியங்களையும், போஜனங்களையும் அஸ்திபாரமாகப் போட்டால், நாம் மணலின்மீது வீடுகட்டுகிறவர்களைப்போல இருப்போம். ஐசுவரியம் நம்மைவிட்டுப் போய்விட்டால் நம்முடைய சந்தோஷமும் நம்மைவிட்டுப்போய்விடும். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறவர்களோ நித்திய சந்தோஷதைப் பெற்றுக்கொள்வார்கள் (யாக் 5:5).

ஐசுவரியவான்கள் தங்களுடைய திரளான ஐசுவரியத்தினிமித்தமாய் வீண் பெருமையோடிருக்கிறார்கள். ஆணவமாயிருக்கிறார்கள். தங்களை எதிர்த்து நிற்பதற்கும், எதிர்த்துப் பேசுவதற்கும் யாருமில்லையென்று நினைத்து இறுமாப்பாயிருக்கிறார்கள். நீதிமான்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து கொலைசெய்கிறார்கள். நீதிமான்களும் ஐசுவரியவான்களோடே எதிர்த்து நிற்பதில்லை (யாக் 5:6).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டார். அடிக்கப்படப்போகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போல அவர் அமைதியாகப்போனார். ரோமப்பேரரசின் சேவகர்கள் இயேசுகிறிஸ்துவை அடித்தார்கள், அறைந்தார்கள், துன்பப்படுத்தினார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ அவர்களுக்கு எதிர்த்து நிற்கவில்லை.

நீதிமான்கள் துன்பப்படுத்தப்படும் போது, அவர்களும் கிறிஸ்துவின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறார்கள். தங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்கு நீதிமான்கள் எதிர்த்து நிற்பதில்லை. ஐசுவரியவான்கள் இதை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து கொலைசெய்கிறார்கள்.

அநியாயம் செய்கிற ஐசுவரியவான்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற நியாயத்தீர்ப்பு ஒன்று வரப்போகிறது. கர்த்தர் அவர்களை நீதியாய் நியாயம் விசாரித்து, அவர்களுடைய அநியாயங்களினிமித்தமாய் அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார். ஆனால் ஐசுவரியவான்களோ தங்கள்மீது வரப்போகிற நியாயத்தீர்ப்பைப்பற்றி கவலைப்படாமல், தங்கள் ஐசுவரியத்தின் மயக்கத்தினால், நீதிமான்களுக்கு அநீதி செய்கிறார்கள். நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்து கொலைசெய்கிறார்கள் (யாக் 5:6).

சகோதரரே
யாக் 5 : 7-9

யாக் 5:7. இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடியபொறுமையோடே காத்திருக்கிறான்.

யாக் 5:8. நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

யாக் 5:9. சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.

யாக்கோபு இதுவரையிலும் ஐசுவரியவான்களுக்கு எச்சரித்து ஆலோசனை சொன்னார். இப்போது கர்த்தருடைய பரிசுத்தவான்களோடு பேசுகிறார். இப்பிரபஞ்சத்தில் துன்மார்க்கரும் இருக்கிறார்கள். தரித்திரரை அநியாயமாய் ஒடுக்கிற ஐசுவரியவான்களும் இருக்கிறார்கள். அதேவேளையில் கர்த்தருக்குப் பயந்து பரிசுத்தமாய் ஜீவிக்கிற பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள். ஐசுவரியவான்கள் துன்பப்படுத்துகிறார்கள். நீதிமான்களோ துன்பப்படுகிறார்கள்.

பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிற கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு யாக்கோபு ஆறுதலான மூன்று சத்தியங்களை இங்கு சொல்லுகிறார். அவையாவன : 1. கர்த்தர் வருமளவும் நீடியபொறுமையாயிருங்கள் 2. உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் 3. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து வானத்திற்குப் பரமேறிப்போனார். மறுபடியும் வருவேன் என்று வாக்குப்பண்ணிவிட்டு பரலோகத்திற்குச் சென்றார். அவருடைய வருகை எப்போது இருக்குமென்று நமக்குத் தெரியவில்லை. கர்த்தரின் வருகை உடனே வரலாம். ஒருவேளை தாமதமாகலாம். கர்த்தருடைய வருகை எப்போது இருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவர் வருமளவும் நீடியபொறுமையாயிருக்க வேண்டும். அவருக்காகக் காத்திருக்க வேண்டும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலம் வரையிலும் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். நம்முடைய ஊழியத்தை செய்து முடித்தபின்பு கர்த்தர் நமக்கு கொடுக்கப்போகும் வெகுமதிக்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

வயலில் வேலை செய்கிறவர்கள் தங்கள் வேலையை செய்து முடித்துவிட்டு, தாங்கள் செய்த வேலைக்கான கூலியை வாங்கிக்கொள்வதற்கு பொறுமையோடு காத்திருப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் நம்முடைய ஊழியத்தை நிறைவேற்றிவிட்டு கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்காகக் காத்திருக்கவேண்டும்.

நமக்குப் பொறுமைவேண்டுமென்று தத்துவ ஞானிகள் எல்லோரும் சொல்லுகிறார்கள். உலகப்பிரகாரமான பொறுமை வேறு. ஆவிக்குரிய பொறுமை வேறு. உலகப்பிரகாரமாக பொறுமையோடு இருக்கிறவர்களுக்கு, வெகுமதி வாக்குப்பண்ணப்படவில்லை. அவர்கள் நிச்சயமில்லாமல் காத்திருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கிறோம். தேவனுடைய வார்த்தையின் பிரகாரமாக, அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நாம் காத்திருக்கிறோம். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நாம் காத்திருக்கிறோம். கர்த்தர் தம்முடைய சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்தியிருப்பதினால், அந்தச் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து நாம் பொறுமையோடும் விசுவாசத்தோடும் காத்திருக்கிறோம்.

நிலத்தில் பயிரிடுகிறவர், பயிரிட்ட பின்பு பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று காத்திருக்கிறார். அவருக்கு நற்பலன் உண்டாக வேண்டுமென்றால் முன்மாரியும் பின்மாரியும் வரவேண்டும். இவ்விரண்டுமே மனுஷருடைய சித்தத்தின் பிரகாரம் வராது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் அவருக்கேற்ற வேளையில்தான் முன்மாரியும் பின்மாரியும் வரும். நிலத்தில் பயிரிடுகிறவர் இந்தச் சத்தியத்தைத் தெரிந்து வைத்திருக்கிறார். தன்னுடைய நிலத்தில் பயிரிட்ட பின்பு, பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடியபொறுமையோடே காத்திருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் கர்த்தர் அனுப்புகிற ஆசீர்வாதமான முன்மாரியும் பின்மாரியும் வரும் (யாக் 5:7).

ஒவ்வொரு விசுவாசியும் நீடிய பொறுமையோடு காத்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இதைக் கற்றுக்கொள்வது எளிதான பாடமல்ல. நடைமுறையில் நீடிய பொறுமையோடிருப்பது மிகவும் கடினம். கர்த்தருடைய கிருபை நமக்கு இருந்தால் மாத்திரமே நம்மால் நீடிய பொறுமையோடு காத்திருக்க முடியும்.

நீடிய பொறுமையோடிருப்பது கடினம் என்பதினால், யாக்கோபு இந்தச் சத்தியத்தை மறுபடியுமாகச் சொல்லுகிறார். "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக் 5:8) என்று திரும்பவும் இந்தச் சத்தியத்தைச் சொல்லுகிறார்.

நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்தவேண்டும். நம்முடைய விசுவாசம் உறுதியாயிருக்கவேண்டும். நன்மையான காரியங்களைத் தொடர்ந்து செய்யவேண்டும். நன்மை செய்வதில் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் நாம் எடுத்திருக்கிற தீர்மானங்களை உண்மையோடு நிறைவேற்றவேண்டும். பரலோகத்தை நாம் நோக்கிப்பார்க்கும் பார்வை நிலையுள்ளதாகயிருக்க வேண்டும். கர்த்தருடைய வருகையை பிரகாசமுள்ள மனக்கண்களால் நோக்கிப் பார்க்கவேண்டும்.

இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும் வரையிலும் நமக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டு. இவையெல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். இவற்றிற்கு மத்தியிலும் நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்தவேண்டும் (யாக் 5:8).

கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது. இது சத்தியமான வார்த்தை. கர்த்தர் சொன்ன வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும். இது சீக்கிரத்தில் நிறைவேறும். நாம் இன்னும் அதிகக்காலம் பொறுத்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது (யாக் 5:8).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடக்கூடாது. நாம் மற்றவர்களுக்கு விரோதமாய் முறையிடுவதினால் நமக்கும் பிரச்சனைகள் உண்டாகும். மற்றவர்களுக்கும் பிரச்சனைகள் உண்டாகும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோருக்குமே பொதுவான சத்துரு ஒருவன் இருக்கிறான். விசுவாசிகளெல்லோரும் ஒன்று சேர்ந்து, ஒருமனப்பட்டு, நம்முடைய சத்துருவாகிய சாத்தானுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். விசுவாசிகள் இணைந்து போராடவேண்டும். இணைந்திருக்க வேண்டிய நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிட்டால் நமக்குள் ஒற்றுமை இருக்காது. நம்முடைய பலம் குறைந்து போகும். சத்துருவுக்கு முன்பாக நாம் பலவீனமாகிவிடுவோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே இப்பிரபஞ்சத்தில் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நம் எல்லோருக்குமே பாடுகள் உண்டு. நாம் பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும். வேதனைகளை அனுபவிக்கும் போது, மற்ற சகோதரருக்கு விரோதமாக முறையிடாதிருக்க எச்சரிப்பாயிருக்க வேண்டும். நம்மைப்போலவே மற்ற விசுவாசிகளும் கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவிக்கிறார்கள் என்னும் சிந்தனை நமக்குள் இருக்கவேண்டும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிட்டால், அவிசுவாசிகளைப்போலவே அவர்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். நம்முடைய கர்த்தராகிய நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிற காலமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முதலாவது விசுவாசிகளுக்குத்தான் வரும். அதன்பின்பு தான் அவிசுவாசிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

நாம் மிகுந்த கவனத்தோடு, நீடிய பொறுமையோடு, உபத்திரவங்களைச் சகித்துக்கொண்டு, மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாய் நாம் முறையிடாதிருக்க வேண்டும். இல்லையென்றால் அவிசுவாசிகளுக்கு நியாயத்தீர்ப்பு வருவதுபோல, விசுவாசிகளாகிய நமக்கும் நியாயத்தீர்ப்பு வரும்.

பொறுமையாயிருக்கிறவர்கள் யாக் 5 : 10,11

யாக் 5:10. என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

யாக் 5:11. இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.

யாக்கோபு பொறுமையாயிருக்கிற ஒரு சிலரை இங்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். முதலாவதாக நிலத்தில் பயிரிடுகிறவரைப்பற்றிச் சொல்லுகிறார் (யாக் 5:7). பயிரிடுகிறவர் தானியத்தை விதைத்துவிட்டு நல்ல அறுவடைக்காக காத்திருக்கிறார். பருவமழை ஏற்றகாலத்திலே நன்றாகப் பெய்தால்தான், விதைக்கப்பட்ட தானியம் நன்றாக வளரும். அறுவடையும் தாராளமாகயிருக்கும். விதைத்த உடனே அறுவடை செய்யமுடியாது. விதைத்த தானியம் பல மாதங்கள் பூமியில் வளரவேண்டும். அதன்மீது முன்மாரியும் பின்மாரியும் பொழியவேண்டும். பயிரிடுகிறவர் முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடியபொறுமையோடே காத்திருக்கிறார். பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று அவர் காத்திருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ மகிமையின் கரீடத்திற்காகக் காத்திருக்கிறோம். பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று பயிரிடுகிறவர் காத்திருப்பதுபோல, விசுவாசிகளாகிய நாம் மகிமையின் கிரீடத்தை அடைவதற்கு நீடிய பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நாம் பயிரிடுகிறவரைவிட அதிககாலம் காத்திருக்க வேண்டியது வரலாம். அவர் பூமியின் நற்பலனுக்காகத்தான் காத்திருக்கிறார். ஆனால் விசுவாசிகளாகிய நாமோ மகிமையின் கிரீடத்திற்காகக் காத்திருக்கிறோம். நாம் எதிர்பார்க்கிற மகிமையின் கிரீடம் பூமியின் நற்பலனைவிட விலையேறப் பெற்றது. இதைப் பெற்றுக்கொள்வதற்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நீடிய பொறுமையோடு காத்திருக்கலாம்.

கர்த்தர் வருமளவும் நாம் நீடிய பொறுமையோடு காத்திருக்கிறோம். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் பொறுமை இழந்துவிடக்கூடாது. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடக்கூடாது. நம் எல்லோரையும் நியாயந்தீர்க்கிற நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். வாசற்படியில் வந்து கதவைத்தட்டும் தூரத்தில் நியாயாதிபதி நமக்கு சமீபமாயிருக்கிறார். நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிட்டால், நியாயாதிபதி நம்மையும் நியாயந்தீர்ப்பார் (யாக் 5:9).

நம்முடைய பொறுமையின்மையும், நம்முடைய இருதயத்திலுள்ள விரோத சுபாவமும் நம்முடைய நியாயத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கும். நமக்குண்டாகும் ஆக்கினைத்தீர்ப்புக்கு நாமே காரணமாயிருப்போம். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருக்க வேண்டும். நீடியபொறுமையோடு கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்கவேண்டும். துன்பப்படுதலுக்கும், நீடிய பொறுமைக்கும், தீர்க்கதரிசிகளை நமக்கு முன்மாதிரிகளாகவும், திருஷ்டாந்தமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும் (யாக் 5:10).

இந்த உலகத்தில் நல்லவர்கள் அநேகர் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்கு அதிக பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாகிறது. அவையெல்லாவற்றையும் நற்குணமுள்ளவர்கள் நீடிய பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்திலே தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினாலே பேசினார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை பயபக்தியோடும், உண்மையோடும் ஜனங்களிடத்தில் அறிவித்தார்கள். மனுஷருடைய நன்மைக்காகவே அவர்கள் பேசினார்கள்.

ஆனால் மனுஷரோ தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களைத் துன்பப்படுத்தினார்கள். தாங்கள் துன்பப்படும்போதும், தீர்க்கதரிசிகள் அந்தத் துன்பங்களை நீடியபொறுமையோடு சகித்துக் கொண்டார்கள். அவர்கள் யாருக்கு விரோதமாகவும் முறையிடவில்லை. தீர்க்கதரிசிகள் கர்த்தரிடத்திலிருந்து வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டார்கள். கர்த்தரை விசுவாசித்து தீர்க்கதரிசன வார்த்தைகளை அறிவித்தார்கள். கர்த்தரை நம்பி துன்பங்களை நீடியபொறுமையோடு சகித்துக்கொண்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் துன்பப்படும்போது, நமக்கு முன்பாக துன்பப்பட்ட தீர்க்கதரிசிகளை நினைத்துக் கொள்ளவேண்டும். நீடியபொறுமையோடு அவர்கள் துன்பங்களைச் சகித்துக்கொண்டதையும் நாம் மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும். கர்த்தருடைய நாமத்தினால்பேசின தீர்க்கதரிசிகளை நமக்கு முன்மாதிரிகளாகவும், திருஷ்டாந்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் (யாக் 5:10).

பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்கள் என்று சொல்லுகிறோம். பொறுமையாயிருக்கிறவர்களுக்கு யோபு நல்ல முன்மாதிரியாக இருக்கிறார். அவர் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரைத் துதித்தார். யோபுவின் பொறுமையைக் குறித்து நாமும் கேள்விப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய செயலின் முடிவையும் நாம் யோபுவின் சரித்திரப் புஸ்தகத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறார். யோபுவின் பொறுமையை கர்த்தர் கனப்படுத்தினார். கர்த்தர் யோபுவை ஆசீர்வதித்தார். தாம் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவர் என்பதை யோபுவினுடைய ஜீவியத்தின் மூலமாய் கர்த்தர் நிரூபித்திருக்கிறார் (யாக் 5:11).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பல உபத்திரவங்கள் வரலாம். நாம் பல பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கலாம். தேவனுடைய நாமத்தினிமித்தமாய் நாம் அனுபவிக்கிற எல்லா பாடுகளுக்கும் கர்த்தர் நமக்கு ஆசீர்வாதங்களை பிரதிபலனாகக் கொடுப்பார். தேவன் நமக்கு இரக்கம் காண்பிப்பார். தம்முடைய கிருபையை நமக்கு வெளிப்படுத்துவார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிற தம்முடைய ஊழியத்தை உண்மையோடு நிறைவேற்றவேண்டும். உற்சாகமாய் ஊழியம் செய்யவேண்டும். சோதனைகளைச் சகித்துக்கொள்ள வேண்டும். நீடிய பொறுமையோடு சோதனைகளைச் சகித்துக் கொள்கிறவர்களுக்கு கர்த்தர் மகிமையின் கிரீடத்தைத் தருவார் (யாக் 5:11).

சத்தியம் பண்ணக்கூடாது
யாக் 5:12

யாக் 5:12. விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்.

சத்தியம் பண்ணுவது பாவம். சத்தியம் பண்ணுகிற பாவத்திற்கு விரோதமாக, யாக்கோபு எச்சரித்துச் சொல்லுகிறார். நம்முடைய வார்த்தையில் உண்மையிருக்கவேண்டும். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லவேண்டும். உள்ளதை உள்ளதென்று சொல்லிவிட்டு, அதை உறுதிபண்ணுவதற்கு, சத்தியம் பண்ண வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஒருசிலர் தங்கள் மனதில் தோன்றியதையெல்லாம் சொல்லிவிட்டு சத்தியம்பண்ணுவார்கள். யூதர் மத்தியிலே சத்தியம்பண்ணுகிற பழக்கம் அதிகமாய்க் காணப்பட்டது. விசுவாசிகளில் சிலரும் சத்தியம் பண்ணுகிற பாவத்தைச் செய்தார்கள். சத்தியம்பண்ணுவது பாவம் என்பது கூட அநேகருக்கு தெரியவில்லை.

ஒரு சிலர் தங்களுடைய பேச்சுக்களை உறுதிபண்ணுவதற்காக தேவன் பேரிலே சத்தியம்பண்ணுகிறார்கள். இப்படி சத்தியம்பண்ணுகிறவர்கள் தேவனுடைய நாமத்தையும் அவருடைய அதிகாரத்தையும் தூஷிக்கிறார்கள். ஒரு சிலர் சத்தியம்பண்ணுவதில் தேர்ச்சி பெற்றவர்களாகயிருப்பார்கள். எதைச் சொன்னாலும் அதை சத்தியமாகச் சொல்லுவதாகச் சொல்லுவார்கள். சத்தியம்பண்ணுவது இவர்களுக்கு சுபாவ பழக்கமாக மாறிவிடும். இவர்கள் பொய் சொன்னாலும் அதையும் சத்தியம்பண்ணி உறுதிபண்ண விரும்புவார்கள். வானத்தின் பேரிலும், பூமியின் பேரிலும் சத்தியம் பண்ணுவார்கள். இவை தவிர தங்களுக்கு நலமாய்த் தோன்றுகிற எல்லாவற்றின் பேரிலும் சத்தியம் பண்ணுவார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வானத்தின் பேரிலோ, பூமியின் பேரிலோ, வேறு எந்த ஆணையினாலோ சத்தியம் பண்ணக்கூடாது.

நம்முடைய வார்த்தையில் உண்மையும் உறுதியும் இருக்கவேண்டும். தெளிந்த சிந்தனையோடு பேசவேண்டும். பக்திவிருத்திக்கேதுவான பயபக்தியோடு பேசவேண்டும். யூதர்கள் தேவன்பேரில் சத்தியம்பண்ணமாட்டார்கள். அது பாவம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையினால் அவர்கள் தேவன்பேரில் சத்தியம் பண்ணுவதற்குப் பதிலாக வானத்தின் பேரிலோ அல்லது பூமியின்பேரிலோ சத்தியம்பண்ணுவார்கள். சிருஷ்டிகரின் பேரில் சத்தியம் பண்ணுவதற்குப் பதிலாக, சிருஷ்டிகளின் பேரில் சத்தியம் பண்ணுவார்கள். இப்படி சத்தியம்பண்ணுவதினால் தங்களுக்கு ஒரு பாவமும் வராது என்பது இவர்களுடைய நம்பிக்கை. ஆனால் இவர்களோ சிருஷ்டிகளின் பேரில் சத்தியம் பண்ணுவதினால், சிருஷ்டிகளை சிருஷ்கருக்கு ஒப்பாக்குகிறார்கள். அதே வேளையில் சிருஷ்டிகரின் பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள், சிருஷ்டிகரை சிருஷ்டிகளுக்கு ஒப்பாக்குகிறார்கள். தேவனுடைய நாமத்தையும் அவருடைய மகிமையையும், அவருடைய வல்லமையையும் தூஷிக்கிறார்கள்.

ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லவேண்டும். நம்முடைய வார்த்தையில் உண்மையும் உறுதியும் இருக்கவேண்டும். தெளிந்த சிந்தனையோடும் பூரண நிச்சயத்தோடும் பேசவேண்டும். வார்த்தையில் தயக்கமும் சந்தேகமும் இருக்கக்கூடாது. இருமனமுள்ளவர்களாகப் பேசக்கூடாது. இருமனமுள்ளவர்கள் தங்கள் வார்த்தைகளில் தடுமாறுவார்கள். தங்களுடைய வார்த்தைகளில் இவர்களுக்கே நிச்சயமிருக்காது. ஆனாலும் தங்கள் வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காக எதன் பேரிலாவது சத்தியம்பண்ணுவார்கள். இப்படிப்பட்டவர்கள் பொய்யை மெய் என்பார்கள். மெய்யை பொய் என்பார்கள். இவர்கள்மீது தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும். இவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்.

துன்பமும் மகிழ்ச்சியும்
யாக் 5:13

யாக் 5:13. உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக் கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.

தேவன் நமக்குக் கொடுக்கிற பராமரிப்புக்களை நாம் நன்றியுள்ள இருதயத்தோடு பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய பராமரிப்பு எல்லா வேளையிலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. அவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நம்மைப் பராமரிக்கிறார். நம்முடைய ஜீவியத்தில் உயர்வும் இருக்கும். தாழ்வும் இருக்கும். மகிழ்ச்சியும் இருக்கும். துன்பமும் இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் நாம் இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார்த்து பொறுமையோடு ஓடுகிறோம். நாம் ஓடுகிற பாதை ஒரே சீராக இருப்பதில்லை. அதில் மேடுகளும் பள்ளங்களும் இருக்கலாம். பாதை எப்படியிருந்தாலும் நாம் சீராக ஓடுவதற்குப் பழகவேண்டும். கர்த்தர் தாமே நம்மைப் பலப்படுத்தவேண்டும். நாம் விழுந்துவிடாமல் நேராக ஓடுவதற்கு கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் நிதானமாய் நடக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய துன்பங்கள் எல்லாவற்றையும் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபத்துடன் விண்ணப்பம்பண்ணவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாயிருக்கும்போது நாம் சங்கீதம் பாடவேண்டும். கர்த்தர் கொடுத்திருக்கிற கிருபைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும், பராமரிப்புக்களுக்காகவும் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

நாம் துன்பப்படும்போது ஜெபமே நமக்கு ஆறுதலாகவும் உதவியாகவும் இருக்கும். துன்பப்படுகிற வேளைகள் ஜெபம்பண்ணுகிற வேளைகள் என்று தீர்மானிக்கவேண்டும். பல வேளைகளில் தேவன் தாமே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நமக்கு துன்பங்களை அனுமதிக்கிறார். நாம் கர்த்தரை கருத்தாய் தேடவேண்டுமென்பதற்காக, கர்த்தர் நாம் துன்பப்படுவதை அனுமதிக்கிறார். நமக்குத் துன்பம் வராமல் எல்லாமே இன்பமாகயிருந்தால் நாம் கர்த்தரை மறந்துவிடுவோம். அவருடைய கிருபையை மறந்துவிடுவோம். நமக்குத் துன்பம் வந்துவிட்டால் உடனே கர்த்தருடைய சமுகத்தில் வந்து புலம்புவோம். தம்முடைய பிள்ளைகள் எப்போதும் தம்மோடு கூடயிருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

நமக்குத் துன்பம் வரும்போது பிறரை குற்றம் சொல்லுகிற சுபாவமும் நமக்குள் வந்துவிடும். மனுஷரைக் குற்றப்படுத்துவோம். நாம் துன்பப்படுகிற வேளைகளில் ஜெபம்பண்ணினால், மனுஷரைக் குற்றப்படுத்துவதற்கு நமக்கு வாய்ப்பு இருக்காது. கர்த்தர் மாத்திரமே நமக்கு முன்பாக இருப்பார். நம்முடைய துன்பங்களைக் கர்த்தரிடத்தில் முறையிடலாம். அவர்மீது குற்றம் சொல்லமுடியாது.

நாம் துன்பப்படும்போது நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காத்துக்கொள்ளவேண்டும். துன்பம் மிகுதியாவதினால் கர்த்தர் மீது நாம் வைத்திருக்கிற விசுவாசம் ஆட்டங்கண்டுவிடக்கூடாது. அது உறுதியாக நிலைத்திருக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது தேவனுடைய கிருபையை நாம் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தரிடத்தில் நாம் இன்னும் அதிகமாய் ஜெபம்பண்ணும்போது, தேவனுடைய அதிகமான கிருபைகளை இன்னும் அதிகமாய்ப் பெற்றுக்கொள்கிறோம். ஜெபம் அதிகரிக்கும்போது கிருபையும் அதிகரிக்கிறது.

நாம் மகிழ்ச்சியாயிருக்கும்போது சங்கீதம் பாடவேண்டும். இதுவே சங்கீதம் பாடுவதற்கு ஏற்ற வேளை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். நம்முடைய சந்தோஷம் பரிசுத்தமுள்ளதாயிருக்க வேண்டும். அது தேவனுக்கு பிரியமுள்ளதாகவும் இருக்கவேண்டும். தேவன் அருவருக்கிற சந்தோஷம் எதுவும் நம்மிடத்தில் காணப்படக்கூடாது.

கர்த்தர் நம்மை அதிகமாய் ஆசீர்வதிக்கும்போது வீண் பெருமைப்படாமல், நம்மை கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தாழ்த்தவேண்டும். அவர் காண்பிக்கிற கிருபைகளையும், நன்மைகளையும் நினைத்து கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். நாம் சந்தோஷமாயிருக்கும்போது நம்முடைய குடும்பத்தாரோடு சேர்ந்து சங்கீதம் பாடலாம். பரிசுத்தமான சந்தோஷம் நம்முடைய முழுக்குடும்பத்திற்கும், சபைக்கும் ஆசீர்வாதமாகயிருக்கும்.

வியாதி
யாக் 5 : 14,15

யாக் 5:14. உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.

யாக் 5:15. அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

வியாதி கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் வருகிறது. உலகப்பிரகாரமான ஜனங்களுக்கும் வருகிறது. நாம் வியாதிப்படும்போது சபையின் மூப்பர்களை வரவழைக்கவேண்டும். "மூப்பர்களை வரவழைப்பானாக" என்னும் வார்த்தையானது, கிரேக்க மொழியிலே, "மூப்பர்களைச் சென்று பார்ப்பானாக" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே நமக்கு எண்ணெய் பூசி, நமக்காக ஜெபம்பண்ணவேண்டும். அப்போது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் நம்முடைய வியாதியை சொஸ்தமாக்குவார்.

ஊழியக்காரர்கள் வியாதியஸ்தர்களுக்காக கர்த்தருடைய நாமத்தினாலே ஜெபம்பண்ணவேண்டும். இது கர்த்தர் ஊழியக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிற ஊழியம். விசுவாசிகளுக்கு வியாதிகள் வரும்போது, ஊழியக்காரர்கள் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசவேண்டும். விசுவாசிகளின் விசுவாசத்தை வர்த்திப்பதற்கு உதவிபுரியும் ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். வியாதியஸ்தருக்கு கர்த்தருடைய நாமத்தினாலே எண்ணெய் பூசி, அவர்களுக்காக ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறார். வியாதியஸ்தரை அற்புதமாக சொஸ்தமாக்குகிறார். இயேசுகிறிஸ்துவின் தழும்புகளால் நாம் குணமாகிறோம். கர்த்தரே நம்முடைய பரமவைத்தியர்.

நம்முடைய ஜெபம் விசுவாசமுள்ளதாகயிருக்க வேண்டும். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியைக் குணப்படுத்தும். ஊழியக்காரரும் வியாதிஸ்தரும் ஜெபத்தில் ஒருமனப்பட வேண்டும். கர்த்தர் கொடுத்திருக்கிற இந்த ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து, நாம் விசுவாசத்தோடு செயல்படும்போது, கர்த்தர் பிணியாளிகளை சொஸ்தமாக்குகிறார். வியாதியஸ்தர்மீது எண்ணெய் பூசுவதினால் அவர் குணமாகிவிடுவதில்லை. கர்த்தருடைய நாமத்தினாலே வியாதியஸ்தர்மீது எண்ணெய் பூசவேண்டும். மேலும் அதைத் தொடர்ந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில், அந்த வியாதியஸ்தருக்காக ஜெபம்பண்ணவேண்டும். அப்போதுதான் கர்த்தர் பிணியாளி சொஸ்தமாவார். ஜெபம்பண்ணாமல் எண்ணெய் மாத்திரம் பூசினால் வியாதி குணமாகாது.

வியாதியஸ்தருக்காக ஜெபம் பண்ணும்போது நாம் விசுவாசத்தோடு ஜெபம்பண்ண வேண்டும். விசுவாசமில்லாமல் வெறும் மந்திர வார்த்தைகளை ஓதுவதுபோல ஜெபம்பண்ணினால் வியாதி சொஸ்தமாகாது. நம்முடைய விசுவாசம் ஜீவனுள்ளதாக இருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்பாரென்றும், பிணியாளியை இரட்சிப்பார் என்றும் நாம் விசுவாசித்து ஜெபிக்கவேண்டும். ஊழியக்காரரிடத்திலும் விசுவாசம் இருக்கவேண்டும். அதே வேளையில் பிணியாளியினிடத்திலும் விசுவாசம் இருக்கவேண்டும்.

நாம் விசுவாசத்தோடு பிணியாளிக்காக ஜெபம்பண்ணும்போது, நம்முடைய விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் பிணியாளியை அவருடைய வியாதி படுக்கையிலிருந்து எழுப்புவார். அவர் பாவம் செய்தவரானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நாம் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது, ஊழியக்காரரும் வியாதியஸ்தரும் முதலாவதாக தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். பாவமே வியாதிக்கு காரணம். பாவம் மன்னிக்கப்படும்போது வியாதியும் சொஸ்தமாகும்.

பாவமே வியாதிக்கும், வியாதியின் மூலமாய் வரும் வேதனைக்கும், வியாதியினால்தான் உண்டாகும் மரணத்திற்கும் காரணம். பாவத்தின் சம்பளம் மரணம். இந்த மரணம் பொதுவாக வியாதியினால் தான் உண்டாகிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது வியாதியும் சொஸ்தமாகிறது.

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று ஜெபிக்கும்போது தேவன் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். வேதனைகளை நீக்கிப்போடுகிறார். தேவனுடைய கிருபை நமக்குக் காண்பிக்கப்படுகிறது என்பதை நாம் பிரத்தியட்சமாக அனுபவிக்கிறோம். நாம் இன்னும் அதிகமாய் ஜெபிக்கும்போது, தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்கு இன்னும் அதிகமாகக் காண்பிக்கப்படும் என்னும் விசுவாசம் நமக்குள் வளர்ச்சி பெறுகிறது.

குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுதல்
யாக் 5:16

யாக் 5:16. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும். நாம் ஒருவருக்கு விரோதமாக தப்பிதம் செய்திருக்கும்போது, நாம் செய்த தப்பிதத்தை அந்த சகோதரரிடம் அறிக்கையிடவேண்டும். நாம் யாருக்கு காயம் உண்டாக்கியிருக்கிறோமோ, அவரிடத்தில் நேரில் சென்று, முகமுகமாய் நாம் செய்த குற்றத்தை அவரிடத்தில் அறிக்கை செய்யவேண்டும். நம்முடைய குற்றங்களை நாம் ஒருவருக்கொருவர் அறிக்கை செய்தாலும், நாம் செய்த குற்றங்களை கர்த்தரிடத்தில் பிரதானமாய் அறிக்கை செய்யவேண்டும். கர்த்தரே நம்முடைய இரட்சகர். அவரே நம்முடைய பாவங்களை மன்னிக்கிறவர்.

நாம் பிறருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும். நம்முடைய இருதயத்தில் பாரம் நிரம்பியிருக்கும். நம்முடைய குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடும்போது, நம்முடைய இருதயத்தின் பாரம் இலகுவாயிருக்கும். நாம் யாருக்கு விரோதமாகக் குற்றம் செய்தோமோ, அவருடைய இருதயத்திலும், நமக்கு எதிராக இருக்கும் கோபமும் விரோதமும் குறையும். நம்முடைய குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடும்போது, நாம் மேலும் அதிகமாய் குற்றம் செய்யாதவாறு அது நம்மைத் தடைபண்ணும்.

விசுவாசிகள் சிலரிடத்தில் சில விநோதமான குறைகளும் பலவீனங்களும் இருக்கலாம். நம்முடைய பலவீனங்களை நமக்குள் இரகசியமாக அடைத்து வைக்கக்கூடாது. அதை கர்த்தருடைய சமுகத்தில் வெளிப்படுத்தவேண்டும். கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. நம்முடைய பலவீனங்களை கர்த்தரிடத்தில் சொல்லுவது போலவே, மற்ற சகோதரரிடத்திலும் சொல்லவேண்டும். அப்போது அவர்கள் நமக்காக ஜெபம்பண்ணுவார்கள். நாமும் அவர்களுக்காக ஜெபம்பண்ணுவோம். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. நம்முடைய குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டுவிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ண வேண்டும். ஜெபம்பண்ணவில்லையென்றால் நமக்கு ஆசீர்வாதம் இல்லை.

எலியா
யாக் 5 : 17,18

யாக் 5:17. எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

யாக் 5:18. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

ஜெபத்தினால் ஜெயமுண்டாகும். ஜெபம் இல்லையென்றால் ஜெயமில்லை. ஜெபமே நமக்கு ஜீவன். நம்முடைய கர்த்தர் ஜெபங்களுக்குப் பதில்கொடுக்கிறவர். நாம் வேண்டிக்கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமாக அவர் நம்மை ஆசீர்வதிக்கிறவர். நாம் ஜெபத்தின் மூலமாகவே தேவகிருபைகளைப் பெற்றுக்கொள்கிறோம். ஜெபிக்கிறவர்கள் நீதிமான்களாக இருக்கவேண்டும். நம்முடைய ஜெபம் பக்தியும், விசுவாசமும், பரிசுத்தமும் நிறைந்ததாயிருக்கவேண்டும். ஏனோதானோவென்று ஜெபிக்காமல் ஊக்கமாய் ஜெபிக்கவேண்டும்.

நாம் ஊக்கமாய் ஜெபிக்கும்போது நமக்கும் ஆசீர்வாதம் உண்டு. அதே வேளையில் நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களுக்கும் ஆசீர்வாதம் உண்டு. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. நம்முடைய ஜெபம் விசுவாசமுள்ள ஜெபமாகயிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எலியா என்பவர் நம்மைப்போல பாடுள்ள மனுஷராயிருந்தார். கர்த்தரிடத்தில் இவர் பக்தி வைராக்கியமுள்ளவர். நல்ல நீதிமான். ஆனாலும் இவரிடத்திலும் சில குறைகள் காணப்பட்டன. இவரும் நம்மைப்போல பாடுள்ள மனுஷராகவே இருந்தார். நாம் ஜெபிக்கும்போது நம்முடைய நீதியோ, பரிசுத்தமோ முக்கியத்துவம் பெறுவதில்லை. ஜெபத்தில் தேவனுடைய கிருபைக்கு மாத்திரமே முக்கியத்துவம் உண்டு. நம்முடைய சுயபக்தியையோ, சுயபுத்தியையோ நம்மால் ஜெபத்தில் பெருமைப்படுத்த முடியாது. தேவனுடைய கிருபையை தயவாய் வேண்டிக்கொண்டு, பயபக்தியோடு அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

எலியா கர்த்தருடைய சமுகத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணினார். நாம் ஒரு ஜெபத்தை மனப்பாடம்பண்ணி ஒப்பிப்பதினால் பிரயோஜனமில்லை. நாம் கர்த்தருடைய சமுகத்தில் கருத்தாய் ஜெபிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தை கர்த்தருடைய சமுகத்தில் ஊற்றவேண்டும். எலியா மழை பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம்பண்ணினார். கர்த்தர் எலியாவின் ஜெபத்தைக் கேட்டார். மழை பெய்யாதபடிக்கு வானத்தின் கதவுகளை அடைத்துப்போட்டார். எலியா மழை பெய்யாதபடிக்கு ஜெபம்பண்ணியபோது, மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியிலே மழை பெய்யவில்லை. கர்த்தர் எலியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார்.

எலியா தன்னுடைய ஜெபத்தை அத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை. முதலில் மழை பெய்யக்கூடாது என்று ஜெபம்பண்ணினார். அதன் பின்பு மழை பெய்யவேண்டுமென்று மறுபடியும் ஜெபம்பண்ணினார். கர்த்தர் இந்த ஜெபத்தையும் கேட்டார். மழை பெய்யுமாறு வானத்தின் கதவுகளைத் திறந்தார். அப்போது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது. இந்த சம்பவம் நம்மை ஜெபம் பண்ண உற்சாகப்படுத்துவதற்காக எழுதப்பட்டிருக்கிறது. எலியாவைப்போல நாமும் கருத்தாய் ஜெபம்பண்ணினால் கர்த்தர் நமக்கும் அநுக்கிரகம் பண்ணுவார். ஜெபம்பண்ணினால்தான் அற்புதம் நடைபெறும். ஜெபம் பண்ணினால்தான் தேவனுடைய கிருபையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஜெபமே ஆதாரமாயிருக்கிறது. நம்முடைய ஜெபம் விசுவாசமுள்ள ஜெபமாகயிருக்க வேண்டும்.

பாவியைத் திருப்புகிறவன்
யாக் 5 : 19,20

யாக் 5:19. சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால்,

யாக் 5:20. தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். அவர்களும் இரட்சிக்கப்படுவதற்கு நாம் கருவிகளாகப் பயன்படவேண்டும். ஒரு சிலர் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்காத புறஜாதியாராயிருப்பார்கள். இவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். இவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசத்தோடு அறிவிக்கவேண்டும்.

அவிசுவாசிகள் நரகத்திற்கு நராகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சொல்லி, அழிவுக்குப்போகிற பாதையிலிருந்து அவர்களைத் திருப்பி, கர்த்தருடைய சமுகத்திற்கு அழைத்து வரவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை இரட்சித்து, தம்முடைய காணியாட்சியில் அவர்களுக்கும் சுதந்தரம் கொடுப்பார்.

ஒரு சிலர் கர்த்தருடைய விசுவாசிகளாகயிருந்திருப்பார்கள். அதன் பின்பு கர்த்தரைவிட்டு விலகிப்போய் விடுவார்கள். விசுவாசத்தில் பின்வாங்கிப்போய்விடுவார்கள். ஒருவர் சத்தியத்தைவிட்டு விலகும்போது அவர் மோசம்போகிறார். பரலோகத்தின் பாதையை விட்டுவிட்டு நரகத்தின் பாதைக்குப் போகிறார். அவர் எப்படியும் போகட்டும் என்று நாம் அவரை விட்டுவிடக்கூடாது. அவரைக் குறித்து கரிசனையில்லாமல் இருக்கக்கூடாது. அவர் மோசம்போகும்போது, நாம் ஜெபத்தோடும் ஆத்தும பாரத்தோடும் அவரைத் திருப்பவேண்டும்.

தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவர், ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவார். ஒரு சிலருடைய பாவங்கள் பெரிதாகவும் அதிகமாகவும் இருக்கலாம். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நாம் பயப்படக்கூடாது. ஒரு சிலருடைய பாவங்கள் மிகவும் சிறியதாகயிருக்கலாம். அவர்களிடத்தில் சில பலவீனங்கள் காணப்படலாம். அவற்றையும் நாம் கண்டும் காணாதவர்கள் போல இருந்துவிடக்கூடாது. ஒரு பாவம் மற்றொரு பாவத்தைப் பிறப்பிக்கும். சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகிறவர்களிடம் நாம் ஞானத்தோடு பேசவேண்டும். அவர்களை மறுபடியும் சத்தியத்திற்குத் திரும்ப அழைத்துவரவேண்டும் என்பதே நம்முடைய நோக்கமாயிருக்கவேண்டும். அவரை நியாயந்தீர்த்து சபித்துவிடக்கூடாது.

தப்பிப்போன மார்க்கத்திலிருந்து நாம் ஒரு பாவியைத் திருப்பி வந்தாலும், அந்தப் பாவியை இரட்சிப்பது நம்முடைய கிரியையல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தம்முடைய கிருபையினால் பாவிகளை இரட்சிக்கிறவர். இரட்சிப்பு தேவனுடையது. இது தேவனுடைய கிரியை. அவருடைய கிருபை.

சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகிறவருக்கு ஒருவேளை நம்மால் உதவி செய்ய முடியாமல் போகலாம். அவரை மறுபடியும் சத்தியத்திற்கு திருப்பி அழைத்து வரமுடியாமலும் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் அந்த ஆத்துமாவுக்காக ஜெபம்பண்ண வேண்டும். தேவஆவியானவர் தம்முடைய இரட்சிக்கும் கிருபையினால் அந்த ஆத்துமாவை இரட்சிக்கவேண்டுமென்று நாம் கருத்தாய் ஜெபிக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்குப் பதில்கொடுப்பார். சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போன ஆத்துமாவை இரட்சிப்பார்.

ஒரு சிலர் தேவனுடைய சத்தியத்தைவிட்டு விலகிப்போகிறார்கள். வேறு சிலர் தேவனுடைய மார்க்கத்திலிருந்து தப்பிப்போகிறார்கள். இவர்கள் இருவருமே மோசம்போகிறார்கள். மரணத்திற்கு நேராகப் போகிறார்கள். நரகத்தில் பிரவேசிக்க வேகமாய்ப் போகிறார்கள். அவர்களோடு நாம் விவாதம்பண்ணுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. அவர்கள் மனந்திரும்பவேண்டும். தாங்கள் சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தேவனுடைய மார்க்கமே மெய்யான மார்க்கம் என்றும், தாங்கள் அந்த மார்க்கத்திலிருந்து தப்பி மோசம்போய்க்கொண்டிருக்கிறோம் என்றும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மனந்திரும்பவேண்டும். மனம் மாறவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பி வரவேண்டும். சத்தியத்தைவிட்டு விலகிப்போனவர்கள் திரும்பவும் சத்தியத்திற்கு வரவேண்டும். தேவனுடைய மார்க்கத்திலிருந்து தப்பிப்போனவர்கள் மறுபடியும் தேவனுடைய மார்க்கத்திற்கு திரும்பி வரவேண்டும். இதுவே மெய்யான மனந்திரும்புதல். இதுவே மெய்யான மனமாற்றம்.

பாவிகளை இரட்சிக்கும் ஊழியத்தில் கர்த்தர் நம்மையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். பாவிகளை இரட்சிப்பது கர்த்தருடைய கிருபை. நாம் அவருடைய கிருபையுள்ள கரத்தில் கருவிகளாகப் பயன்படுகிறோம். தப்பிப்போன மார்க்கத்திலிருந்து ஒரு பாவியைத் திருப்புகிறவர், ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவார். பாவியாயிருக்கிறவர் மனந்திரும்பும்போது அவருடைய இருதயமும் ஜீவியமும் இரட்சிக்கப்படுகிறது. அவருடைய திரளான பாவங்கள் மூடப்படுகிறது.

நம்முடைய பாவங்கள் ஏராளமாகவும், திரளான எண்ணிக்கையுள்ளதாகவும் இருக்கலாம். ஆனாலும் கர்த்தர் நம்முடைய திரளான பாவங்களை மூடுவார். நம்முடைய பாவங்களை மன்னிப்பார். நம்முடைய சுயமுயற்சியினால் நம்முடைய பாவங்களை நம்மால் மூடமுடியாது. பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ தேவனுடைய சமுகத்தில் இரக்கம் பெறுவான்.

ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படும் போது, அந்த ஆத்துமா மேலும் மேலும் பாவம் செய்யாதவாறு இரட்சிக்கப்படுகிறது. நாம் ஒரு பாவியை மனந்திரும்புமாறு வழிநடத்தும்போது, அந்த ஆத்துமா திரளான பாவங்களை செய்யாதவாறு தடுத்து நிறுத்தப்படுகிறது. அந்த ஆத்துமாவின் இரட்சிப்பு திரளான பாவங்களை மூடிப்போடுகிறது.